



Follow us

# தமிழன்

THAMILAN தමිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 448 பிலவ வருடம், தை மாதம் 25ஆம் திகதி திங்கட்கிழமை (07.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 05, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30





## கச்சதீவு திருவிழாவில் இந்திய பக்தர்களுக்கும் அனுமதி!

### தமிழக முதல்வரின் பிரதிநிதியிடம் அமைச்சர் டக்ளஸ் உறுதி

கச்சதீவு திருவிழாவில் இந்திய பக்தர்கள் கலந்துகொள்வதற்கு ஏற்பாடுசெய்யப்படும் என்று உறுதியளித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, திருவிழாவில் கலந்துகொள்ளும் இலங்கை – இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு இடையில கலந்துரையாடலை நடத்தி, இரண்டு நாட்டு கடற்றொழிலாளர்களினதும் எதிர்காலத்திற்கான ஆரோக்கியமான சூழலை உருவாக்குவது... 02 பக்கம்

# சுகாதாரத்துறையில் தொடர் 'ஸ்ட்ரைக்'!

## சம்பள முரண்பாடு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இன்று ஆரம்பம்

யோ.தர்மராஜ்

சம்பள முரண்பாடு உள்ளிட்ட தங்களுடைய கோரிக்கைகளுக்கு சுகாதார அமைச்சினால் உரிய தீர்வு வழங்கப்படாதமையினால் இன்றுமுதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

அதற்கமைய, இலங்கை தாதியர் சங்கம், சுகாதார தொழில் வல்லுனர்கள் சங்கம், நிறைவுகாண் வைத்திய சேவை சங்கம் மற்றும் இடைநிலை வைத்தியர்கள் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் இந்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

இந்த போராட்டம் முன்னெடுப்பது தொடர்பாக சுகாதார தொழில் வல்லுனர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் கூறுகையில்,

சம்பள முரண்பாடு உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து 10 நாட்களுக்கு மேலாக போராட்டங்கள் நடத்தியபோதிலும் எங்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பதிலை சுகாதார... 02 பக்கம்

# மறைந்தது இசைக் குயில்...



14 பக்கம்

## உத்தியோகபூர்வ இல்லங்களில் வசிக்கும் முன்னாள் எம்.பிக்களுக்கு தண்டப்பணம்

கால அவகாசம் நிறைவடைந்த பின்னரும் உத்தியோகபூர்வ இல்லங்களில் தொடர்ந்து வசிப்பதால், அதற்காக செலுத்தவேண்டிய தண்டப்பணத்தை விரைவில் செலுத்துமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 08 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த தேர்தல் காலத்தின்போது தோல்வியடைந்த போதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து குறித்த... 02 பக்கம்

## நெருக்கடிகளுக்கு தீர்வுகாண சர்வகட்சி மாநாட்டை நடத்த சுதந்திரக் கட்சி கோரிக்கை


ශ්‍රී ලංකා නිදහස් පක්ෂය
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி
SRI LANKA FREEDOM PARTY

02 பக்கம்



கரண்ட் வெட்டமாட்டம் எண்டு சொன்னால் வெட்டப்போறாங்கள் என்று அர்த்தம்...

## நாடாளுமன்றத்திற்குள் கொரோனா; சபை அமர்வு குறித்து இன்று தீர்மானம்



கொவிட் - 19 தொற்றுக்குள்ளான எம்.பிக்கள் மற்றும் நாடாளுமன்ற ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், இவ்வாரம் நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வுகள் குறித்து முடிவெடுக்க இன்று பிற்பகல் 3 மணிக்கு நாடாளுமன்ற அலுவல்கள் குழு கூடவுள்ளது.

நாடாளுமன்றம் நாளை பெப்ரவரி 8ஆம் திகதி முதல் 11ஆம் திகதிவரை நான்கு நாட்களுக்கு கூடுவதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஜனவரி மாதத்தின் கடைசி அமர்வு வாரத்தில் இருந்து கொவிட் நோயால் பாதிக்கப்பட்ட எம்.பிக்கள் மற்றும் நாடாளுமன்ற ஊழியர்களின்.... 02 பக்கம்

## பொருளாதாரத்தை சமாளிக்க மேலும் இரு நாடுகளிடம் கடன் கோரும் இலங்கை

02 பக்கம்

## இந்தியாவில் இறங்கினார் ஜீ.எல்.பீரிஸ்; அரச உயர்மட்டத்துடன் முக்கிய பேச்சு



இந்தியாவுக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணத்தை ஆரம்பித்த வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று புதுடில்லியை சென்றடைந்தார்.

இருநாட்டு உறவைப் பலப்படுத்தல் மற்றும் வர்த்தக உறவுகள் குறித்த சந்திப்புகளுக்காகவே அவர் இந்தியாவுக்கு பயணம் செய்துள்ளார். 02 பக்கம்



## கூண்டில் அடைக்கப்பட்ட குஞ்சை கூட்டமாக வந்து மீட்ட கிளிகள்

### ஜா-எலவில் நெகிழ்ச்சி சம்பவம்

கூண்டில் அடைக்கப்பட்டிருந்த கிளிக் குஞ்சொன்றை, கிளிகள் இணைந்து கூண்டின் கம்பிகளை கடித்து விலக்கி தப்பவைத்த நிகழ்வொன்று ஜா - எல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 02 பக்கம்

## மின் துண்டிப்பு தொடர்பில் இன்று முக்கிய தீர்மானம்

### பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

02 பக்கம்

## க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் இன்று

இந்த வருடத்திற்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸார், முப்படையினர் மற்றும் சுகாதார திணைக்களம் ஆகியன முன்னெடுத்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளார். இன்று முதல் அடுத்த மாதம் 5ஆம் திகதிவரை பரீட்சைகள் நடைபெறவுள்ளன. 02 பக்கம்




சம்பிக்கவுக்கும் சஜித் பிரேமதாஸவுக்குமிடையிலான முறுகல் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதாக தகவல்.

இதனால் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலர் சம்பிக்கவுடன் இணையவுள்ளனர்.

அண்மைக்காலமாக சரத் பொன்சேகா சஜித் மீது வசைபாடுவதும் இதனால்தான் என்கின்றனர் விடயம் தெரிந்தவர்கள்.

## அத்தியாவசிய பொருட்களடங்கிய 2000 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேக்கம்

### டொலர் நெருக்கடியின் விளைவு

நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் சாத்தியம் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டொலர் பற்றாக்குறையால் குறித்த இக்கட்டான நிலை ஏற்படலாம் என குறிப்பிடப்படுகின்றது.

துறைமுகத்தில், 500 அரிசி கொள்கலன்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய இரண்டாயிரம் கொள்கலன்கள் டொலர் நெருக்கடியின் காரணமாக சிக்கியுள்ளதாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர். குறித்த கொள்கலன்களில் சீனி, உருளைக்கிழங்கு, பருப்பு, மிளகாய் மற்றும் வெங்காயம் ஆகிய அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் இருக்கின்றன.

இந்த கொள்கலன்களை, விடுவிக்க முடியாமல்போனால் சந்தையில் அத்தியாவசிய பொருட்களுக்கு பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்றும் இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## சடலமாக மீட்கப்பட்ட மாலைதீவு மாணவன்

### வெள்ளவத்தையில் மர்மம் துலங்கியது



வெள்ளவத்தை கடற்கரையில் நேற்று முன்தினம் மீட்கப்பட்ட இரண்டு சடலங்களில் ஒரு சடலம் தொடர்பில் மேலதிக தகவல் வெளியாகியுள்ளது. குறித்த சடலம், காணாமல் போன மாலைதீவைச் சேர்ந்தவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 02 பக்கம்




# வடகொரிய ஜனாதிபதியை போன்று செயற்படும் கோட்டா!

## அலவத்துவல எம்.பி. தெரிவிப்பு

**யோ.தர்மராஜ்**

எரிபொருள் இல்லாது மின் உற்பத்திகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் சுதந்திர தினத்தில் வாகனப் பேரணிகளை நடத்தி, நாட்டில் மக்கள் பட்டினியில் இருக்கும்போது, இராணுவ கொண்டாட்டங்களை முன்னெடுத்த வடகொரிய ஜனாதிபதியைபோன்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் செயற்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து நேற்று (06) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கம் அனைத்து விடயங்களிலும் நாட்டுமக்களை ஏமாற்றுவது மட்டுமல்லாது, அவர்கள் தொடர்பாக சிந்திப்பதும் கிடையாது. கொரோனா தொற்றினால் இரு வருடங்களுக்கு மேலாக பாடசாலை மாணவர்களுக்கு கல்வி செயற்பாடுகள் தடைப்பட்டிருந்தன. எனினும், கற்றல் செயற்பாடுகளை இந்த அரசாங்கத்தினால் திறம்பட செயற்படுத்த முடியாதுபோனது. அதேபோன்று, ஆசிரியர்களுக்கு உரிய தீர்வு வழங்காதமையினால் இரண்டு, மூன்று மாதங்கள் போராட்டத்தில் ஈடுபடவைத்தனர்.

இதனால், பாடசாலை மாணவர்கள் பெரும் பாதிப்புகளை சந்தித்துள்ளனர். பெரும் சிரமத்திற்கு மத்தியில் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராகும்போது, இன்று மின்சாரத்தை துண்டிக்கின்றனர். இவ்வாறான நிலையில் அவர்கள் எவ்வாறு கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பர். மக்களை தொடர்ந்தும் துன்பத்துக்கு தள்ளும் அரசாங்கமாக இந்த அரசாங்கம் மாறியுள்ளது.

உரப்பிரச்சினையால் விளைச்சல் வீழ்ச்சியடையும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம். அதற்கமைய, இன்று 60 வீத விளைச்சல் குறைவடைந்துள்ளது. இலங்கையானது அரிசியில் தன்னிறைவு அடைந்திருந்தது. ஆனால், அரசாங்கத்தின் பொறுப்பற்ற தீர்மானத்தால் நாட்டில் டொலர் தட்டுப்பாடிருந்தாலும் சீனா, இந்தியா, பாகிஸ்தான், மியன்மார் ஆகிய நாடுகளிலிலிருந்து அரிசியை இறக்குமதிசெய்ய வேண்டியுள்ளது. ராஜபக்ஷக்கள் ஆட்சிக்கு வந்து வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதிசெய்து உண்ணும் யுகத்தை உருவாக்கியுள்ளனர்.

இதேவேளை, எரிபொருள் இல்லாது மின் உற்பத்திகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், பல நாட்களாக பயிற்சியளித்து, எரிபொருளை வீணடித்து வடகொரிய ஜனாதிபதியை போன்று, சுதந்திர தினத்தை கொண்டாடுகின்றனர். நாட்டில் மக்கள் பட்டினியில் இருக்கும்போது, இராணுவ கொண்டாட்டங்களை முன்னெடுத்த வடகொரிய ஜனாதிபதியை போன்றே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் செயற்படுகின்றார். எனவே, மக்களைப் பற்றி சிந்திக்காது, மக்களை வாழவைக்க முடியாவிட்டால் அரசாங்கம் வீட்டுக்குச்செல்ல வேண்டும் - என்றார்.

# எரிபொருள் விலையை அதிகரித்தது ஐஓசி

நாட்டில் எரிபொருளின் விலையை அதிகரிப்பதற்கு இந்தியன் ஓயில் கம்பனி (ஐஓசி) தீர்மானித்துள்ளது. அதனடிப்படையில் டீசல் லீற்றர் ஒன்றின் விலை மூன்று ரூபாவாலும் ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை ஏழு ரூபாவாலும் நேற்று (06) நள்ளிரவுமுதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் ஒக்டேன் 92 ரக பெற்றோல் 177 ரூபாவிலிருந்து 184 ரூபாவாகவும், டீசல் 121 ரூபாவிலிருந்து 124 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள்...

இந்த ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 2,438 நிலையங்களில் மொத்தம் 3 இலட்சத்து 45ஆயிரத்து 242 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

கொரோனா தொற்றுக்குள்ளான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்களுக்காக 29 சிறப்பு மையங்களில் பரீட்சை நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழன் தமிழன் ஜூனியர்

கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்கலாம்
அழையுங்கள்
0761393805

தற்போது விற்பனையில்




விலை ரூ.40/=
தொடர்புகளுக்கு : 0777 983308 - விநியோகப்பிரிவு

### சடலமாக மீட்கப்பட்ட...

தெஹிவளையில் வசித்து வந்த 24 வயதுடைய இளைஞன் கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணாமல் போயுள்ளதாக மாலைதீவு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இந்நிலையில் வெள்ளவத்தை பகுதியில் கண்டெடுக்கப்பட்ட இரு சடலங்களில் ஒன்று மாலைதீவு பிரஜையுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது. தனிப்பட்ட குரோதம் காரணமாக இந்த கொலைகள் நடந்திருக்கலாமா என்பது பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மற்றைய சடலத்தை இதுவரை பொலிஸார் அடையாளம் காணாத நிலையில், இது தொடர்பான விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

### கச்சதீவு திருவிழாவில்...

தொடர்பாகவும் பிரஸ்தாபித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கச்சதீவு திருவிழாவில் இந்தியாவில் இருந்து பக்தர்கள் கலந்துகொள்வதற்கு கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அனுமதி வழங்குவதில்லை என்று ஏற்பாடு குழு முன்னதாக தீர்மானித்திருந்தது. இந்நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் ஆலோசனையின்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசியில் உரையாடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்படி விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### மின் துண்டிப்பு...

மின்சாரத்தைத் துண்டிப்பது தொடர்பில் இன்று தீர்மானிக்கப்படும் என பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில்,

உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தின் அளவுக்கேற்ப பரிந்துரைகள் முன்வைக்கப்படும். இதற்கமைய தரவுகள் சேகரிக்கப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

மின்னுற்பத்தி தேவையான மூலப் பொருட்களின் அளவு, மின்சாரத்திற்கான தேவை மற்றும் விநியோகம் என்பவற்றின் அளவுகள் கவனத்தில் கொள்ளப்படும்.

இதற்கமையவே மின்சாரத்தைத் துண்டிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும். சுமார் 2, 750 மெகாவோட் மின்சார தேவை காணப்படுமாயின் மின்சாரத்தைத் துண்டிக்க நேரிடும்.

தற்போது அந்த அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

### உத்தியோகபூர்வ...

08 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதுவரை வெளியேறவில்லை என நாடாளுமன்ற நிர்வாகம் தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேறும் வரை செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தையும் இவர்கள் இதுவரை செலுத்தவில்லை என நாடாளுமன்ற நிர்வாகம் கூறியுள்ளது.

அவைதவிர, நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களையும் உடனடியாக செலுத்துமாறு நாடாளுமன்றத்தினால் இரண்டாவது தடவையாகவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற நிர்வாகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த அறிவுறுத்தல்கள் புறக்கணிக்கப்பட்டால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 08 பேருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தியோகபூர்வ இல்லங் களில் வசிப்பதற்கான கால எல்லை நிறை வடைந்த பின்னரும் அனுமதியின்றி தங்குபவர்களிடமிருந்து நாளொன்றுக்கு 500 ரூபா வீதம் தண்டப்பணம் அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சுகாதாரத்துறையில்...

அமைச்சு வழங்கவில்லை. இதனால், நிறைவுகாண் வைத்திய சேவை சங்கம் உள்ளிட்ட இடைநிலை வைத்திய சேவை சங்கத்தையும் தாதியர் சங்கத்தையும் இணைத்துக்கொண்டு சுகாதார தொழில் வல்லுனர்கள் சங்கம் இன்று (07) திங்கட்கிழமை காலை 7 மணி முதல் நாடளாவிய ரீதியில் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

இந்த போராட்டத்திற்கு நிறைவுகாண் வைத்திய சேவை சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் ஆய்வுகூட அதிகாரிகள், மருத்துவர்கள், ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் என அனைவரும் கலந்துகொள்ளவுள்ளதுடன், இடைநிலை வைத்திய சேவை சங்கத்தினரும் தாதியர் சங்கத்தினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் எங்களுடைய கோரிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சின் செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். எனினும், எங்களுடைய கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை வழங்குவதற்கு சுகாதார அமைச்சின் செயலாளர் தவறியதனால் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம் - என்றார்.

இந்த விடயம் குறித்து இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய கூறுகையில்,

சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார அதிகாரிகளின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் தற்போது கொரோனா தொற்று தீவிரமடைந்துள்ளது. கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் செயற்பட்டுள்ளதா என்பது எங்களுக்கு பெரும் கேள்வியாகவேயுள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் சேவையாற்றுவோர் கொரோனா தொற்றுக்குள்ளாகுவது அதிகரித்துள்ளது. தேசிய வைத்தியசாலையில் 150இற்கும் மேற்பட்ட தாதியர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அதேபோன்று, மாளிகாவத்தை வைத்தியசாலையில் 20க்கும் மேற்பட்ட தாதியர்கள் கொரோனா தொற்றுக் குள்ளாகியுள்ளனர். எனினும், கொரோனா தொற்றை கட்டுப்படுத் துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக எங்களுக்கு தெரியவில்லை. கொரோனா தொற்று தீவிரமடையும்போது, அதனை கண்டறிவதற்கு பி.சி.ஆர் மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டும். ஆனால், கடந்த வாரத்தில் தேசிய, ராகம மற்றும் களுபோவில ஆகிய வைத்தியசாலைகளில் அன்ரிஜன் பரிசோதனைகள் முன்னெடுப்பது நிறுத்தப்பட்டது. இவ்வாறான நிலைமையில் கொரோனா தொற்று பரவுவதை தடுக்கவே முடியாது. - என்றார்.

### பொருளாதாரத்தை சமாளிக்க....

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு காலப் பகுதிக்கு தேவையான அத்தியாவசிய உணவுப்பொருட்கள் உள்ளிட்டவற்றை இறக்குமதி செய்வதற்காக இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிடம் கடன் உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன இது தொடர்பான அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய இந்தியாவிடம் இருந்து ஒரு பில்லியன் அமெரிக்க டொலரையும் அவுஸ்திரேலியாவிடம் இருந்து 200 மில்லியன் டொலரையும் கடனாக பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரிசி, பருப்பு மற்றும் மருந்து உட்பட அத்தியாவசிய பொருட்களை இந்த கடன் உதவிகளின்கீழ் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் குறித்த இறக்குமதிகள் 6 மாதங்களுக்கு போதுமானதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. இந்தியாவின் கடன் உதவியின் கீழ் கிழங்கு, வெங்காயம், பருப்பு மற்றும் மருந்துப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. இந்தக் கடன் உதவிகளை தவணை அடிப்படையில் மீளச் செலுத்துவதற்கு வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன் அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பருப்பினை பதப்படுத்துவதற்கான தொழிற்சாலை ஒன்றினை நிர்மாணிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த தொழிற்சாலையை கொழும்பு அல்லது ஹம்பாந்தோட்டை துறைமுகத்தினை அண்மித்து நிர்மாணிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

இதுவரையில் அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதிசெய்யப்படும் பருப்பு வகைகள் இலங்கை போன்ற நாடுகளுக்கு விநியோகிக்கப்படுவதற்கு முன்னர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் பதப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### நெருக்கடிகளுக்கு...

உள்ளூராட்சி சபைத் தேர்தலை தொடர்ந்தும் தாமதிக்காது நடத்துவது சம்பந்தமாக கலந்துரையாடவும் நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களுக்கு தீர்வு காணவும் சர்வ கட்சி மாநாட்டை நடத்துமாறு அரசாங்கத்தின் பிரதான கூட்டணிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை செயற்குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது 15 தீர்மானங்களை அகில இலங்கை செயற்குழு நிறைவேற்றியுள்ளது. மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்துவதற்காக தாமதமின்றி உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பது அதில் ஒரு தீர்மானமாகும்.

அரசியல் பேதங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல்களை ஒதுக்கி வைத்து விட்டு, சர்வக்கட்சி மாநாட்டை நடத்தி நாடு எதிர்நோக்கியுள்ள பல்வேறு நெருக்கடிகள் சம்பந்தமாக கலந்துரையாடி அவற்றை முகாமைத்துவம் செய்வது குறித்து கவனம் செலுத்தவேண்டும்.

அதற்காக அனைத்து கட்சிகளும் அடங்கிய குழுவை நியமிக்க வேண்டும். இந்த குழு ஒரு கால வரையறைக்குள் செயற்பட்டு, நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு குறுகிய மற்றும் மத்திய கால தீர்வுகளை உருவாக்க வேண்டும் எனவும் சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை செயற்குழு கோரியுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு கொவிட்-19 தொற்று காரணம் அல்ல. இதனால், பொருளாதார நெருக்கடிக்கு உடனடியாக தீர்வுகாண வேண்டும் என்பது சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு.

சட்டத்தின் ஆளுமை தொடர்பில் மக்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்கவும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் இலங்கையின் மதிப்பை அதிகரிக்கவும் நாட்டின் பல பிரதேசங் களில் நடக்கும் ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் சுதந்திரக் கட்சி யோசனை முன்வைத்துள்ளது.

### நாடாளுமன்றத்திற்குள்....

எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்ற அமர்வின் தினங்கள் குறைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனவரி 18ஆம் திகதி ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வின் சம்பிரதாயபூர்வ அமர்வில் இருந்து 50 முதல் 60 நாடாளுமன்ற ஊழியர்கள் மற்றும் 14 எம்.பிக்கள் கோவிட்-19 க்கு அன்ரிஜன் சோதனை செய்துள்ளனர். காலிக்கு சுற்றுலா சென்றிருந்த சுமார் 40 உணவக ஊழியர்களில் 20 பேர் அன்ரிஜன் சோதனை செய்ததையடுத்து, நாடாளுமன்ற உணவு வழங்கல் பிரிவில் சமீபத்தில் ஒரு மினி கொத்தணி தோன்றியது.

சோதனை முடிவுகள் வந்த பிறகு பாதிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் அவர்களின் தொடர்புகளை விரைவாக தனிமைப்படுத்தியதன் மூலம் இந்த கொத்தணி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துடன் இணைக்கப்பட்ட ஐந்து பொலிஸ் அதிகாரிகளும் சமீபத்திய நாட்களில் அன்ரிஜன் சோதனை செய்துள்ளனர்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை (08) நாடாளுமன்ற வளாகத்தில் விரைவான அன்ரிஜன் சோதனைகள் நடத்தப்படவுள்ளன.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்னும் கொவிட்-19 நோயிலிருந்து குணமடையவில்லை. அவரது நிலைமையை பரிசோதிப்பதற்காக இன்று பி.சி.ஆர் பரிசோதனை நடைபெறவுள்ளதால், இன்று நடக்கும் நாடாளுமன்ற அலுவல்கள் குழுக் கூட்டத்தில் பங்கேற்க மாட்டார்.

இன்றைய பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று இல்லையென்பது உறுதியானால், நாளை செவ்வாய்க்கிழமை முதல் கூட்டத் தொடரில் அவர் தலைமை தாங்குவார் என சபாநாயகர் தெரிவித்தார்.

சபாநாயகர் இல்லாத நிலையில், பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் இன்று அலுவல் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

### இந்தியாவில் இறங்கினார்...

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை சந்திக்கவுள்ள அவர், இருதரப்பு வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆராயவுள்ளார். அத்துடன் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலையும் பீரிஸ் சந்திக்கவுள்ளார். இந்தியாவினால் இலங்கைக்கு 400 மில்லியன் டொலர்கள் நாணய பரிமாற்ற உதவி மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான 500 மில்லியன் டொலர்கள் உதவி என்பவற்றுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள நிலையிலேயே இலங்கை வெளியுறவு அமைச்சரின் இந்தியப் பயணம் அமைந்துள்ளது. இரண்டு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் ஏற்கனவே கடந்த செப்டெம்பரில் நியூயோர்க்கில் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர்.

இதனையடுத்து இலங்கையின் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ, கடந்த டிசம்பரில் இந்தியாவுக்கு சென்று திரும்பினார்.

இதேவேளை இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவாலை, இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட கடந்த வியாழக்கிழமையன்று சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

அத்துடன் இந்தியாவினால் இலங்கைக்கு ஒரு இலட்சம் அன்ரிஜன் சோதனை தொகுதிகள் கடந்த வெள்ளிக்கிழமை, வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையின் டொலர் பிரச்சினையை சமாளிப்பதற்காக இந்தியா 2.415 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கூண்டில் அடைக்கப்பட்ட...

ஜா-எல, படகம பிரதேசத்தில் சில மாதங்களுக்கு முன்னர் குறித்த கிளிக் குஞ்சொன்று வயலில் விழுந்திருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அந்தக் கிளியை மீட்ட அந்த பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் கூட்டில் அடைத்துள்ளார். அதனை தொடர்ந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்த கூண்டின் அருகில் கிளிக் கூட்டம் தொடர்ச்சியாக வருகைத் தந்துவிட்டு திரும்பிச் சென்றுள்ளன.

இந்நிலையில், கடந்த 4ஆம் திகதி வந்த குறித்த கிளிக் கூட்டம் தனது சொண்டைப் பயன்படுத்தி அந்த கூண்டின் கம்பிகளை விலக்கி குறித்த கிளிக் குஞ்சை மீண்டும் மீட்டுச்சென்றுள்ளன.

கடந்த சுதந்திர தினத்தன்று இந்த சம்பவம் இடம்பெற்றமை விசேட அம்சமென அந்த பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த கிளியை கூண்டில் அடைத்த நபரின் மகளான சத்துரிக்கா பெரேரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“இந்த சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று காலை 7.00 மணியிலிருந்து ஒரு கிளி குறித்த கிளிக் குஞ்சு அடைக்கப்பட்டிருந்த கூண்டுக்கு அருகில் வந்து கம்பிகளை கடித்து அகற்ற முயன்றது. இது வீட்டிலுள்ள சகலருக்கும் விநோதமாகவும், நகைச்சுவையாகவும் இருந்தது.

ஆனால், யாரும் எதிர்பார்க்காத நிலையில் அன்று 1 மணியளவில் 20 வரையிலான கிளிகள், கூண்டை முற்றுகையிட்டன. அந்த கிளிகள் ஒன்றுக்கு ஒன்று உதவியைப் பெற்றுக் கூண்டிலிருந்த கம்பிகளை நீக்கிவிட்டு கிளிக் குஞ்சை அழைத்துச்சென்றன. இதன்போது அந்த கிளிகளின் செயற்பாடுகள் நாம் அச்சம் கொள்ளும் அளவுக்கு, வன்மையாக இருந்தது” என்று குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்

**07.02.2022 புதன்கிழமை தை 25**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: அசுவினி** மாலை 6.59 வரை

**பரணி** மாலை 6.59 - 08.02. 2022 இரவு 9.27 வரை

**யோகம்: சுபம்** மாலை 4.44 வரை

**சுப்ரம்** மாலை 4.44 - 08.02. 2022 மாலை 5.06 வரை

**திதி: பூர்வ பட்ச ஸப்தமி** அ.கா4.37-08.02.2022 காலை 6.15 வரை

**முற்கரணம்: கரஜம்** அ.கா 4.37 - மாலை 5.21

**பிற்கரணம்: வணிஜம்** மாலை 5.21 - 08.02. 2022 காலை 6.15 வரை

**சுப நேரங்கள்**
காலை 6.29 - 7.57
மாலை 4.52 - 6.21

**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
காலை 7.58 - 9.27

**குளிகை காலம்**
பிற்பகல் 1.54 - 3.23

**எமகண்ட காலம்**
காலை 10.56 - பி.ப 12.25

**துர் முகூர்த்தம்**
பிற்பகல் 12.49 - 1.36
மாலை 3.11 - 3.58

**மேஷம்:** பங்குதாரர்கள் சம்பந்தப்பட்ட தொழிலில் சிறிய கவனம் தேவைப்படலாம். சில பிரச்சினைகள் நீங்க துவங்கலாம். பெற்றோர் உதவியால் சிலருக்கு நிதி சிக்கல் நீங்கலாம். வாழ்க்கைத்துணையுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் கவனமாக இருப்பது நன்மை.

**ரிஷபம்:** வாகனம் செலுத்துவதில் சிறிய கவனம் தேவைப்படலாம். இன்று புதிய வேலைகள் துவங்க சாதகமான நாள் இல்லை. சில உயர்நிலையில் இருப்பவர்களின் சந்திப்பில் பதற்றம் மற்றும் அவநம்பிக்கை தவிர்ப்பது நல்லது. இறைவணக்கம் நன்மை.

**மிதுனம்:** பணிகளில் உயர் பதவி கிடைக்கலாம். வணிக இலாபம் மேம்படும். இளம் வயதினரின் தொழில் பிரச்சினை நீங்கலாம். புதிய முதலீடுகளில் அவசரம் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளால் சுப செய்திகள் கிடைக்கப் பெறலாம்.

**கடகம்:** வேலைத்தளத்தில் பணி முறை மாற்றம் செய்யப்படலாம். சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் முரண்பாடுகள் நீங்கலாம். சில பரிசுகள் கிடைக்கலாம். பணியில் மேலதிகாரிகளுடன் சிறந்த நட்புறவு உண்டாகலாம்.

**சிம்மம்:** உங்களுடன் செல்வாக்கு மிக்கவர்களின் நட்பு மேம்படும். நீண்டகால ஏற்றத் தாழ்வு சூழ்நிலை சீராகும். அண்மைக்கால தொழில்நுட்பத் திறன்களின் கற்கைகளும் பலன் தரும். உங்கள் நகைச்சுவையான இயல்பால் சமூகத்தில் பிரபல நிலை உருவாகலாம்.

**கன்னி:** சில செலவுகள் அதிகரிக்கலாம். வாயு பிரச்சினைகள் சிறியளவில் ஏற்படலாம். சில பிரச்சினைகள் தீவிரமடைந்தாலும், இறையருளால் பனியாக கரைய பெறலாம். அன்றாட வழக்கங்கள் ஒழுங்கு பெறாமல் இருக்கலாம். இறைவணக்கம் தேவை.
**சந்திராஷ்டமம்: உத்தரம் நட்சத்திரம் பாதம் 2/3/4க்கு பிற்பகல் 12.27 வரை அத்தம் நட்சத்திரத்திற்கு பி.ப 12.27 - 08.02.2022 பிற்பகல் 2.47 வரை**

**துலாம்:** பிள்ளைகளின் முன்னேற்றங்களில் மகிழ்ச்சி உண்டாகலாம். தொழில் பயணம் ஏற்படலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் வருவாய் கிடைக்கலாம். திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பும், கடின உழைப்பின் பலனும் கிடைக்கப் பெறலாம். தம்பதியரிடையே அன்பு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** பணிகளில் பதவி உயர்வு கிடைக்கலாம். வங்கி பரிவர்த்தனைகளில் சிறிய கவனம் தேவைப்படலாம். சில விருப்பங்கள் நிறைவேறலாம். அன்புக்குரியவர்களின் பரிசு கிடைக்கலாம். ஏழைகளுக்கு உதவுவது இறை ஆசி உண்டாகும்.

**தனுசு:** குடும்பத்தினரின் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதில் மகிழ்ச்சி மேலோங்கலாம். அரசியல் சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல நாளாக அமையலாம். தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சாதகமான நாளாக அமையலாம். நண்பர்களுடனும் மகிழ்ச்சியான நாளாக அமையலாம்.

**மகரம்:** அழகு சாதன மேம்பாடு அல்லது ஆடம்பர செலவுகளை இன்று தவிர்ப்பது நல்லது. உங்களுடன் நெருக்கமானவர்கள் சிலரின் மனதிலும் இன்று சிறிய விரோதம் ஏற்படலாம். புதிய முதலீட்டுக்கான முடிவுகளை நன்கு ஆராய்ந்து செய்வதும் நல்லது. பணிகளில் சக ஊழியர்களிடம் உங்கள் மீது அதிருப்தி உண்டாகலாம்.

**கும்பம்:** சில சாதனைகளுக்கான வெகுமதி கிடைக்கலாம். காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம். வணிக விற்பனை மேம்படும். நம்பிக்கை அதிகரிக்கும். எதிர்கால விடயங்களில் நன்மைக்கான நுண்ணறிவு வழங்குபவர்களின் தொடர்பை பேணுவது நன்மை.

**மீனம்:** பிறரின் வேலைகளில் உங்கள் கருத்தை தவிர்ப்பது நல்லது. சில சுயநலவாதிகளிடம் கவனம் தேவைப்படலாம். உங்கள் விசுவாசம் மற்றும் பணித்திறனுக்கு அங்கீகாரம் கிடைக்க பெறலாம். விதிகளை பின்பற்றுவதில் கவனம் தேவைப்படலாம். இல்லத்தில் சிறிய மன பிரச்சினைகள் உண்டாகலாம். உடல் நலத்திலும் கவனம் தேவைப்படலாம்.

# 998 ரூபாவுக்கு புதிய நிவாரணப் பொதி சதொச நிறுவனத்தால் அறிமுகம்

## அமைச்சர் பந்துல குணவர்தன அறிவிப்பு

லங்கா சதொச நிறுவனம் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய புதிய நிவாரணப் பொதியொன்றை 998 ரூபாவுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

அந்த நிவாரணப் பொதியில் 5 கிலோ கிராம் நாட்டரசி, 400 கிராம் நூடில்ஸ், 100 கிராம் நெத்தலி கருவாடு, 100 கிராம் தேயிலை மற்றும் 100 கிராம் மஞ்சள் தூள் உள்ளடங்குவதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும், ஏனைய வர்த்தக நிலையங்கள் மூன்றில் இந்த நிவாரணப் பொதியை பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக, நுகர்வோருக்கு இதனூடாக 1072 ரூபா, 1084 ரூபா அல்லது 531 ரூபா இலாபத்தை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சதொச விற்பனை நிலையம் இல்லாத பிரதேசங்களிலுள்ள மக்கள் 1998 என்ற துரித இலக்கத்துக்கு அழைக்க முடியும் என்பதுடன், 48 மணிநேரத்தில் வீட்டுக்கே இந்த நிவாரணப் பொதி விநியோகிக்க முடியுமென தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன, விநியோக கட்டணமாக



200 ரூபா அறவிடப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.


# அமைச்சர்களான சி.பீ., சன்ன ஆகியோருடன் தேரர்கள் இணைந்து குருந்தூர்மலையில் பிரித் ஓதல்






## தமிழ்த் தரப்பினரது எதிர்ப்பின் பின் மறுநாள் விஜயம்













**(வன்னி செய்தியாளர்)**

தொல்லியல் அகழ்வு இடம்பெற்று விகாரை அமைக்கப்பட்டுவரும் முல்லைத்தீவு குமுளமுனை தண்ணிமுறிப்பு குருந்தூர் மலைக்கு நேற்று முன்தினம் இரவு (05) வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பீ. ரத்நாயக்க மற்றும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜனசுமன ஆகியோர் 40இற்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகளுடன் இணைந்து திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

முன்னதாக சுதந்திர தின நாளான கடந்த 04ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் ஸ்ரீதரன், இரா.சாணக்கியன் உள்ளிட்டோர் சுதந்திர தின நாளுக்கு எதிர்ப்பை வெளியிடும் முகமாக தமிழ் மக்களின் வாழ்விட உரிமை மறுக்கப்பட்டுவரும் பௌத்த மயமாக்கல் இடம்பெற்றுவரும் குருந்தூர்மலைக்கு விஜயம் செய்து வழிபாடுகளை மேற்கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்த நிலையில் அதற்கு மறுநாளான நேற்று (05 ) அமைச்சர்களின் இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது.

கெப்பத்திகொல்லாவ, மணலாறு, அரிசிமலை பகுதிகளைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் 40 பேருக்கும் மேற்பட்டவர்கள் இணைந்து அமைச்சர்களோடு குருந்தூர் மலையில் நேற்று முன்தினம் இரவு 07 மணி தொடக்கம் நள்ளிரவுவரை பிரித் ஓதி வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளதாக அறியமுடிகிறது.

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு வட்டுவாகலில் மக்களின் 617 ஏக்கர் காணிகளை அபகரித்து அமைக்கப்பட்டுள்ள கோட்டாபய கடற்படை முகாமில் இரவு தங்கிய இரண்டு அமைச்சர்களும் நேற்றுக் காலை புறப்பட்டுச் சென்றுள்ளதாகவும் அறிய முடிகிறது.

# ஊர்காவற்றுறையில் மாடுகள் களவாடப்பட்டு வெட்டப்பட்டன

## உரிமையாளர்களால் பொலிஸில் முறைப்பாடு

**(யாழ். செய்தியாளர்)**

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சரவணை மற்றும் வேலணை பகுதியில் நான்கு மாடுகள் களவாடப்பட்டு இனந்தெரியாத மர்மநபர்களால் இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலைவேளையில் சரவணை பகுதியில் ஒரு மாடும், வேலணை பகுதியில் மூன்று மாடுகளுமே இவ்வாறு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளன.

கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவையில் கட்டப்பட்டிருந்த மாடுகளை அவிழ்த்துச்சென்ற இனந்தெரியாத மர்மநபர்கள் இறைச்சிக்காக வெட்டிவிட்டு கழிவுகளை பற்றைக்குள் வீசிவிட்டுச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக மாடுகளின் உரிமையாளர்களால் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

தீவகப் பகுதிகளில் தொடர்ச்சியாக வளர்ப்பு மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படும் சம்பவங்கள் பதிவாகி வருகின்ற நிலையில் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# லலித் எல்லாவலவுக்கு கொரோனா தொற்று



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவலவுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அவரை, அவரது வீட்டில் தனிமைப்படுத்துவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டனர். இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 48ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெஹிவளையில் கத்திக்குத்து; 18 வயது இளைஞர் உயிரிழப்பு

## சந்தேகநபர்களைத் தேடி பொலிஸார் வலைவீச்சு

தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்தேராபார பிரதேசத்தில் இளைஞரொருவர் நேற்று அதிகாலை (06) கொலைசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தெஹிவளை பிரதேசத்தில் நேற்று காலை கத்தியால் குத்தப்பட்டதால் பாரதூரமான காயங்களுக்குள்ளான இளைஞரொருவர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவர் உயிரிழந்துள்ளதாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், இந்தச் சம்பவம் தொடர்பில் கிடைத்த தகவல்களுக்கமைய பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தெஹிவளை கல்தேராபார பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது இளைஞரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. நீண்டநாட்களாக இருந்துவந்த முரண்பாடு வலுவடைந்ததில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன், அவர்கள் அந்தப் பிரதேசத்திலிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர். சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை தெஹிவளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து வீழந்து பொரளையில் ஒருவர் பலி

பொரளை, சஹஸ்புர அடுக்குமாடி குடியிருப்புத் தொகுதியிலிருந்து வீழ்ந்து காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொரளை பகுதியைச் சேர்ந்த 31 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதோடு சம்பவம் தொடர்பில் பொரளை காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நீர்நிலை அனர்த்தங்களில் வருடாந்தம் 500 பேர் பலி!


நீராடச் சென்று ஏற்படுகின்ற அனர்த்தங்களில் மாத்திரம் நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 500 பேர் மரணிப்பதாக பொலிஸ் மற்றும் கடற்படை உயிர் காக்கும் படையினர் தெரிவித்துள்ளனர்.


இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியங்கர டி சில்வா, வருடமொன்றில் நீர்நிலைகளில் மூழ்கி விபத்துகளை சந்திப்பவர்களில் ஆயிரம் பேர் வரை காப்பற்றப்படுவதாக குறிப்பிட்டார்.


பாதுகாப்பற்ற இடங்களில் நீராடுதல் மற்றும் மதுபானம் உள்ளிட்ட போதைப்பொருட்களை பயன்படுத்தி நீராடுவதனால் இவ்வாறான அனர்த்தம் நேர்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், அனர்த்தங்கள் ஏற்படும் இடங்களில் எச்சரிக்கை பலகைகள் பொறுத்தப்பட்டிருப்பதில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இராணுவத்தின் 13ஆவது குழு லெபனான் கடமைகளுக்கு பயணம்







லெபனான் ஐக்கிய நாடுகளின் செயலணியின் 13ஆவது குழுவாக புறப்படும் படையினருக்கு வாழ்த்துகள் தெரிவிக்கும் நிகழ்வுகள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இராணுவ பதவிநிலை பிரதானி மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே தலைமையில் நேற்று முன்தினம் (05) இடம்பெற்றது.

10 அதிகாரிகள் மற்றும் 115 சிப்பாய்களைக்கொண்ட குழுவினில் முதற்கட்டமாக 08 அதிகாரிகள் மற்றும் 67 சிப்பாய்கள் லெபனான் நோக்கி புறப்பட்டனர்.

இந்தக் குழுவின் கட்டளை அதிகாரியாக இலங்கை இலேசாயுத காலாட் படையணியின் சிரேஷ்ட அதிகாரியான லெப்டினன் கேர்ணல் எஸ்.எம்.டி.என்.சமரகோன் செயற்படுவதுடன் குழுவில் இலங்கை இராணுவத்தின் பொறியியலாளர் படையணி, சமிக்ஞை படையணி, இலேசாயுத காலாட் படையணி, இயந்திரவியல் காலாட் படையணி, கொமாண்டோ படையணி, விசேட படையணி, பொறியியல் சேவை படையணி, பொது சேவை படையணி, மருத்துவப் படையணி, போர்க்கருவி படையணி, மின்சார மற்றும் இயந்திரப் பொறியியல் படையணி, இராணுவ பொலிஸ் படையணி, பொது சேவை படையணி, மகளிர் படையணி ஆகிய படையணிகளின் அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் அங்கம் வகிக்கின்றனர்.

லெபனான் ஐக்கிய நாடுகளின் இடைக்கால செயலணி நடவடிக்கையில் முதன்முறையாக இலங்கை இராணுவ மகளிர் படையணியை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரி ஒருவரும் ஏழு பெண் சிப்பாய்களும் இணைந்துகொண்டமை இக்குழுவின் விசேட அம்சமாகும்.

இலங்கை சிங்க படையணியின் 12ஆவது குழுவினர் தற்போது இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் பல சந்தர்ப்பங்களில் சிறப்பாக செயல்பட்டமைக்காக பாராட்டப்பட்டுள்ளனர்.

லெபனான் ஐக்கிய நாடுகளின் இடைக்கால செயலணிக்கு இலங்கை 2010ஆம் ஆண்டுமுதல் குழுக்களை அனுப்புகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை – இந்திய இராஜதந்திர உறவுகளைப் பாதிக்காத வகையில் இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பான விவகாரம் தீர்க்கப்பட்டு தமது வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும் - என்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற தேசிய கடற்றொழிலாளர் மகா சம்மேளனத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் அன்னராசா, தென்னிலங்கை கடற்றொழிலாளர்களின் ஒத்துழைப்பினையும் கோரியுள்ளார்

கடந்தகால யுத்தம் காரணமாக வடமாகாண கடற்றொழிலாளர்களை நாட்டின் ஏனைய பிரதேச கடற்றொழிலாளர்களுடன் ஒப்பிடுகின்றபோது பின்தங்கிய தொழில்முறைகளையே பின்பற்றி வருகின்ற நிலையில், வடக்கு கடற்றொழிலாளர்கள் தம்மை தகவமைத்துக்கொள்வதற்கு ஏனைய பிரதேசத்தவர்கள் ஒத்துழைக்க வேண்டும் .

கடந்த 2 மாத காலப் பகுதியில் 3 கடற்றொழிலாளர்கள் உயிரிழந்த நிலையில், அவர்களுக்கான காப்புறுதிகளை வழங்குவதற்கு கடற்றொழில் அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புகள் ஒரு பொறிமுறையினை உருவாக்க வேண்டும்.

அதேபோன்று, கடற்றொழில் சார்பான சட்டங்கள் உருவாக்கப்படுகின்போது, வடமாகாண கடற்றொழிலாளர்களின் சாதக பாதகங்களும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். இல்லாத நிலையில் வடக்கு கடற்றொழிலாளர்கள் தேவையற்ற அசௌகரியங்களை எதிர்கொள்ளவேண்டிய சூழல் ஏற்படுகின்றது.

2022ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக பல்வேறு விடயங்கள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளமையினால், அவை வடக்கு கடற்றொழிலாளர்கள் பூரண நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் அமையவேண்டும்

குறிப்பாக, இந்தியக் கடற்றொழிலாளர்கள் அத்துமீறி எல்லை தாண்டிய சட்ட விரோத தொழில் முறைகளில் ஈடுபடுவதனால் வடக்கு கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துக்கூறிய சமாசத் தலைவர், இராஜதந்திர ரீதியாக அணுகி அதனை விரைவில் தீர்ப்பதற்கு கடற்றொழில் அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் அதற்கான தார்மீக ஆதரவினை தமக்கு வழங்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 07ஆம் திகதி, திங்கட்கிழமை

# மீனவர் பிரச்சினையில் தேவை அரசின் தலையீடு

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்துள்ள கருத்துகள் சிந்திக்க மட்டுமல்ல, அது வடக்கு மீனவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளை கோடிட்டுக் காட்டுகின்றது. வடக்கு மீனவர்களுக்கு இன்னல்களும் துயரங்களும் புதியவை அல்ல. நீண்டகால உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட அந்த மீனவர்களின் நெருக்கடிகளை, வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சாதாரண விடயங்களாக கருதிவிட முடியாது.

1990களின் ஆரம்பத்திலிருந்து 2009 மே மாதம் வரையில் வடக்கு, கிழக்கு கடற்பகுதிகளில் தங்களுடைய வாழ்வாதாரத் தொழிலை முன்னெடுத்து வந்த ஆயிரக்கணக்கான மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இலங்கை மோதல்களுக்குள் தங்களுடைய கணவன்மாரை பறிகொடுத்தவர்களில் அதிகமானோர் மீன்பிடி சமூகத்துக்குள்ளேயே இருக்கின்றார்கள்.

கடலில் போராடி தங்களுடைய வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்ளும் மீனவ சமூகம் இறுதிவரை அதற்காக போராடவேண்டியிருக்கிறது. கடல் கொந்தளிப்பு, மழை, சூறாவளி, அதிகாரங்களின் துப்பாக்கிகள் என்று எதனையும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. மீண்டும் மீண்டும் கடல் அலைகளுக்கு மத்தியில் போராடவேண்டியிருக்கிறது.

இதே பரிதவிப்பை தமிழ்நாட்டு மீனவர்களும் 1984களிலிருந்து சந்தித்து வருகிறார்கள். இலங்கை மீனவர்கள் சந்தித்த உயிரிழப்புடன் ஒப்பிடுகையில், இது குறைவு. அவ்வளவே. எனினும், இதுவரை சுமார் 500இற்கும் அதிகமான தமிழக மீனவர்கள் துப்பாக்கிகளினால் பலிவாங்கப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கை - இந்திய பாக்குநீரிணைக் கடற்பகுதியில் தொடர்ந்தும் பிரச்சினை நிலவி வந்திருக்கிறது. 'கச்சதீவு' கையளிப்புக்கு முன்னர் இருந்து அடிப்படையில் 1990களுக்குப் பின்னர் வடக்கு மீனவர்கள் பாரிய படகுகளில் சென்று ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. குறித்த காலப்பகுதியில் இந்திய ரோலர் படகுகள் எந்தவித இடையூறுமின்றி இலங்கை கடற்பகுதிகளுக்கு வந்து மீன்களை அள்ளிச் சென்றிருக்கின்றன. அதனையே இப்போதும் செய்ய முனைகின்றன.

ஆழம் குறைந்த பாக்குநீரிணைப் பகுதியில் பாரிய ரோலர் இழுவைப் படகுகளின் மூலம் மீன்கள் பிடிக்கப்படும்போது அந்தப் பகுதியிலுள்ள பவளப்பாறைகள் சிதைக்கப்படுகின்றன. இதனால், மீன்களுக்குத் தேவையான பிளாந்தன்கள் உற்பத்தி தடைப்படுகின்றது. இதனால், அந்தப் பகுதியில் மீன்வளம் குறைவடைகின்றது. இதுவே, அதற்கான அடிப்படைக் காரணமாகும்.

எனினும், இந்திய பாரிய ரோலர் இழுவைப் படகுகள் தொடர்ந்தும் இலங்கை மீனவர்களின் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்து வருகின்றன. அத்துடன், இலங்கை மீனவர்களின் வலைகள் மற்றும் உபகரணங்களையும் சேதப்படுத்தி வருகின்றன. இவற்றை தடுப்பதற்கு யாழ்ப்பாண மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்கும், தமிழக மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்கும் பேச்சுகள் அவ்வப்போது நடந்து வந்திருக்கின்றன. ஆனாலும், அத்துமீறல்கள் தொடர்கின்றன.

மீன்பிடி பிரச்சினையால் மீனவர்கள் கொல்லப்படுவதை எந்தக் காலத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம் கூறியிருப்பதுபோல் இப்பிரச்சினையை இராஜதந்திர ரீதியாக அணுகி அதனை விரைவில் தீர்ப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

# கொழுப்பைக் கூட்டும் பிளாஸ்ரிக்



உலகில் தற்போது பிளாஸ்ரிக் பயன்பாடு அதிகமாக இருக்கிறது. அதேநேரம், பெரும்பாலான நாடுகளில் உடல் பருமன் ஒரு சவாலான போக்காக மாறியுள்ளது. இந்த இரண்டுக்கும் தொடர்பிருக்கலாம் என்கின்றனர் நோர்வே அறிவியல் தொழில்நுட்பப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள்.

நாம் உணவு மற்றும் நீரைக் கையாளப் பயன்படுத்தும் பிளாஸ்ரிக் கலன்களில் உள்ள சில வேதிப் பொருட்கள், உடலில் புகுந்து உணவை செறிமானிக்கும் முறையில் இடையூறுகளை ஏற்படுத்துவதாக நோர்வே விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இதனால், மனித உடலில் கொழுப்பு செல்கள் அபரிமிதமாகப் பெருகி வளர்வதையும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். தயிர் வைக்கும் பிளாஸ்ரிக் பாத்திரம், சமையலறையில் சுத்தம் செய்ய உதவும் ஸ்பாஞ்ச், குடிநீர்ப் போத்தல்கள் போன்ற அன்றாடம் பயன்படும் 34 விதமான பிளாஸ்ரிக் பொருட்களிலுள்ள வேதிப் பொருட்களை அடையாளம் கண்டனர்.

இவற்றில் 55 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேதிப் பொருட்கள் இருப்பதையும், அதில் 629 வகைகள் ஆபத்து விளைவிக்கக்கூடியவை என்று பிரித்தனர். இதிலும் 11 வேதிப் பொருட்கள் மனித செரிமான அமைப்பில் இடையூறு செய்யவல்லவை என்று தெரியவந்தது. எனவேதான், பிளாஸ்ரிக் கலன்களை உணவு மற்றும் குடிநீருக்குப் பயன்படுத்துவதை அறவே தவிர்ப்பது, உடல் பருமனை குறைக்க உதவக்கூடும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# மீன்கள் தகவல் பரிமாறுவது எப்படி?



கார்ட்டூன் படங்களில் மீன்கள் பேசலாம். ஆனால், நீர்நிலைகளில் உள்ள அசல் மீன்களால் வாய் வழியே நிச்சயம் ஒலி எழுப்ப முடியாது என்றுதான் நீங்கள் நினைத்திருப்பீர்கள். ஆனால், ஒரு புதிய ஆய்வின்படி, உலகிலுள்ள மூன்றில் இரண்டு பங்கு மீன்கள் ஒலி எழுப்புவதன் மூலம்தான் பிற மீன்களுடன் தொடர்புகொள்கின்றன. அமெரிக்காவிலுள்ள கார்னெல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், கூர் முனைத் துடுப்புகளைக்கொண்ட மீன்வகைகளை ஆராய்ந்தனர். இந்த வகைப்பாட்டின் கீழ், உலகிலுள்ள 99 சதவீத மீன்கள் வந்துவிடும்.

இவற்றுக்கு ஒலி எழுப்பும் தசைகள், காற்றை அடைக்கும் உறுப்பு, குறிப்பிட்ட வகை எலும்புகள் போன்றவை உள்ளனவா என்று கவனித்தனர்.ஆய்வின் முடிவில், 175 வகை மீன்கள் ஒலி மூலம் பிற மீன்களுக்கு தகவல்களைத் தருகின்றன என்பது தெரியவந்தது.

தங்கள் இருப்பிடம், அதன் எல்லைகள், உணவு இருக்குமிடம், துணையை வசீகரித்தல் போன்றவற்றை பிற மீன்களுடன் ஒலிகளை எழுப்பித்தான் பகிர்ந்துகொள்கின்றன என்பது உறுதியானது.

மீன்கள், நீரிலிருந்து எம்பி குதிப்பது, கரையின் மீது விழுந்து துள்ளிவிட்டு மீண்டும் நீருக்குள் போவது என்று பல அசாத்தியமான வேலைகளைச் செய்கின்றன. அவைகளால் ஒலி எழுப்ப முடியாமலா போகும்?



# உலகின் மிக நீளமான மின்னல்!

உலகின் நீளமான மின்னல் வெட்டு எங்கே நிகழ்ந்தது தெரியுமா? கடந்த 2020 ஏப்ரலில் அமெரிக்காவில் மூன்று மாநிலங்களுக்குத் தெரியும்படி நிகழ்ந்த இடி மின்னல் சம்பவம்தான் உலகிலேயே மிக நீளமான மின்னல் தாக்குதல்.

உலக வானிலை அமைப்பு (டபிள்யூயு.எம்.ஓ.) வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, அந்த மூன்று மாநில மின்னலின் மொத்த நீளம் 768 கி.மீ.

அமெரிக்காவிலுள்ள, டெக்சாஸ், லுாயிசியானா மற்றும் மிசிசிபி ஆகிய மூன்று மாநிலங்களின் மேல் வளைந்து நெளிந்து படர்ந்து வெட்டியது அந்த சாதனை மின்னல். இந்த மின்னலின் நீளம், 2018 ஒக்டோபரில் தெற்கு பிரேசிலில் வெட்டிய சாதனை மின்னலைவிட 60 கி.மீ. அதிகம் என டபிள்யூ.எம்.ஓ. தெரிவித்துள்ளது. அதுமட்டுமல்ல, அந்த அமெரிக்க மின்னல், அதிகநேரம் நீடித்த மின்னல் என்ற சாதனையையும் எட்டியுள்ளது.

சரி, எப்படி இவ்வளவு துல்லியமாக மின்னலை அளக்கிறார்கள்? அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய செயற்கை கோள்களில் மின்னலைப் பற்றி ஆய்வுசெய்ய தொடர்ந்து பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்தத் தகவல்களை வைத்தே டபிள்யூ.எம்.ஓ. சாதனை மின்னலை அடையாளம் கண்டுள்ளது.

## நக்கல் நமசிவாயம்

மூன்றாவது தடுப்பூசி போடாத ஆக்கள் பொது இடங்களுக்குப் போக ஏலாதாம்... இனி மனைவிமாருக்கு மூன்றாவது தடுப்பூசி போடாமல் விட்டாச் சரி ... செலவும் குறைவு... கடை கண்ணியலுக்கும் ஏறி இறங்க வேண்டியிருக்காது...




# இன்றைய நாளில்...

- 1845 – இலங்கை அரச ஆசியர் சமூகத்தின் இலங்கைக் கிளை கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1971 – சுவிட்சர்லாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.
- 1977 – சோவியத் ஒன்றியம் சோயுஸ் 24 விண்கலத்தை இரண்டு விண்வெளி வீரர்களுடன் விண்ணுக்கு ஏவியது.
- 1979 – புளூட்டோ நெப்டியூனின் சுற்றுப் பாதைக்குள் நுழைந்தது.
- 1992 – ஐரோப்பிய ஒன்றியம் அமைப்பதற்கான மஸ்ட்ரிக்ட் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
- 1999 – உலகத் தமிழிணைய மாநாடு சென்னையில் ஆரம்பமானது.
- 2005 – விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட 4 விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவத்தினரின் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.
- 2012 – மாலைதீவுகளில் 23 நாட்கள் இடம்பெற்ற அரச எதிர்ப்புப் போராட்டங்களை அடுத்து அரச தலைவர் முகம்மது நசீட் பதவியிலிருந்து விலகினார்.

# பிபிலையில் கைபேசிகளை திருடிவந்த தாய், மகன், மகள் அதிரடியாக கைது!

நீண்டகாலமாக குற்றச்செயல்களில் ஈடுபட்டமை விசாரணைகளில் அம்பலம்



பிபிலை நகரில் தொலைபேசி விற்பனை நிலையங்களில் பெறுமதிமிக்க கைபேசிகளைத் திருடிவந்த தாய், மகன் மற்றும் மகள் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் (05) கைதுசெய்யப்பட்டதுடன், இவர்களிடமிருந்து 7 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் மின்விளக்கு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த மூவரும் இந்த மாதம் 03ஆம் திகதி, பிபிலை நகரிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் தொலைபேசியொன்றை கொள்வனவுசெய்யும் போர்வையில் வருகைதந்து, சில கைபேசிகளைத் திருடியுள்ளமை அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கெமராவில் பதிவாகியுள்ளது.

இதற்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளதுடன், அவர்கள் இதற்கு முன்னரும் பிபிலை மற்றும் மெதகம ஆகிய நகரங்களிலுள்ள அலைபேசி விற்பனை நிலையங்களிலிருந்து இரண்டு தொலைபேசிகளை திருடியுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு திருடப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளில் ஒன்று, மொனராகலை பிரதேசத்தில் விற்கப்பட்டுள்ளதுடன், அதன் பெறுமதி 2 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாவென தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் மூவரும் பிபிலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, தாயை இன்று (07) வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதவான் மக்சிலா சூரியாராச்சி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், மகள் இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதால் அவரை பிணையில் விடுதலைசெய்ததுடன், மகனை கெப்பட்டிபொல சிறுவர் காப்பகத்துக்கு அனுப்புமாறு உத்தரவிட்டுள்ளார்.

# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் அனைத்துத் தகவல்களையும் வழங்கியுள்ளோம்

நீதி தாமதமாகுவதால் மாற்று நடவடிக்கைகளுக்கு தயாராகுவதாக பேராயர் மெல்கம் தெரிவிப்பு





(ஜுட் சமந்த)

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான அனைத்து தகவல்களையும் நாம் வழங்கியிருக்கிறோம். முன்னாள் ஜனாதிபதி முதல் கடைநிலை பொலிஸ் உத்தியோத்தர்வரை தகவல்களைக் கொடுத்திருக்கிறோம். ஆனால், அரசாங்கம் தனது பொறுப்பிலிருந்து மீறியிருக்கிறது. அரசாங்கம் தனது பொறுப்பை நிறைவேற்றுமாக இருந்தால் நாம் வேறு நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய அவசியம் இல்லை."

- இவ்வாறு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை புத்தளத்தில் நேற்றுமுன்தினம் (05) தெரிவித்துள்ளார்.

ஆனமடுவ தேர்தல் தொகுதியில் மஹகும்புக்கனவல பகுதியில் அமைக்கப்பட்ட யானை பாதுகாப்பு வேலியை திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பேராயர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

கரப்பந்தாட்டத்தில் பந்தை ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்துக்கு அனுப்புவார்கள் தானே? அதுபோல் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைக்கென பந்தை நாம் அரசின் பக்கம் வீசியுள்ளோம். அரசாங்கம் அதற்கான பதிலை வழங்க வேண்டும். முறையான விசாரணைகளை நடத்தி பாதிக்கப்பட்டோருக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும். அது நடைபெறாத காரணத்தினால் நாம் வேறு முறைகளை நாடவேண்டியிருக்கிறது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான அனைத்து தகவல்களையும் நாம் வழங்கியிருக்கிறோம். முன்னாள் ஜனாதிபதி முதல் கடைநிலை பொலிஸ் உத்தியோகத்தர் வரை தகவல்களைக் கொடுத்திருக்கிறோம். ஆனாலும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏன் நடவடிக்கை எடுக்க தாமதமாகிறது என்பதுதான் எமக்கு முன்னுள்ள கேள்வியாகும்.

அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டபோது பாதுகாப்பு அமைச்சராக முன்னாள் ஜனாதிபதி செயற்பட்டார். அதனால், தாக்குதலுக்கான பொறுப்பை அவர் ஏற்கமுடியாதெனக் கூற முடியாது. எவ்வாறெனினும் முடியாது. நாம் முடியாததொன்றை கேட்கவில்லை. முடியுமானதையே கேட்கிறோம். அரசாங்கம் இந்த விடயத்தில் தாமதிக்கக்கூடாது - என்றார்.

# மான், பன்றி இறைச்சியுடன் கட்டுத்துவக்கு வைத்திருந்த சந்தேகநபர்கள் இருவர் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

உலர்த்தப்பட்ட மான் இறைச்சி மற்றும் காட்டுப் பன்றி இறைச்சி ஆகியவற்றுடன் கட்டுத்துவக்கு ஒன்றையும் வைத்திருந்த சந்தேகநபர்கள் இருவர் குருவிட்டவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குருவிட்ட எக்னெலிகொட பிரதேசத்தில் இரண்டு கிலோ உலர்த்தப்பட்ட மான் இறைச்சி மற்றும் கட்டுத்துவக்கு ஒன்றுடன் சந்தேகநபர் ஒருவர் சமனல மற்றும் பலாபத்தல வனப் பாதுகாப்பு அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 9 கிலோ காட்டுப்பன்றி இறைச்சி வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரை பெலிஹுல்ஓய இயற்கை வனப் பாதுகாப்பு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர். இவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஆடை தீப்பற்றியதால் மூதாட்டி உயிரிழப்பு

(கண்டி நிருபர்)

தன்னந்தனியாக வசித்துவந்த 86 வயது மூதாட்டி ஒருவரின் ஆடை தீப்பற்றியதில் கடும் காயமுற்ற நிலையில் அவர் மரணித்துள்ளார்.

கண்டி, அலதெனிய பொலிஸ் பிரிவிலுள்ள கரண்டுவாவ என்ற இடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

பி.ஜி.பிரேமாவதி என்ற பெண்மணியே இவ்வாறு மரணமடைந்துள்ளார். மேற்படி பெண் ஏதோ ஒரு தேவைக்கு தீ மூட்டும் போதே அது அவர் ஆடையில் பட்டு, பற்றி எரிந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சம்பவதினம் சத்தம் ஒன்று அயலவர்களுக்குக் கேட்டதாகவும் அதனை அடுத்து அங்கு சென்று பார்த்தபோதே ஆடையில் தீப்பற்றி காயம் அடைந்திருந்தது தெரிய வந்ததாக அயலவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மவுசாகலையில் விஷமிகளால் பற்றைக்காடுகளுக்கு தீவைப்பு

(மஸ்கெலியா செய்தியாளர்)

மவுசாகலை நீர்த்தேக்கத்துக்கருகிலுள்ள பற்றைக்குள் விஷமிகள் தீ வைத்ததால் சுமார் இரண்டு ஹெக்ரெயர் வனப் பகுதி அழிந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவுநேரத்தில் மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள கிராம்பு தோட்டப் பகுதியில் உள்ள மவுசாகலை நீர்த்தேக்கத்தின் கரையோரப் பகுதி தற்போது நிலவும் கடும் வறட்சி காரணத்தால் காய்ந்த நிலையில் உள்ளது.

அவ்வாறுள்ள பகுதிகளில் விஷமிகள் தீ வைத்ததால் சுமார் இரண்டு ஹெக்ரெயர் பற்றைக்காடு எரிந்து சாம்பரானது. இதனால் வன விலங்குகள் மற்றும் பறவைகள் பல அழிந்திருக்கலாம் என சூழலியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மஸ்கெலியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# "பசுமை இலங்கை" அமைப்பின் மரம் நடும் வேலைத்திட்டம்



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பசுமை இலங்கை அமைப்பு, காவத்தை அட்டகலம்பன்ன பிரதேசத்தில் நீர் நிலைகள் வற்றாமல் இருக்கவும் சுற்றாடலைப் பசுமையாக வைத்திருக்கும் நோக்கமாகவும் மரங்கள் நடும் வேலைத்திட்டத்தை நேற்று முன்தினம் (05) ஆரம்பித்தது.

இத்திட்டத்தின்கீழ் இப்பிரதேசத்தில் மேலும் பல மரங்கள் நாட்டப்படவுள்ளதாக இவ்வமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

# எஹெலியகொட தமிழ் வித்தியாலயத்தில் பொங்கல் விழாவும் குடிநீர் திறப்பு நிகழ்வும்

(அவிசாவளை செய்தியாளர்)

எஹெலியகொடை தமிழ் வித்தியாலயத்தில் பொங்கல் விழாவும் குடிநீர் திறப்பு நிகழ்வும் பாடசாலையின் அதிபர் இராசையா தெய்வராஜ் தலைமையில் கடந்தவாரம் இடம்பெற்றது.

இந்நிகழ்வினை சிறப்பிக்கு முகமாக சமயத் தலைவர்கள், சப்ரகமுவ மாகாண உதவி கல்விப் பணிப்பாளர் எஸ்.பி.ஜேசுப்பிள்ளை, தெஹியோவிட்ட வலயக்கல்விப் பணிப்பாளர் கோமகன் மற்றும் எஹெலியகொடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், பிரஜாசக்தி நிலையப் பொறுப்பாளர்கள் மற்றும் ஏனைய நலன்விரும்பிகள், பொங்கல் விழா போட்டிகளுக்கான பரிசுப் பொருட்களை அனுசரணையாக வழங்கிவைத்த தலைமுறை காப்போம் அமைப்பினரும் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலையில் நீண்டநாள் தேவையான குடிநீர் பிரச்சினையை தீர்க்கும் முகமாக காவேரி கலா மன்றம் முழுமையான அனுசரணை வழங்கி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.











## போதைப்பொருளுடன் சந்தேக நபர்கள் கைது

குற்றம் தவிர்

### தலைமன்னார்

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருக்கலம்பிட்டியில் 25 கிராம் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த நபர் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் (05) கைதுசெய்துள்ளனர்.

பேசாலையைச் சேர்ந்த 38 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைவாக முச்சக்கரவண்டியொன்றை நிறுத்தி சோதனையிட்டபோதே போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

### மோதரை

மோதரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலும்மாவத்த வீதியில் 10 கிராம் 700 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் (05) பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மோதரையைச் சேர்ந்த 23 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ், வதுல்லவத்த பகுதியில் 14 கிராம் 110 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த 50 வயதான நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் (05) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### தலங்கம

தலங்கம, கலல்கொட பகுதியில் பொலிஸார் நேற்றுமுன்தினம் (05) மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது 05 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஹோகந்தர தெற்கு பகுதியைச் சேர்ந்த 39 வயதான ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### புளத்சிங்ஹல

புளத்சிங்ஹல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஞானாலோக்க விகாரைக்கருகில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது 05 கிராம் 730 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 33 வயதான சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரி20 வத்த என்ற பகுதியில் 05 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 57 வயதான நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.









கொழும்பு 14, நவகம்புர ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

# கத்திக்குத்துக்கு இலக்காகி ஒருவர் உயிரிழப்பு; சந்தேகநபரைத் தேடி பொலிஸார் வலைவீச்சு

## பணத் தகராறால் தலவாக்கலையில் சம்பவம்








(க.கிஷாந்தன்)

தலவாக்கலை பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், குத்திய சந்தேகநபரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை வட்டகொடை மடக்கும்புர வடக்கி மலை பிரிவிலுள்ள மாரியம்மன் ஆலயத்திற்கு முன்பாக நேற்றுமுன்தினம் (05) மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கத்திக்குத்துக்கு இலக்கான நபரை வைத்தியசாலைக்கு கொண்டுசென்றுகொண்டிருந்த வேளையிலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 31 வயதுடைய முருகையா சரவணன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரது சடலம் லிந்துலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு அனுப்பவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பணத் தகராறு காரணமாக குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளன.

கத்தியால் குத்திய நபர் தலைமறைவாகியுள்ளதாகவும் அவரை கைதுசெய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் தலவாக்கலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மற்றும் நுவரெலியா கைரேகை அடையாளப்பிரிவு ஆகியன இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கு - கிழக்கிலுள்ள இடங்களை கையகப்படுத்தியதுபோல் மலையகத்திலும் காணிகளை அபகரிக்க பெரும் முயற்சி

## இராதாகிருஷ்ணன் எம்.பி.குற்றச்சாட்டு



(க.கிஷாந்தன்)

தமிழக மீனவர்களுக்கும், வடக்கு மீனவர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைப் பயன்படுத்தி மூன்றாம் தரப்பொன்று குளிர்காய முற்படுகின்றது. இதற்கு இரு நாட்டு அரசுகளும் இடமளிக்கக்கூடாது. இப்பிரச்சினையை விரைவில் சுமுகமாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும் - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு, கிழக்கில் காணிகள் அபகரிக்கப்பட்டதுபோல் மலையகப் பகுதிகளில் உள்ள காணிகளையும் கையகப்படுத்தும் முயற்சி எடுக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் (05) மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கையில் வடபகுதி மற்றும் இந்தியாவில் தமிழகம் ஆகிய பகுதிகளில் வாழும் மீனவ சமுதாயத்துக்கிடையிலான பிரச்சினை பூதாகரமாகியுள்ளது. இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள், எமது நாட்டு கடல் வளத்தையும், மீனவர்களின் உபகரணங்களையும் அழிப்பதாக வடபகுதி மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழகத்திலும் தமிழர்கள்தான் வாழ்கின்றனர். வடக்கிலும் தமிழர்கள்தான் வாழ்கின்றனர். இதனை தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள முரண்பாடாக சிலர் பார்க்கின்றனர். எனவே, இவ்விவகாரத்தை நாம் மிகவும் அவதானத்துடன் அணுகவேண்டும். இப்பிரச்சினையைப் பயன்படுத்தி மூன்றாம் தரப்பொன்று குளிர்காய முற்பட்டால் அது பெரும் பிரச்சினையாக அமைந்துவிடும். இரு நாடுகளினதும் அரசும், அமைச்சர்களும் இணக்கப்பாட்டு அடிப்படையில் இப்பிரச்சினையை தீர்த்துக்கொள்ள முன்வர வேண்டும்.

அதேவேளை, எமது கட்சியின் பதுளை பிரதேச சபை உறுப்பினர் சிவநேசன் மீது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார். இச்சம்பவத்தை நாம் கண்டிக்கின்றோம். தோட்டப்பகுதியிலுள்ள காணியை பாதுகாக்க முற்பட்டதால்தான் அவர்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் காணிகள் அபகரிக்கப்பட்டதுபோல் மலையகப் பகுதிகளில் உள்ள காணிகளையும் கையகப்படுத்தும் முயற்சி எடுக்கப்படுகின்றது. இதனை தடுத்து நிறுத்த நாம் ஒன்றுபட வேண்டும் - என்றார்.

# நுவரெலியா ஒலிபன்ட் பிரிவில் கணினி நிலையம் திறந்துவைப்பு




(செ.திவாகரன்)

நுவரெலியா ஒலிபன்ட் மத்திய பிரிவின் பாடசாலை மாணவர்களின் நலன் கருதியும் தகவல் தொழில்நுட்ப அறிவினை விருத்திசெய்வதனை நோக்கமாகக் கொண்டு "இனியாவது நமக்காக நாம்'' என்ற அமைப்பின் சமூக ஆர்வலர்களின் முழு முயற்சியுடன் கணினி வசதிகள் உள்ளடக்கிய 'கணினி கல்வியம்' ஒன்றினை இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தன்று திறந்துவைக்கப்பட்டது.

"இனியாவது நமக்காக நாம்'' என்ற அமைப்பின் சமூக ஆர்வலர்களான ஆறுமுகம் சுதர்ஷன், யுவராஜ் சர்மா, ஓடை தயாளன், அமைப்பாளர் நேசன் ஆகியோரின் முயற்சியிலேயே இது திறந்துவைக்கப்பட்டது.

"இனியாவது நமக்காக நாம்'' என்ற அமைப்பில் இது போன்ற ஐம்பது பின்தங்கிய பிரதேசங்களை தெரிவுசெய்து கணினிகூடங்கள் அமைத்துக் கொடுப்பதுதான் நோக்கம் எனவும் இவ்வமைப்பின் தலைவர் இந்நிகழ்வின்போது அறிவித்தார்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மத்திய மாகாணத்திலுள்ள ஆசிரிய உதவியாளர்களுக்கு பாரிய அநீதி

## 10 ஆயிரம் ரூபாவில் அவர்கள் என்ன செய்வார்கள் என்றும் ஆசிரியர் சங்கச் செயலாளர் ஸ்டாலின் கேள்வி




(கண்டி நிருபர்)

10 ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்கி மத்திய மாகாண ஆசிரிய உதவியாளர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஆசிரியர் தொழிற்சங்கங்களை புனரமைப்பு செய்வது தொடர்பாக கண்டிக்கு நேற்றுமுன்தினம் (05) விஜயம் செய்தபோது அவர் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் விரைவில் கொண்டுவரப்படவுள்ள புதிய அரசியலமைப்பின் மூலம் தொழிற்சங்க உரிமைகளை கட்டுப்படுத்துவதற்கு இடமுண்டு. அப்படியான உருவாக்கத்தை நீதி அமைச்சர் ஒரு சமயம் இலேசாகத் தெரிவித்திருந்தார். அதற்கு தொழிற் சங்கம் என்ற வகையில் இடமளிக்க முடியாது.

தொழிலாளர் போராட்டம் என்பது நீண்டகாலமாக உள்ளது. அரசியலமைப்பிலுள்ள ஓர் உரிமையாகும். அரசின் கொள்கைகள் காரணமாகவே தொழிற்சங்கப் போராட்டங்கள் ஏற்படுகின்றன. அரசு சரியான முடிவுகளை எடுத்தால் தொழிற்சங்கங்கள் குரல் கொடுக்க அவசியமில்லை.

தொழிற்சங்க உரிமை என்பது அரசியல் அமைப்பின் 14ஆவது பிரிவின்படி வழங்கப்பட்ட ஓர் உரிமையாகும். ஐ.எல்.ஓ. (சர்வதேச தொழில் அமைப்பு) இதனை அங்கீகரித்துள்ளது. இதனை கட்டுப்படுத்துவது மோசமான நிலையை ஏற்படுத்தும்.

நாட்டு மக்களுக்குத் தேவையான எரிபொருட்கள் போன்ற அத்தியாவசிய தேவைகளை அரசு வழங்காவிட்டால் மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பது இயல்பாகும்.

அதேபோன்று, அரசு நாட்டின் தேசிய வளங்களை விற்று ஆட்சி நடத்த முற்பட்டால் மக்கள் அதனை எதிர்த்துப் போராடுவதும் இயல்பு. தங்களுக்கேற்றவாறு பணத்தாள்களை அச்சிடுவதால் பணவீக்கம் வேகமாக அதிகரித்துவருகிறது.

இதேவேளை, இதுவரை ஆசிரியர் மற்றும் அதிபர்களது சம்பளப் பிரச்சினை மட்டும்தான் தீர்க்கப்பட்டுள்ளது.

இன்னும் பல விடயங்கள் தீர்க்கவேண்டியுள்ளது. அவற்றிற்கு 6 மாத கால அவகாசம் வழங்கியுள்ளோம். அதில் 3 மாதங்கள் கழிந்துவிட்டன.

மத்திய மாகாண ஆசிரிய உதவியாளர்கள் சுமார் 400 பேருக்கு எவ்வித உரிமைகளும் வழங்கப்படவில்லை.

10 ஆயிரம் ரூபா சம்பளத்தில் அவர்கள் என்ன செய்வது? ஏனைய மாகாணங்களில் ஆசிரிய உதவியாளர்கள் இலங்கை ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். ஆனால், அரசிடம் சரியான திட்டம் இல்லை என்பதை இது காட்டுகிறது.

பாடசாலைகளிலும் மற்றும் பொது போக்குவரத்திலும் சமூக இடைவெளி பேணப்படுவதில்லை. இதுவே, கொவிட் பரவ காரணமாகவுள்ளது. எனவே, உயர்தரப் பரீட்சைக் காலத்தில் அனைத்து பாடசாலைகளையும் மூடி ஓரளவு கொவிட் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும். அரசியல்வாதிகளின் முடிவின்படி நடவடிக்கை எடுத்து சுகாதார வழிகாட்டல்களை புறந்தள்ளினால் கொவிட் பரவுவதை தவிர்க்க முடியாது போகலாம்.

# மகாவலி கங்கையின் நீர்மட்டத்தில் வீழ்ச்சி




(கண்டி நிருபர்)

மகாவலி கங்கையின் நீர்மட்டம் மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகிறது. இதன் காரணமாக மின் உற்பத்தி பாரிய சவாலுக்கு உட்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

மகாவலி கங்கையின் நீர்மட்டம் குறைவடைந்தால் உக்குவலை, விக்டோரியா, ரன்தெனிகல, ரன்தெம்பே போன்ற நீர்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவதுடன், மின் உற்பத்திக்கும் நெருக்கடி ஏற்பட இடமுண்டு எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெகு விரைவில் தொடர் மழை பெய்யாத பட்சத்தில் நிலைமை மேலும் மோசமடையலாம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# ஊழல் - மோசடிகளில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் கோமாளித்தனமாக 'சதி சதி' என புராணம் பாடுகிறது

## வேலுகுமார் எம்.பி. விசனம்

(க.கிஷாந்தன்)



இது வெத்து வேட்டு அரசு. வேலைத்திட்டங்கள் எதுவும் அற்ற வெற்று, எதற்கெடுத்தாலும் 'சதி', 'சதி' என 'சதி' புராணம் பாடும் கோமாளி அரசு" – என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

நாவலப்பிட்டிய பகுதியில் நேற்று இடம்பெற்ற ஆன்மீக நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் கூறியவை வருமாறு,

"நாட்டை ஆள்கின்ற இந்த அரசு வெற்று அரசாகும். அதனிடம் உரிய வேலைத் திட்டங்கள் இல்லை. இது உள்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, முழு உலகுக்குமே தெரியும். நல்லாட்சியின்போது முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு திறப்பு விழா நடத்தி அகம் மகிழ்கின்றனர்.

ஊழல், மோசடிகள் மற்றும் சதித்திட்டங்கள் ஊடாக ஆட்சிக்கு வந்த இந்த அரசு, தற்போது எதற்கெடுத்தாலும் 'சதி' புராணம் பாடுகின்றது. சமையல் எரிவாயு வெடித்தாலும் சதி, நாட்டில் மின்வெட்டு அமுலானாலும் சதியென காரணம் கூறுகின்றது. மக்களை ஏமாற்றவே அவர்கள் அவ்வாறு செயற்படுகின்றனர். ஆனால், அவர்களின் நாடகத்தை நாட்டு மக்கள் தற்போது புரிந்துகொண்டுள்ளனர்.

இந்த அரசு தன்னைச் சூழ இராணுவத்தை வைத்துக்கொண்டுள்ளது.

எனவே, சதி இடம்பெறுகின்றதெனில் அதை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவும். மாறாக பூச்சாண்டி அரசியல் நடத்தக்கூடாது.

அதேவேளை, நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் இன ஒற்றுமை அவசியம். ஆனால், நுவரெலியாவில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியும், கலாசாரமும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. தேசிய நிகழ்விலும் தமிழுக்கு இடமில்லை" – என்றார்.

# கடும் வெயிலால் மலையகப் பகுதியில் நீர் ஊற்றுகளின் நீரோட்டம் வீழ்ச்சி



(மஸ்கெலியா நிருபர்)

மத்திய மலைநாட்டில் கடந்த சில நாட்களாக கடும் வறட்சி நிலவுவதால் நீர் ஓடைகள் மற்றும் நீர் ஊற்றுகள் வற்றி வரண்டுபோயுள்ளன.

இதனால் நீரேந்து பகுதியிலுள்ள அனைத்து நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருவதால் நீர் மின் உற்பத்தி பாதிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டிலுள்ள மவுசாகல, காசல்ரீ, மேல்கொத்மலை, விமலசுரேந்திர, கொத்மலை, விக்டோரியா, ரந்தனிகல, சமனலவெவ ஆகிய நீர்த்தேக்கங்களுக்கு நீரை வழங்கும் சகல ஆறுகளும் வறண்ட நிலையில் உள்ளன. இதனால் நீர்மட்டம் குறைந்துவிட்டது.

மேலும் அனைத்து நீர்வீழ்ச்சிகளும் நீர் வரத்து இல்லாததால் அதன் எழில் தோற்றம் இல்லாததால் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் வருகை மிக குறைந்த நிலையில் உள்ளது என விடுதி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மவுசாகல நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 26.5 அடி குறைந்துள்ளது என நீர் மின் நிலைய உயரதிகாரி தெரிவித்தார்.





நாவலப்பிட்டி கட்டபுலா உச்சிமலை கீழ்ப்பிரிவு அருள்மிகு ஸ்ரீ சீரடி சாயிபாபா ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று (06) இடம்பெற்றது. (படங்கள் : கம்பளை நிருபர்)

தமிழன்
வணிக உலகம்
Business world
www.thamilan.lk

# அனைத்து காட்சியறைகளிலும் கொண்டாடப்பட்ட சிங்கர் மெகாவின் 24ஆவது ஆண்டு நிறைவு விழா

சிங்கர் மெகா அதன் 24ஆவது ஆண்டு நிறைவு விழாவை அண்மையில் கொண்டாடியது. இக்கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக அனைத்து சிங்கர் மெகா காட்சியறைகளிலும் அனைத்துப் பிரிவுகளிலும் விசேட கொண்டாட்ட சலுகைகளும் விசேட செயற்பாடுகளும் இடம்பெற்றிருந்தன.

சிங்கர் மெகாவின் முதலாவது காட்சியறை 1998இல் நிறுவப்பட்டதிலிருந்து உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற வர்த்தகநாமங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள், வீட்டு பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் தளபாடங்களை அது ஒரே கூரையின்கீழ் வழங்குகின்றது. போதிய வாகன நிறுத்துமிட வசதி, தொடர்ச்சியான வாடிக்கையாளர் ஈடுபாட்டுடன் ஒப்பிடமுடியாத ஷொப்பிங் அனுபவத்துடன் இணைந்தவாறு, மிக நீண்டகாலமாக வீட்டுப் பொருட்கள் மற்றும் இலத்திரனியல் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான மிகச்சிறந்த இடமாக சிங்கர் மெகா விளங்குகின்றது.

இந்த முக்கியமான தருணத்தில் சிங்கர் மெகாவின் விற்பனைப் பணிப்பாளர் வஜிர தென்னகோன் கருத்து வெளியிடுகையில், "இலங்கையின் முன்னணி, நீடித்த நுகர்வோர் பாவனைப் பொருட்களின் சில்லறை விற்பனையாளர் எனும் வகையில், கடந்த 24 வருடங்களாக மிகச் சிறந்த பொருட்களை வழங்குவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். எமது மதிப்புக்குரிய வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்த நாம் தொடர்ந்தும் முயற்சிசெய்து வருகிறோம். எமது சமீபத்திய கொண்டாட்ட நிகழ்வுகளில் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விசேட சலுகைகளை வழங்கியதோடு, பல்வேறு பொழுதுபோக்கு செயற்பாடுகளிலும் அவர்களை ஈடுபடுத்தி, அவர்களுடன் எமது மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்ள முடிந்தமை தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். எதிர்காலத்திலும் எமது வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட சேவைத் தரத்துடனான பல்வேறு வர்த்தகநாமங்களின் மேலும் பல பரந்த தயாரிப்பு வகைகளை வழங்க நாம் எதிர்பார்க்கிறோம்" - என்றார்.

சிங்கர் மெகா காட்சியறைகள் புத்தம் புதிய தோற்றத்துடனும் எதிர்காலத்திற்கான தொலைநோக்கின் அடிப்படையில் அண்மையில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இப்புதிய காட்சியறைகள் மிகவும் விசாலமானதாகவும், வாடிக்கையாளர்களுக்கு முன்னரை விட அதிக ஈடுபாட்டுடன் நிறைவான ஷொப்பிங் அனுபவத்தை வழங்குவதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. அத்துடன், ZTE, TCL, DAHUA, DELL போன்ற பல்வேறு புதிய தொழில்நுட்ப வர்த்தகநாமங்களுடன் சிங்கர் கூட்டுச் சேர்ந்துள்ளது என்பதுடன், அவை அனைத்து வாடிக்கையாளர்களும் அணுகும் வகையில் ஒரே கூரையின்கீழ் கிடைக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிங்கர் மெகாவின் வர்த்தக மேம்பாட்டு முகாமையாளர் மஞ்சுள சில்வா கருத்து வெளியிடுகையில், "நாம் உறுதியான புதிய




தோற்றத்துடனும் புதிய நோக்குடனும் எதிர்காலத்தை நோக்கியதான சிறந்த பல படிமுறைகளை முன்னெடுத்து வருகிறோம். இலங்கையர்களின் வாழ்க்கையை வளப்படுத்தவும், மேம்படுத்தவும் சிங்கர் தொடர்ந்து பலமாக வளர்ந்து வருகிறது" - என்றார்.

இப்பயணத்தின் தொடர்ச்சியாக நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு சிங்கர் மெகா காட்சியறைகளும், உலகம் முழுவதிலுமிருந்தான அனைத்து வகையான பலதரப்பட்ட தயாரிப்பு வகைகளுடன், புதிய தோற்றத்துடன், புதிய வாடிக்கையாளர் அனுபவத்தையும் வழங்கும். அத்துடன், ஒவ்வொரு காட்சியறையிலும் அனைத்து வர்த்தகநாமங்கள் மற்றும் தயாரிப்புகள் தொடர்பான ஆழமான அறிவைக்கொண்ட ஊழியர்கள் மற்றும் kiosks (தன்னியக்க கருவிகள்) மூலமான செயலாக்கம் ஆகியன வாடிக்கையாளர்களின் கொள்வனவு அனுபவத்தை மேலும் மேம்படுத்தும்.


மிகக் கௌரவமான ஆரம்பத்துடன், 1877ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து சிங்கர் (ஸ்ரீலங்கா) நிறுவனம் இலங்கையின் மிகப் பாரிய மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாக நாடளாவிய ரிதியில் விளங்கி வந்துள்ளது. வீட்டுத் தயாரிப்புகள், தொழில்துறை சார்ந்த மற்றும் நிதி ரீதியான பிரிவுகளில் தங்களுடைய சொந்த தயாரிப்புகள் மற்றும் உலகளாவிய ரீதியிலான பல்வேறு வர்த்தகநாமங்களின் தயாரிப்பு வகைகளையும் சிங்கர் கொண்டுள்ளது.

# இலங்கை வர்த்தக நிறுவனங்களின் அறிக்கையிடலில் வெளிப்படைத்தன்மையானது (TRAC) ஓரளவு முன்னேற்றத்தை வெளிப்படுத்துகிறது

பெப்ரவரி 01ஆம் திகதி வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டிற்கான 'வர்த்தக நிறுவனங்களின் அறிக்கையிடலில் வெளிப்படைத்தன்மை' (TRAC) மதிப்பாய்வு அறிக்கையின்படி, இலங்கையிலுள்ள நிறுவனங்கள் வர்த்தக அறிக்கையிடலில் மத்திமமான வெளிப்படைத்தன்மை கொண்டவையாகக் கருதப்படுகின்றன. இந்த TRAC அறிக்கையானது ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) நிறுவனத்தினால் மதிப்பாய்வு செய்யப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளது.

TRAC அறிக்கையானது (2021 ஜூன் முதலாம் திகதியன்று காணப்பட்ட நிறுவனங்களின் சந்தை மூலதனத்தின் அடிப்படையில்) கொழும்பு பங்குச்சந்தையில் சிறந்த முதல் 75 வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களால் பொதுவில் வெளியிடப்பட்டிருந்த தகவல்களின் வெளிப்படைத்தன்மையின் அடிப்படையில் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஊழலுக்கு எதிரான திட்டங்கள், நிறுவனத்தின் பங்குகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் உள்ளக நடவடிக்கைகளின்போது முக்கிய நிதியியல் தகவல்களை வெளிப்படுத்துதல் போன்ற முக்கிய மூன்று தலைப்புகள் ஊடாக ஊழலுக்கெதிராக செயற்படுவதற்கும் அதனை தடுப்பதற்குமான நிறுவனங்களின் அறிக்கையிடல் பற்றிய மதிப்பாய்வினை தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக செயற்படுத்தி வருகின்றது.

மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்கள் 10 புள்ளிகளுக்கு 6.93 என்ற சராசரி புள்ளியினை




பெற்று வர்த்தக அறிக்கையிடலில் மத்திமமான வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுகின்றமை ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. பூச்சியம் புள்ளியானது மிகக் குறைந்த வெளிப்படைத் தன்மையினையும் பத்து புள்ளிகள் என்பது முழுமையான வெளிப்படைத்தன்மை கொண்டவையாகவும் கருதப்படுகிறது. இவ்வாண்டின் சராசரியான புள்ளியான 6.93ஆனது 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முன்னைய மதிப்பாய்வில் பெறப்பட்ட சராசரி புள்ளியான 6.73 விட சற்று அதிகமாகும். 2020ஆம் ஆண்டிற்கான TRAC மதிப்பாய்வுக்கு 50 நிறுவனங்கள் உள்வாங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜோன் கீல்ஸ் கூட்டு நிறுவனத்தினர், கொமர்ஷல் வங்கி மற்றும் டயலொக் அக்சியாடா ஆகிய வர்த்தக நிறுவனங்கள் குறித்த மதிப்பாய்வில் கூடிய புள்ளிகளை பெற்ற நிறுவனங்களாகும். ஜோன் கீல்ஸ் கூட்டு நிறுவனத்தினர் குறித்த மதிப்பாய்வு தரவரிசையில் தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாக முதலாவது இடத்தினை பிடித்ததுடன், தகவல்களை வெளிப்படுத்தும் நடைமுறையில் சிறந்த வெளிப்படைத்தன்மைக்காக ஒட்டுமொத்த முழுப் புள்ளிகளையும் பெற்ற ஒரே நிறுவனமாகும்.

நிறுவனம் தொடர்பாக பொதுவில் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் குறித்த நிறுவனங்களுக்கு புள்ளிகள் இடப்பட்டு தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த நிறுவனங்களின் ஆண்டறிக்கை, நிறுவன இணையத்தளங்கள் மற்றும் பொதுவில் கிடைக்கக்கூடிய நிறுவன அறிக்கைகள் என்பன தகவல்களுக்கான மூலகங்களாகும். ஒவ்வொரு நிறுவனத்தினதும் புள்ளிகள் தொடர்பாக அறிந்துகொள்ள https://www.tisrilanka.org/trac2021/ தளத்திற்கு பிரவேசியுங்கள்.

நிறுவனங்களின் ஊழலுக்கு எதிரான கொள்கைகள் அல்லது திட்டங்களை செயற்படுத்தல் தொடர்பில் TRAC அறிக்கை மதிப்பாய்வு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் குறைந்த புள்ளி என்பது ஒரு நிறுவனத்தில் ஊழலுக்கு எதிராக வலுவான திட்டங்கள் கொண்டிருக்கவில்லை என்பதையோ அல்லது நிறுவன மட்டத்தில் நடைபெறும் தவறுகளை மதிப்பாய்வு செய்யப்பட்டு வழங்கப்பட்டதாகவோ கருதப்படுவதில்லை. மேலும் கூடிய புள்ளி என்பது தகவல்களை வெளிப்படுத்தலில் வலுவான கட்டமைப்பினை கொண்டுள்ளதை குறிப்பிடலாம். ஆனால், இது அவர்களது வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் வெற்றியை பிரதிபலிக்கவில்லை.

இலங்கையில் தனியார்துறையானது பொதுவாக ஊழலை ஊக்குவிக்கும் துறையாகவே கருதப்படுகிறது. தனியார்துறையினர் தமது சமூகப் பங்களிப்புகள், ஊழலுக்கு எதிராக கட்டமைக்கப்பட்ட வியூகங்கள் அல்லது அவர்களின் நிறுவன கட்டமைப்புகள் பற்றிய தகவல்களை பொதுவில் வெளியிட வேண்டிய கட்டாயத் தேவை எதுவும் இல்லை என்ற உண்மையால் இந்தக் கருத்து மேலும் வலுவடைகிறது. நிறுவனம் தொடர்பில் பொதுவில் வெளியிடப்படவேண்டிய முக்கிய தகவல்களை முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் பொதுவில் பகிர்வதை உறுதிப்படுத்தல் என்பது நிறுவனத்தின் பொறுப்புக்கூறல் மற்றும் நிறுவனத்தின் சமூக பொறுப்பின் தன்மையினை நிரூபிக்கும் ஒரு முக்கிய படியாகும். அதனடிப்படையிலேயே TRAC மதிப்பாய்வானது நிறுவனங்களின் வர்த்தக அறிக்கையில், வெளிப்படைத்தன்மையைக் கண்டறிதல், அங்கீகரித்தல், வழிகாட்டல் மற்றும் ஊக்குவித்தல் என்பவற்றை நோக்கமாகக்கொண்டு மதிப்பாய்வு செய்கிறது.

TISL நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான நதிஷானி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "இந்த மதிப்பாய்வு அறிக்கையானது நிறுவனங்களுக்கு அவர்களின் தகவல்களை பொதுவில் வெளிப்படுத்தல் நடைமுறைகளை எவ்வாறு மேம்படுத்துவது என்பது பற்றி விரிவான பரிந்துரைகளை வழங்குகின்ற அதேவேளை, அப்பரிந்துரைகள் குறித்த மதிப்பாய்வில் கூடிய புள்ளிகளை பெறவும் வழிவகுக்கிறது. மேலும் உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை திருத்துவதன் முக்கியத்துவம் குறித்து உரிய பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு குறித்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. மேலும் தரவரிசையில் சிறந்த நிலைகளைப் பெற்ற வர்த்தக நிறுவனங்களுக்கும் இம்மதிப்பாய்வில் தமது நிலையினை மேம்படுத்திக்கொண்ட வர்த்தக நிறுவனங்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவிக்கும் வேளை, இங்கு மதிப்பாய்வுக்குட்படுத்தப்பட்ட அனைத்து நிறுவனங்களும் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு ஊக்குவிக்கப்பட்டு தகவல்களை வெளிப்படுத்தல் நடைமுறைகளை தமது செயற்பாடுகளில் வெளிப்படுத்துவார்கள் என நாம் நம்புகிறோம்" - என அவர் குறிப்பிட்டார்.

திகதி 05.02.2022
சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4669
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 10,306,670.00
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 1 9 8 2 1 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 39,318,982.00

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2964
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,788,680.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 07 14 70 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,254,508.40

Mega POWER
மெகா பவர்
கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 1017
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,551,380.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 215,917,962.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து K
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள் 06 19 21 28
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 08908

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 699
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,740,080.00
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 06 18 59 64
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,782,590.40

ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0010
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,764,240.00
இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 43 44 47 62
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,597,798.84

ஜாதிக சம்பத
JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1207
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,777,120.00
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 3 6 6 7 6 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,026,248.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# ரிதம் அறவாரியம் சர்வோதயாவுடன் இணைந்து பாதிக்கப்பட்ட சமூக பெண் தொழில்முயற்சியாளர்களை மேம்படுத்துகிறது

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் பாதிக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த 400இற்கும் மேற்பட்ட இளம்பெண்கள், சர்வோதயா மற்றும் ரிதம் அறவாரியத்தின் தனித்துவமான முயற்சியின் கீழ் தமது வறுமையை போக்கிக்கொள்ளவும் நிலையான வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பவும் தொழில்முயற்சி திறன்களுடன் வலுவூட்டப்பட்டுள்ளனர்.

QI குழுமத்தின் சமூகப் பாதிப்பினை தீர்ப்பதில் முன்னின்று உழைக்கும் ரிதம் அறவாரியமானது, ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு இணங்க அனைவருக்கும் கல்வி, பால் சமத்துவம், நிலையான சமூக அபிவிருத்தி ஆகியவற்றில் தனது முயற்சிகளை வெளிப்படுத்தி வருகிறது. ஹொங்கொங்கில் தனது தலைமையகத்தைக்கொண்டுள்ள இந்த அறவாரியமானது உலகெங்கிலும் மாற்றத்தை ஏற்படுத்த பல நாடுகளில் இயங்கிவருகின்ற நிலையில் இலங்கையில் உறுதியான பிரசன்னத்தைக் கொண்டுள்ளது.

2018ஆம் ஆண்டு தொடக்கம் இந்த அறவாரியமானது, நாடளாவிய ரீதியில் பல்வேறு உள்நாட்டு நிறுவனங்களுடன் இணைந்து அநீதி இழைக்கப்பட்ட சமூகங்களுக்கு நிலையான அபிவிருத்திக்கான வசதிகளை வழங்கி வருகிறது. இது வடமாகாணத்தில் சமூக தொழில் திட்டம் ஊடாக தொழில் வாய்ப்புகளை வழங்குவதுடன், கண்டி மாவட்டத்தில் விசேட தேவையுடையவர்களை சமூகத்தில் சேர்த்துக்கொள்வதை ஊக்குவித்தல்



ஆகியவற்றை உள்ளடக்கியது.

இலங்கையில் அறவாரியத்தின் மையப்பகுதியாகத் திகழும் இடத்தினை தனது பிறப்பிடமாகக்கொண்ட உமையாள் ஈஸ்வரனை தனது தலைவியாகக் கொண்டுள்ளது. கொழும்பில் உதவி வேண்டும் எவருக்கும் உதவும் கொள்கையைக் கொண்ட பரோபகார பெற்றோரிடம் இவர் வளர்ந்துள்ளார். உமையாள் எப்பொழுதும் பிறரை உயர்த்தும் தன்னார்வத்தைத் தூண்டும் பரோபகாரத்தின் உள்ளார்ந்த உணர்வைக்கொண்டிருந்தார். இவ்வாறு, மனிதகுலத்திற்கு உதவ உங்களை உயர்த்துங்கள் எனும் அடித்தளம் கட்டமைக்கப்பட்டதுடன் மற்றும் உலகெங்கிலுமுள்ள சமூகங்களின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு ஆதரவை வழங்குவதற்கான அதன் தொடர்ச்சியான தேடலை மேற்கொண்டு வருகிறது. தேவையுடைய, பலவீனமுடைய அல்லது பாதிக்கப்பட்ட மக்களை அணுகுவதும் அவர்களுக்கு உதவுவதும் மனிதகுலத்துக்கு இயல்பாக இருக்க வேண்டும் என நம்புகிறேன். பிரச்சினைகளை எதிர்நோக்கும் சமூகங்களை உயர்த்துவதற்கு தேவையான வளங்கள் மற்றும் வல்லமை இருப்பின் நாம் எமது சக்தி மூலம் எதையும் செய்ய முடியும். எனது இளமைப் பருவத்தில் என்னை போஷித்து வளர்த்த தேசத்திற்கு ரிதம் மன்றத்தின் ஊடாக நாங்கள் செய்துவரும் பணியின் மூலம் கைம்மாறு செய்ய முடிந்தமைக்கு நான் நன்றிக்கடன்பட்டுள்ளேன்" - என்று உமையாள் கூறினார்.

தற்போதைய திட்டம் ரிதமின் ஆரம்பகால பங்குதாரர்களில் ஒருவரான சர்வோதயாவுடன் 2019இல் தொடங்கப்பட்டது. மேலும், கொவிட்-19 தொடர்பான சிக்கல்கள் இருந்தபோதிலும், இந்த ஆண்டு முடியும் வரை இத்திட்டம் தொடரும் என நம்புகிறோம். இத்திட்டத்தின் கீழ் தையல், அழகு கலாசாரம், மொபைல் பழுது பார்த்தல், மோட்டார் வாகன பழுதுபார்த்தல், கைவினை, பேக்கிங், கேக் அலங்கரித்தல், உணவு பதப்படுத்துதல் மற்றும் பல கற்கைநெறிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட இளம்பெண்களுக்கு அவர்களின் வாழ்க்கை திறன்களை விருத்திசெய்துகொள்வதற்காக வழங்கப்படுகின்றன.

இது சந்தைகளுக்கான, தொழில்நுட்ப மற்றும் நிதி வளங்களுக்கான அணுகல் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதுடன், நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளில் இணைந்து கொள்வதற்கான பட்டறைகள் உட்பட தலைமை, தொழில்முயற்சியாண்மை மற்றும் சிறு வணிக முகாமைத்துவ திறன்களில் பயிற்சிகளை வழங்குகிறது.

# அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலைசெய்ய சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## கஜேந்திரன் எம்.பி. வேண்டுகோள்

(யாழ் நிருபர்)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் நிலையில் அரசாங்கம் பல ஏமாற்று வேலைகளை செய்வதாகவும், இதனை உணர்ந்து அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலைசெய்ய சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே செல்வராஜா கஜேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல் கைதிகள் 10 தொடக்கம் 20 வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடுகிறார்கள். இவர்களை விடுவிப்பதற்கு அரசாங்கத் தரப்பு எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசாங்கத்திற்கு சர்வதேச ரீதியில் வருகின்ற நெருக்கடிகளை தவிர்ப்பதற்கு சர்வதேசத்தை ஏமாற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, இந்த பயங்கரவாதத் தடைச் சட்டமானது சர்வதேச நியமங்களுக்கு முரணாக மோசமான சட்டம் என்பதை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உட்பட பல்வேறுபட்ட சர்வதேச சமூக அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் இலங்கையின் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான பல்வேறுபட்ட விமர்சனங்களையும் குற்றச்சாட்டுகளையும் முன்வைத்துள்ளன.



நாங்கள் இது தொடர்பான குற்றச்சாட்டுகளை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றோம். இத்தகைய நிலையில் அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி தாங்கள் இதனை மாற்றியமைப்போம் என்று வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்கள். ஆனால், இன்றுவரை அந்த சட்டம் மாற்றியமைக்கப்படவில்லை. எங்களுடைய நிலைப்பாடு இந்தச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும். இந்தச் சட்டம் முழுமையாக நீக்கப்படும்போது அதன்கீழ் கைதுசெய்யப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். அரசாங்கம் பயங்கரவாத சட்டத்தை மாற்றியமைக்கிறோமெனக் கூறிக்கொண்டு பலவித ஏமாற்று வித்தைகளை செய்துவருகின்றது. குறிப்பாக, கடந்த ஒரு வருடத்தில் 16 அரசியல் கைதிகளை விடுவித்துள்ளார்கள். ஆறு மற்றும் எட்டு மாத காலப்பகுதிக்குள் விடுவிக்கப்பட வேண்டியவர்களைத்தான் இந்த அரசாங்கம் விடுவித்தது. மாறாக, நீண்டகாலமாக விசாரணைகள் எதுவுமின்றி தடுத்துவைக்கப்பட்டவர்கள் மற்றும் நீண்டகால கைதிகள் எவரும் விடுவிக்கப்படவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர்கள் நெருங்கி வருகின்ற வேளையில் புலிகளை மீளுருவாக்க முயற்சித்தார்கள், சமூக வலைத்தளங்களில் பிரபாகரனின் படத்தை காண்பித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் சுமார் 100 பேர் வரை கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக் கப்பட்டுள்ளார்கள். அவர்களை விடுவிப் பதற்கான நடவடிக்கைகளை எடுத்துவிட்டு அரசியல் கைதிகளை விடுவித்ததுபோன்று போலியான முகத்தைக் காண்பிப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கையெடுத்து வருகிறது. சர்வதேச சமூகம் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பில் முழுமையான கண்காணிப்பை செய்யவேண்டும். சிறைச்சாலைகளில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், அங்கங்கவீனர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் என பலதரப்பட்ட வர்கள் உள்ள நிலையில் இவர்கள் உள ரீதியாக தாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களை விடுவிப்பதற்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிப்பதற்கும் சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

# மன்னாரில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 581 ஆக அதிகரிப்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துவரும் நிலையில் கடந்த 5 நாட்களில் மாவட்டத்தில் 197 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் நேற்று ஞாயிற்றுக்கிழமை (6) விடுத்துள்ள கொரோனா நிலைவர அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (5) மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது மேலும் புதிதாக 41 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 5 நாட்களில் 197 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் 398 கொரோனா நோயாளர்களும் மாவட்டத்தில் தற்போதுவரை 3 ஆயிரத்து 581 கொரோனா நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் இதுவரை 36 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன – என்றுள்ளது.

# சட்டத்துக்கு மீனவர்கள் மதிப்பளித்ததுபோல் அவர்களின் கோரிக்கைக்கும் நீதித்துறை சரியானதை செய்யவேண்டும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சுமந்திரன் தெரிவிப்பு

(யாழ் நிருபர்)

நீதித்துறைக்கு மதிப்பளித்த மீனவர்கள் வீதியை மறிக்காது விட்டதைபோல் அவர்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்து நீதித்துறை சரியானதை செய்யவேண்டும் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2017ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இழுவை மடி தடைச்சட்டத்தினை சரியாக நீதித்துறை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கோரி



சகல மீனவர்கள் சார்பாகவும் விரைவில் உச்ச நீதிமன்றத்தை நாடவுள்ளோம்.

சுப்பர்மடத்தில் நடத்தப்பட்ட போராட்டம் மிகவும் சிறப்பானது. வீதியை மறித்துப் போராட வேண்டாம் என நீதித்துறை கட்டளையிட்டபோது அதனை மதித்து வீதியை விட்டு விலகினர். நீதித்துறைக்கு மதிப்பளித்த மீனவர்கள் வீதியை மறிக்காது விட்டதைபோல் அவர்களுடைய கோரிக்கைக்கு மதிப்பளித்து நீதித்துறை சரியானதை செய்ய வேண்டும்.

இது மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை மாத்திரமல்ல. தொடர்ச்சியாக பல சந்ததிகள் இங்கே தொழில் செய்வதற்கு வளங்கள் இருக்கவேண்டும். எங்களுடைய கடல் சுற்றுச்சூழல் இந்தவிதமாக பாதிக்கப்படுவதை நாங்கள் அனுமதிக்க முடியாது .அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

# நகரசபையில் கட்டட அனுமதிக்காக வரும் விண்ணப்பங்கள் தேக்கம்

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கஜிதன் வலியுறுத்து

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி நகரசபையில் கட்டட அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் கட்டட விண்ணப்பங்கள் பல தேக்க நிலையில் காணப்படுகின்றன. அவ்வாறு தேக்க நிலையில் காணப்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்து உரிய காலத்தில் கட்டட அனுமதிகளை வழங்கி பொதுமக்களின் சிரமங்களையும், சட்டவிரோத கட்டட அமைப்பையும் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற விசேட அமர்வின்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

கட்டட விண்ணப்பங்களுக்கான அனுமதிகளை உரிய காலத்தில் வழங்குவதில் என்ன பிரச்சினை உள்ளது என ஆராய வேண்டும். பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அறிக்கையிடவில்லையா அல்லது நகர அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கையில் தாமதமா அல்லது சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திலும் தரவுகளிலும் ஏதும் குறைபாடு உள்ளதா என்பதனை சபைக்கு தெளிவுபடுத்த வேண்டும். நகர அபிவிருத்தி அதிகாரசபைதான் தாமதத்திற்கு காரணம் என்றால் அவர்களுக்கு எழுத்துமூலமாக அறிவிக்க வேண்டும்.

நாம் கட்டட விண்ணப்பங்களுக்கு உரிய காலத்தில் அனுமதி வழங்காமையால்தான் சட்டவிரோதக் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. பின்னர் அவ்வாறு சட்டவிரோத கட்டடம் அமைத்தவர்களுக்கு எதிராகவும் நாமே நடவடிக்கையும் எடுக்கிறோம். கட்டடப் பொருட்களின் விலை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. சட்டவிரோத கட்டடங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்க்க உரிய காலத்திற்குள் கட்டட விண்ணப்பங்களுக்கான அனுமதிகளை வழங்க நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

# யாழ். விஞ்ஞான சங்கம் நடத்திய பேச்சுப் போட்டி



(யாழ் நிருபர்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்திய பேச்சுப் போட்டி நேற்று முன்தினம் (05) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பௌதிகவியல்துறை மண்டபத்தில் நடைபெற்றது.

போட்டியில் வடபுல பாடசாலைகள் சார்ந்த 15 மாணவர்களுக்கு இறுதிப் போட்டி நடைபெற்றது. முதலில் 54 மாணவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

நடுவர்களாக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் ஈ.குமரன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் நிறைவில் பேராசிரியர் சிவலிங்கராஜா மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

# மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் முச்சக்கரவண்டி - கூலர் வாகனம் மோதி விபத்து

## சிறுவன் மரணம்; மூவர் படுகாயம்



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, ஓலைத்தொடுவாய் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (5) காலை இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூன்று பேர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் கொண்ணையன் குடியிருப்பைச் சேர்ந்த குடும்பம் ஒன்று தங்கள் கிராமத்திலிருந்து பேசாலை பகுதியிலுள்ள நடுக்குடா பகுதிக்கு சென்றுவிட்டு மறுநாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை (5) காலை வீடு திரும்பியபோது, ஓலைத்தொடுவாய் வீதிக்கூடாக முச்சக்கரவண்டி திரும்பியபோது பின்புறமாக தலைமன்னார் பகுதியிலிருந்து மன்னார் நோக்கி வேகமாக வந்த மீன் ஏற்றும் கூலர் வாகனம் குறித்த முச்சக்கர வண்டியுடன் மோதியதில் முச்சக்கரவண்டியும், பயணித்தவர்களும் தூக்கி வீசப்பட்டனர்.

முச்சக்கரவண்டி பலத்த சேதத்திற்குள்ளாகி வீதிக்கு அருகாமையில் வெள்ளநீருக்குள் வீசி எறியப்பட்ட நிலையில் காணப்பட்டது.

பலத்த காயங்களுக்குள்ளான தாய் சந்தியோகு செல்வி (வயது- 30), மகன்களான கெபின் சுரன் (வயது -6), கானோர் ( வயது- 1) ஆகியோருடன் ஓட்டோ சாரதியும் பலத்த காயங்களுடன் பேசாலை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின் தீவிர சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

இந்நிலையில், மகன் கெபின்சுரன் (வயது -6) மன்னார் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

ஏனைய மூவரும் தொடர்ந்து தீவிர சிகிச்சைக் குள்ளாக்கப்பட்டுள்ளனர். குறித்த கூலர் வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# நீர்வேலி சுடர் கல்வி நிலையத்தில் சங்கரபண்டிதர் நூல் அறிமுகம்





(யாழ் நிருபர்)

நீர்வேலி பிரதேசத்திலிருந்து யாழ் நகர்ப் பாடசாலைகளில் கல்வி கற்கும் 85 மாணவர்களுக்கு நீர்வேலி சுடர் கல்வி நிறுவனம் ஊடாக நேற்றுக் காலை (06) சங்கரபண்டிதர் பற்றிய அறிமுகம் மேற்கொள்ளப்பட்டு அவர் பற்றிய நூல் இலவசமாகக் கையளிக்கப்பட்டது.

நிறுவன இயக்குநர் ஆசிரியர் நா. சசிகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் அறிமுகவுரையை ஆற்றினார்.

# கோவில்குளம் சிறுவர் பாடசாலைக்கு காணி வழங்கினார் வடமாகாண பிரதம செயலாளர்

## விமலின் சுவாசம் மர நடுகையையும் ஆரம்பித்துவைப்பு









(வவுனியா நிருபர்)

வவுனியா, கோவில்குளம் பகுதியிலுள்ள சிறுவர் பாடசாலைக்கு காணி வழங்கிய வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடக்கிற்கு 'விமலின் சுவாசம்' மர நடுகைத் திட்டத்தையும் ஆரம்பித்துவைத்தார்.

அமைச்சர் விமல் வீரவங்சவின் வடக்கு அணியின் ஏற்பாட்டில் வவுனியா, கோவில்குளம் சனசமூக நிலையத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா, கோவில்குளம் பகுதியில் பல வருடமாக இயங்கிவருகின்ற சிறுவர் பாடசாலைக்கான கட்டிட வசதிக்கு நிரந்தர காணி இல்லாத நிலை காணப்பட்டது. இது தொடர்பில் அமைச்சர் விமல் வீரவங்சவின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டதையடுத்து, அமைச்சரின் கல்விக்கான செயற்றிட்டத்தின் ஊடாக காணி அமைச்சர் சந்திரசேனவின் அனுமதியுடன் முன்னாள் வவுனியா மாவட்ட அரச அதிபரும், தற்போதைய வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேனவின் ஆலோசனையுடன் காணி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கோவில்குளம் பகுதியில் அமைந்திருந்த குறித்த காணியினை வவுனியா அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசனால் வடக்கின் விமல் வீரவங்ச அணியினர் ஊடாக கோவில்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் கையளிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதனை பிரதம செயலாளர், மாவட்ட அரச அதிபர் மற்றும் வடக்கின் விமல் வீரவங்ச அணியினர் இணைந்து கோவில்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் கையளித்தனர்.

அத்துடன், வடக்கிற்கு 'விமலின் சுவாசம்' என்னும் தொனிப்பொருளில் 1000 இலுப்பை மரங்களை நடும் திட்டத்தையும் பிரதம செயலாளர் ஆரம்பித்துவைத்தார்.

இந்நிகழ்வில், அமைச்சர் விமல் வீரவங்சவின் வடமாகாண அணியினர், கோவில்குளம் கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# காட்டு யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு

(அநுராதபுரம் செய்தியாளர்)

காட்டு யானையின் தாக்குதலில் படுகாயமடைந்த விவசாயி ஒருவர் சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக மதவாச்சி பிஹிம்பிய கொல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை பிஹிம்பியகொல்லாவ களஞ்சிய பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் 54 வயதுடைய மதவாச்சி பிஹிம்பியகொல்லாவ கள்ளஞ்சிய பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட விவசாயி ஒருவரே பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவதினத்தன்று மாலை குறித்த விவசாயி தனது வயல் நிலத்துக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக சென்றுகொண்டிருக்கும்போது வீதியின் ஓரத்தில் நின்ற யானை துரத்தி தாக்கியுள்ளது.

அவரது கூக்குரல் சத்தத்தைக் கேட்டு சம்பவ இடத்துக்கு விரைந்துவந்த விவசாயிகள் சிலரது உதவியுடன் படுகாயமடைந்த நபர் சிகிச்சைக்காக ரம்பாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பிஹிம்பியகொல்லாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காஷ்மீர் விடுதலைக்கான அமைப்பினால் கொழும்பில் கவனயீர்ப்புப் போராட்டம்

## ஐ.நா. அலுவலகம் - இந்திய தூதரகத்தின் முன்னால் அணிதிரள்வு







(நூருல் ஹுதா உமர்)

காஷ்மீர் விடுதலைக்கான அமைப்பின் ஏற்பாட்டில் காஷ்மீர் கறுப்பு தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு காரியாலயத்தின் முன்னாலும், இந்திய தூத ரகத்தின் முன்னாலும் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை (05) பதாகைகளை ஏந்திக்கொண்டு காஷ் மீர் விடுதலைக்கான அமைப்பினர் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெறும் அட்டூழியங்களையும், ஆக்கிரமிப்புப் படைகள் அப்பாவி காஷ்மீரிகளை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதையும் இவர்கள் தமது பதாகைகளில் சுட்டிக்காட்டியிருந்தனர். ஐக்கிய நாடுகள் சபையும் ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பும் இவ்விடயத்தில் தலையிட்டு இரு நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளை தீர்த்துவைக்க வேண்டும். சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு எதிராக காஷ்மீரிகளின் சுயநிர்ணய உரிமைக்கான நியாயமான போராட்டத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதுடன், காஷ்மீர் மக்களின் நிரந்தர துயரங்களை நோக்கி உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், காஷ்மீர் மக்களின் அபிலாஷைகளுக்கேற்ப காஷ்மீர் பிரச்சினைக்கு ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களின் அடிப்படையில் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதை வலியுறுத்துவதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஆக்கிரமிப்புப் படைகள் கடந்த ஏழு தசாப்தங்களாக சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள ஜம்மு மற்றும் காஷ்மீரில் செய்த மனித உரிமை மீறல்களை கண்டித்த அவர்கள் காஷ்மீர் மக்களின் விருப்பத்திற்கேற்ப காஷ்மீரில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் பொது வாக்கெடுப்பு நடத்தப்படுவதை உறுதிசெய்ய உலக நாடுகளும் கடமைப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டனர்.

கவனயீர்ப்புப் போராட்டத்தை அடுத்து மகஜர்களும் கையளிக்கப்பட்டன.

# மொனராகலை வைத்தியசாலையில் கொரோனா நோயாளர்களுக்கு இடப்பற்றாக்குறை

(கெலும் குணதிலக)

மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் கொரோனா நோயாளர்களுக்கு பெரும் இடப்பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக கட்டில்களுக்கு கீழே இருந்தும் நோயாளர்கள் சிகிச்சைபெற்று வருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வைத்தியசாலையில் நேற்று (06) வரை கொரோனா நோயாளர்கள் 68 பேர் சிகிச்சைபெற்று வருவதாக வைத்தியர் தனபால ரத்நாயக்க தெரிவித்தார். தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பே இடப்பற்றாக்குறைக்குக் காரணம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் நேற்றுவரை 14 பேர் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்னேஸ்வரம் பத்ரகாளி பிரத்யங்காரா தேவிபீட மகா கும்பாபிஷேக குடமுழுக்குப் பெருவிழா









(ரஸீன் ரஸ்மின்)

சிலாபம், முன்னேஸ்வரம் ஸ்ரீ அதர்வண மகா பத்ரகாளி பிரத்யங்காரா தேவி பீடம் நவகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா நேற்று (06) காலை இடம்பெற்றது.

முன்னேஸ்வரம் சிவஸ்ரீ இரா.முரளிதரக் குருக்களினால் இந்த மகா கும்பாபிஷேகக் கிரியைகள் நடத்தப்பட்டன.

பக்தர்களுக்கு எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிமுதல் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிவரை இடம்பெற்றது.

நேற்று (06) அதிகாலை 5.30இற்கு ஆரம்பமான விநாயகர் பூஜை, புண்ணியாக வாசனம், நித்ய துவஜ பூஜை, யாகசாலை பிரவேசம், நான்காம் கால யாகப் பூஜை, நவ அக்னி பூஜை, மஹா பூர்ணாகுதி, விஷேட உபசார சமர்ப்பணம், விஷேட தீபாராதனை, அந்தர் பலி, பஹிர் பலி, முகூர்த்த தோஷ நிவாரணம், யாத்ரா தானம், சர்வமங்கள வாத்தியம், வேதசோஷம், மங்கள இசை முழங்க பக்தர்களின் அரோஹரா கோஷத்துடன் பிரதான கும்பங்கள் மீது மீனலக்ன சுபமுகூர்த்த சுபவேளையில் ஸ்தூபி அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மூல மூர்த்திக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதனையடுத்து,

தசமங்கள தரிசனம், திருக்கதவு திறத்தல், எஜமான் அபிஷேகம், குருமாரின் ஆசியுரை, குருமார் சம்பாவன கௌரவிப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து மூல மூர்த்திகளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மகா அபிஷேகம், விஷேட பூஜை, திருமுறை பாராயணம், மகேஸ்வர பூஜை என்பனவற்றுடன் அன்னதானமும் இடம்பெற்றது.

மேலும் இன்றுமுதல் 18ஆம் திகதி வரை 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழாவுக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வர்த்தக நிலையத்தில் திருடவந்தவர் ஊழியரின் எதிர்ப்பால் தப்பியோட்டம்

## ஹக்மன பகுதியில் சம்பவம்

வர்த்தக நிலையத்தில் திருடுவதற்கு வந்த நபரை, அந்த வர்த்தக நிலையத்தில் பணியாற்றிய ஊழியர் துரத்திய சம்பவம் மாத்தறை, ஹக்மன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கெமராக்களில் பதிவாகியுள்ளது.

ஹக்மன, வெபத்தஹிர பிரதேசத்திலுள்ள பேக்கரி ஒன்றில் நேற்று முன்தினம் (05) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர் குறித்த வர்த்தக நிலையத்தில் பணியாற்றிய ஊழியரை கூரிய ஆயுதத்தைக் காட்டி மிரட்ட முற்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து அவசரமாக செயற்பட்ட குறித்த பணியாளர், கேக் வெட்டுவதற்காக வைத்திருந்த கத்தியால் சந்தேக நபரை தாக்க முயற்சித்துள்ளார். இதன்போது கொள்ளையிட வந்த நபர் உடனடியாக அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதுடன், குறித்த பணியாளர் விரைவாக சந்தேகநபர் வந்த மோட்டார்சைக்கிளின் இலக்கத்தைப் பதிவு செய்துள்ளார்.

சந்தேகநபரை கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை ஹக்மன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மொனராகலையில் குடும்பஸ்தருக்கு நீதிமன்றம் மரணதண்டனை விதிப்பு

(கெலும் குணதிலக்க)

தனிப்பட்ட விரோதத்துக்காக நபர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டுப் படுகொலைசெய்த குற்றத்துக்காக மொனராகலையில் குடும்பஸ்தர் ஒருவருக்கு மேல்நீதிமன்றத்தினால் மரணதண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மொனராகலை மேல்நீதிமன்ற நீதிபதி நதீ அபர்ணா சுவந்துருகொட கடந்த வெள்ளிக்கிழமை இந்தத் தீர்ப்பினை வழங்கியுள்ளார்.

சியம்பலாண்டுவ கொவிந்துபுர கந்தகெட்டியவைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவருக்கே மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது. கொவிந்துபுரவில் கடந்த 2018ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் திகதி குறித்த படுகொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.





நாட்டின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அநுராதபுரம் கச்சேரி வளாகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக்க ஜயசுந்தரவினால் மரக்கன்று நாட்டிவைக்கப்பட்ட நிகழ்வினை படங்களில் காணலாம். (படங்கள்: அநுராதபுரம் செய்தியாளர்)

# கூரிய ஆயுதங்களைக் காட்டி மிரட்டி ரூ. 6 இலட்சம் பெறுமதியான நகை கொள்ளை

## பொலன்னறுவை சிங்கபுரத்தில் சம்பவம்

(அநுராதபுரம் செய்தியாளர்)

பொலன்னறுவை பகுதியிலுள்ள வீடொன்றில் ஆறு இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதி வாய்ந்த தங்க நகைகளை கொள்ளையடித்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் பொலன்னறுவை பொலிஸ் பிரிவிலுள்ள சிங்கபுர பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வீட்டு உரிமையாளரினால் டொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டினை அடுத்து கொள்ளையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைதுசெய்வதற்காக பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேலும், சம்பவ தினத்தன்று இரவு ஆள் அடையாளம் தெரியாதவண்ணம் முகமூடிகளை அணிந்தவண்ணம் வீட்டுக்குள் புகுந்த இரு கொள்ளையர்களே வீட்டிலுள்ளவர்களை கூரிய ஆயுதங்களை காண்பித்து அச்சுறுத்தி தங்க நகை மற்றும் பெறுமதிவாய்ந்த இன்னும் சில பொருட்களை கொள்ளையடித்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்பது மேலும் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலன்னறுவை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.









கொழும்பு லயன்ஸ் கிளப் ஒவ் கோல் சிட்டியின் 14ஆவது வருடாந்த கூட்டம் கொள்ளுப்பிட்டி சென். மைக்கல் வீதி கோல்டன் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிராந்திய செயற்பாட்டாளர் லயன் கமால் சில்வா, வலய செயற்பாட்டாளர் லயன் தினேஸ் அமிர்தய்யா ஆகியோருடன் கழகத் தலைவர் லயன் சொ. செந்தில்குமார், செயலாளர் லயன் மனோகரன், பொருளாளர் லயன் சதாசிவம், ஆளுநரின் செயலாளர் லயன் பீட்டர் செல்வராஜ், செயற்பட்டாளர் லயன் பொன் பத்மநாதன், லயன் கார்த்திகேசு, உறுப்பினர்களான லயன் சிவகுருநாதன், லயன் பாலசிறிதரன், லயன் தேவராசன், லயன் சிவகுமார் (சுசி), லயன் ஆனந்தராஜ், லயன் லோகவர்த்தனன், லயன் உதயவர்த்தனன், லயன் விஜயகுமார், லயன் ராஜேந்திரன் மற்றும் அங்கத்தவர்களும் கலந்து சிறப்பித்தனர்

# நாட்டை சிறப்பாக நிர்வகிக்கிறார் ஜனாதிபதி கோட்டா; மின் துண்டிப்பைச் செய்து அதிகாரத்தைப் பெற சிலர் முயற்சி

## நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு

மக்களைக் கொன்று பிணங்களை வைத்து அரசியல் செய்ய முயற்சிக்காதீர்கள். மின்சாரத்தை துண்டித்து அதிகாரத்தைப் பெற முயற்சிக்காதீர்கள். அவை தவறான செயல்களாகும் - என ஆளுந்தரப்பு பிரதம கொரடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் அனைத்து கிராமங்களையும் உள்ளடக்கி அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் வரவு-செலவுத் திட்ட ஒரு இலட்சம் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் நிக்கவெரட்டியவில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே ஆளுந்தரப்பு பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் உரையாற்றுகையில், எரிவாயு பிரச்சினையின் பின்னணியில் யாரோ இருப்பதாக நான் கூறினேன். அப்போது நிறைய பேர் என்னை விமர்சித்தார்கள். இப்போது எரிவாயு அடுப்புகள் வெடிப்பதை பார்த்திருக்கிறீர்களா? முகநூலிலுள்ள அனைத்து ஜே.வி.பிகாரர்களும் என்னைக் குற்றஞ்சாட்டத் தொடங்கினர். கெட்ட வார்த்தையில் அவர்கள் என்னைத் திட்டினார்கள்.

முகநூல் ஊடாக ஜே.வி.பியின் ஒழுக்கத்தை நீங்கள் நன்றாகக் கவனிக்கலாம். மின்சாரத்திலும் இதேபோன்ற பிரச்சினை உள்ளது. மாதக் கணக்கில் மூடப்படுகிறது. இந்த மின் நெருக்கடிக்குப் பின்னால் ஏதோ இருக்கிறது என்பதை மக்கள் உணரவில்லையா? இதன் பின்னணியில் சதி உள்ளது.

ஜனாதிபதியின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த இடமளிப்பதில்லை. இந்த விடயங்களுக்குப் பின்னால் ஏதோ இருக்கிறது. எரிவாயு அடுப்பு வெடிப்பு விவகாரம் வெளியில் வந்ததுபோன்று இந்த விடயங்களும் எதிர்காலத்தில் வெளிச்சத்துக்கு வரும்.

நமது ஜனாதிபதி இது தொடர்பில் நடவடிக்கை எடுத்துவருகிறார். பொலிஸார் சாமர்த்தியமாக அவற்றையெல்லாம் பறைசாற்றாமல் அம்பலப்படுத்துவர். இந்த நாட்டு மக்களின் வாழ்க்கையுடன் விளையாட வேண்டாம் என தொழிற்சங்கங்களுக்கு கூறுகின்றோம்.



இதன் பின்னணியில் முழுமையாக சூழ்ச்சி காணப்படுகிறது. நாங்கள் தேர்தலை எதிர்கொண்டு மக்களின் விருப்பத்திற்கு இடமளிப்போம்.

தேர்தல் வரும்போது இந்த பேச்சுகள் எல்லாம் குறையும். ஏனெனில், தேர்தல் இல்லாததால் இவ்வாறு தற்பெருமை பேசுகிறார்கள். தேர்தலில் வெற்றிபெறுவோம் என்றார்கள். கோட்டாபயவுடன் சஜித் பிரதமராவார் என்றார்கள். தேர்தல் முடிவுகள் வெளிவர மூன்று நாட்கள் எடுக்கும் என்றார்கள். இப்படி நிறைய விடயங்களை சொன்னார்கள். இருப்பினும், தேர்தல் முடிவுகள் உங்களுக்கு நினைவிருக்கலாம். எங்களை எவ்வளவுதான் தாக்கினாலும் அதனை எதிர்கொள்ளும் வலிமை எங்களிடம் உள்ளது. சில குறைபாடுகள் இருந்தாலும், அவற்றைக் கடந்து முன்னேறும் திறன் நமது அரசுக்கு உள்ளது. எங்களை எளிதில் வீழ்த்த முடியாது.

தேவாலயத்தில் வெடிகுண்டு வைத்தவர்தான் பெல்லன்வில கோவிலில் வெடிகுண்டு வைத்தவர். வைத்தியசாலையில் வெடிகுண்டு வைத்ததும் அதே மனிதர்தான். குண்டு வெடித்திருந்தால் தேசிய பாதுகாப்பு பற்றி கோட்டாபய பேசுவதில் பயனில்லை என்பார்கள்.

பொலிஸாரைப் பயன்படுத்தி இது தொடர்பில் ஆராயுமாறு ஜனாதிபதி பணித்திருந்தார். யாரையும் தப்பிக்க விடாதீர்கள் என்று ஜனாதிபதி கூறினார்.

இவற்றின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதை நாம் சரியாகப் பார்க்கவேண்டும். அரசு வெடிகுண்டுகளை வைத்ததாக வதந்தி பரவியது. இந்த விடயங்களை நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

பேராயரை ஹரீன் பெர்னாண்டோ அவதூறாகப் பேசினார். இறுதியாக சஜித் பிரேமதாச அவரை தேவாலயத்திற்குள் அழைத்துச் சென்று மன்னிப்புக் கோரினார். இந்த விடயங்களை நாம் இன்னும் பொறுப்புடன் பார்க்க வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

இல்லாவிடின் கொலையாளிகளும் எதிரிகளும் தப்பித்துவிடுவார்கள். அந்த வெடிகுண்டு வெடித்தால் அது பொருளாதாரத்திற்கு மட்டுமன்றி நாட்டுக்கே பெரும் அவமானம். அதுமட்டுமன்றி நாட்டில் எத்தனை உயிர்கள் பறிபோகும். அந்த விஷயங்கள் குறித்த உண்மை வெளிவருகிறது. பொலிஸார் சரியாகச் செயற்பட்டு உண்மையான குற்றவாளிகளைத் தண்டிப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். எதிர்க்கட்சியில் மூன்றில் இரண்டு பங்கு அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிப்பவர்களும் உள்ளனர். இன்றும் பிரேமதாச அது தவறு என்கிறார். அவற்றை கண்டுபிடித்ததற்காக அவர் பாராட்டவில்லை. இந்த சதிகளால் எப்படி வெற்றிபெறுவது என்று பார்ப்போம்.

கோட்டாபய ராஜபக்ஷ சரியான தலைவர். ஊழலற்று இந்த நாட்டை சரியாக ஆட்சிசெய்யும் தலைவர். இந்நாட்டு மக்களை அபரிமிதமாக நேசிக்கும் மக்களின் தலைவருமாவார்.

அதனால்தான் தடுப்பூசி ஏற்றப்பட்ட உலகின் 6ஆவது நாடாக வரமுடிந்தது. தடுப்பூசி ஏற்றுங்கள், அரசியல்வாதிகள் அதற்கு உதவ வேண்டும் என்று அவர் எப்போதும் கூறினார்.

தடுப்பூசி வெற்றியடைய மகா சங்கத்தினரும் முக்கிய பங்காற்றினர். நம் நாடு பாதுகாக்கப்படுகிறது. தடுப்பூசி ஏற்றப்பட்டதால் இன்று நீங்களும் நானும் ஒன்றாக இருக்கிறோம். தடுப்பூசி ஏற்றாமல் இருந்திருந்தால் இந்தியாவைபோல் மக்கள் வீதிகளில் விழுந்து இறந்திருப்பார்கள். உலகில் இன்னும் மக்கள் இறந்துகொண்டிருக்கிறார்கள். தடுப்பூசி ஏற்றியதால் உயிர் பிழைத்து வருகிறோம்.

தடுப்பூசி கொள்வனவு எளிதானதல்ல. தடுப்பூசி கொள்வனவு செய்யப்படவில்லை என்றார்கள். தடுப்பூசி அதிகளவில் கொண்டு வரப்பட்டதாகக் கூறினார்கள். அவற்றைக் கொண்டுவந்த பிறகு தடுப்பூசியை செலுத்திக்கொள்ள வேண்டாம் என்று சொன்னார்கள். இரண்டு வருடங்களில் தடுப்பூசி ஏற்றியவர்கள் இறந்துபோவதாக கூறப்பட்டது. வேறு பக்கவிளைவுகள் ஏற்படும் என்றார்கள். மக்களை தவறாக வழிநடத்தும் அலை போன்ற ஒன்றை உருவாக்க முயன்றார்கள்.

இந்த வேலைத்திட்டங்களை சீர்குலைத்து கோட்டாபய ராஜபக்ஷவை ஒரு தோல்வியுற்ற தலைவர் என்று மக்களுக்கு காட்டி அரச அதிகாரத்தைக் கைப்பற்ற நினைத்தனர்.

சில அரச அதிகாரிகள் தொலைக்காட்சியில் பேசியதை நாம் மறந்துவிடவில்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயல் இருந்ததால் நல்லது. சஜித்தின் தந்தை இருந்திருந்தால் தொலைக்காட்சியில் பேசுபவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்று பார்த்திருக்கலாம். எரித்த இடத்தைக்கூட கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கும். நமது ஜனாதிபதி நாட்டை தந்திரோபாயமாக ஆட்சி செய்கிறார். அவரின் புண்ணியத்தில் இன்று உயிருடன் இருக்கிறோம். அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லா செய்திகளும் உண்மையல்ல. எனவே, மக்களை ஏமாற வேண்டாமென்று கூறுகிறேன் - என்றார்.

# நாட்டு மக்களிடம் மனிதநேய வழியை கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும்

## பேராசிரியை சந்திமா விஜேகுணவர்தன தெரிவிப்பு



(கலாபூஷணம்: எம். ஏ. எம். நிலாம்)

மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா போன்ற தலைவர்கள் காட்டிய மனிதநேய வழியை நாட்டு மக்கள் மத்தியில் கட்டியெழுப்பவேண்டிய அவசியத்தை சத்திய இலங்கை மனிதநேய அமைப்பின் தலைவர் பேராசிரியை சந்திமா விஜேகுணவர்தன வலியுறுத்தியுள்ளார்.

அண்ணல் காந்தி உட்பட 12 நாட்டுத் தலைவர்களின் பாதையில் இலங்கையில் மனித நேயத்தை வளர்த்தெடுப்பதற்கான அரசியல், இன, மத, மொழி பேதமற்ற ஒன்றிணைப்பாக இந்த பொது அமைப்பு செயற்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாரிய சிக்கல்களுக்குள் மாட்டியுள்ள நூல் பந்தொன்றை அவிழ்க்கவேண்டிய அவலத்துக்குள் நாடு சிக்குண்டுள்ளது. இதனை அவிழ்ப்பது இலகுவான காரியமல்ல. என்றாலும் கட்டாயமாக அதனை செய்தாகவேண்டியுள்ளது. இந்தச் சிக்கலிலிருந்து விடுபட மக்களிடையே மனித நேயத்தைக் கட்டியெழுப்பவேண்டியுள்ளது. இதனை இன, மத, மொழி, கட்சி அரசியல் பேதமின்றி முன்னெடுக்கப்பட வேண்டும் என இலங்கை மனிதநேய அமைப்பின் இணைப்பாளரும், அழைப்பாளருமான கலாநிதி சந்திமா விஜேகுணவர்தன சுட்டிக்காட்டினார்.

எமது தேசம் சுதந்திரமடைந்து 74 வருடங்களாகின்றன. ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் நாடு இன்னமும் சங்கமிக்கவில்லை. கட்சி அரசியலில் சிக்கி நாடும் மக்களும் அவதிப்பட்டுக்கொண்டிருப்பதையே அவதமானிக்க முடிகிறது, இனங்களிடையே ஒற்றுமை வலுப்பெறவில்லை. மனிதநேயம் மறக்கப்பட்டதொன்றாகவே காணப்படுகின்றது. அழகான எமது நாட்டில் என்ன வளமில்லை. சகல வளங்களும் செழித்துக் காணப்படும் நாட்டில் மக்கள் பிளவுபட்டுப்போயுள்ளனர். மதத்தால், இனத்தால், மொழியால், அரசியலால் மோதிக்கொண்டிருக்கின்றோம்.

காலம் கடந்துகொண்டே போகிறது. எமது எதிர்காலச் சந்ததியினர் எம்மைப் பார்த்து சபிக்கும் அவலம் ஏற்பட இடமளிக்கக்கூடாது. மக்களிடையே மனிதநேயம் கட்டியெழுப்பப்பட வேண்டும். அனைவரும் மனிதர்கள் என்ற மனநிலை எல்லோரிடமும் ஏற்பட வேண்டும். அதற்கான நிலையான, நீடித்து நிற்கக்கூடிய வேலைத்திட்டத்தை அனைவரும் ஒன்றுகூடி முன்னெடுக்க வேண்டும். நாட்டுக்கு தேசிய கொள்கையொன்று மிக முக்கியமானமாகும்.

நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசும் தேசிய கொள்கையொன்றை வகுத்துச் செயற்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். இதன்பொருட்டு இன, மத, மொழி பேதங்களைக் கடந்து மனிதநேயத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய அமைப்பொன்று உதயமாகியுள்ளது. மக்களிடையே பேதத்தைக் கலைந்து வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு உட்பட முழு தேசத்தையும் ஒன்றிணைத்துச் செயற்படும் வகையில் இந்த சத்தியத்துக்கான இலங்கை மனிதநேயம் எனும் பெயரிலான அமைப்பு கொழும்பில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை மாலை இந்த அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வை ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

சத்ய ஸ்ரீலங்கா மனிதநேயம் என்ற அமைப்பில் முதலாவது கருத்தொடரின்போது கல்வித்துறை தொடர்பில் கல்வியியலாளர் கலாநிதி செயினுலாப்தீன் நஜிமுதீனும் வியாபாரம் மற்றும் வர்த்தகத்துறை குறித்து பேராசிரியர் இசுரு பண்டாரவும் தொழில்துறை தொடர்பில் பொறியியலாளர் அனுராத தென்னகூனும் இன ஒருமைப்பாடு தொடர்பில் பேராசிரியர் ஜி.ஜி.சமல் சஞ்சீவவும், தேசிய திட்டம் தொடர்பில் அமைப்பின் தலைவர் பேராசிரியர் சந்திமா விஜேகுணவர்தனவும் விளக்கமளித்தனர்.

அண்ணல் மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா, ஜவஹர்லால் நேரு, லீகுவான்யூ, யாசிர் அரபாத், டத்தோ மஹதிர் முஹம்மத், இம்ரான் கான் உட்பட 12 உலகத் தலைவர்களை முன்னுதாரணமாகக்கொண்டு இவ்வமைப்பு செயற்படுவதாகவும் நாட்டுக்குப் பொருத்தமான தேசிய கொள்கையொன்றை வகுத்து மக்கள் முன் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பில் நாடுமுழுவதிலும் மக்கள் சந்திப்புகளை முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் கட்சி அரசியல் இன, மத, மொழி பேதமின்றி அமைப்பு இணைந்து செயற்படவிருப்பதாகவும் பேராசிரியர் சந்திமா விஜேகுணவர்தன தெரிவித்தார்.

இந்தக் கருத்தாடலை ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரம முன்னெடுத்துச் சென்றார். பாகிஸ்தான், பலஸ்தீன், சவூதி அரேபிய, பங்களாதேஷ் உட்பட பல்வேறு நாடுகளதும் தூதுவர்கள், உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

### புத்தளம் - வென்னப்புவ பகுதி

# விபத்துகளில் இருவர் பலி

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் சிலாபம் பண்டாரவத்த பகுதியில் நேற்று முன்தினம் (05) இடம்பெற்ற லொறி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பாறை கோனாகொல்ல பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற தினம் சிலாபம் பகுதியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணத்திக்கொண்டிருந்த லொறியொன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி வீதியோரத்தில் நின்ற மா மரமொன்றில் மோதியுள்ளது.

இதன்போது குறித்த லொறியில் பயணம்செய்த இளைஞர் காயமடைந்த நிலையில், அங்கிருந்தவர்களால் சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த போதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சிலாபம் பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, வென்னப்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பரவில போலான பகுதியில் புகையிரதத்தில் மோதி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை (05) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணம் செய்த புகையிரதத்தில் மோதியே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் தொடர்பில் இதுவரை எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்த வென்னப்புவ பொலிஸார், உயிரிழந்த நபரின் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மொன்றியலில் பொறியியலாளர் பாடநெறியை பூர்த்திசெய்தோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு









(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

மொன்றியல் கல்வி நிறுவனத்தின் பொறியியலாளர் தொழில் தேர்ச்சி பாடநெறியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் இம்தாத் நசீர் தலைமையில் நேற்றுமுன்தினம் (05) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப், சட்டமுதுமாணி முன்னாள் கல்முனை மேயர் நிஸாம் காரியப்பர், இலங்கை சுங்க திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் சட்டமுதுமாணி சம்சுடீன் நியாஸ், பேராசிரியர் சோ.சந்திரசேகரம், பேராசிரியர் பர்ஸானா, பொது நிர்வாக அமைச்சின் முன்னாள் செயலாளர் மாலா பஸ்நாயக்க, மற்றும் நிறுவனத்தின் ஆலோசகர் முர்ஷீட் சின்னலெவ்வை ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேராசிரியர்களினால் பொறியியலாளர் தொழில்பயிற்சி பாடநெறியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகளுக்கு மொன்றியல் கல்வி நிறுவனத்தின் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

# நாடாளுமன்ற 'சார சங்ஹிதா' புலமை இலக்கிய நூல் வெளியீட்டு விழா நாளை

நாடாளுமன்ற சார சங்ஹிதா' புலமை இலக்கிய நூலின் இரண்டாவது பதிப்பின் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நாடாளுமன்ற குழு அறை இலக்கம் 01இல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோர் தலைமையில் இடம்பெறவுள்ளது.



நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவின் வழிகாட்டலின்கீழ் பல்வேறு பிரிவுகளில் கடந்த வருடம் நாடாளுமன்ற 'சார சங்ஹிதா' புலமை இலக்கிய நூலுக்கான கட்டுரைகள் கோரப்பட்டன.

சட்டவாக்க செயற்பாடுகள், நிலைபேறான அபிவிருத்தி, தேர்தல் முறைமை மற்றும் அதன் திருத்தங்கள், நாடாளுமன்ற அறிக்கையிடலும் வெகுஜன ஊடகமும், பொதுமக்கள் தொடர்பு மற்றும் இலங்கை பெண்கள் அரசியலில் புதிய போக்கு ஆகிய பல்வேறு தலைப்புகளில் கல்வித்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர்களின் கட்டுரைகள் இந்த நூலில் உள்ளடங்கப்பட்டுள்ளன.

இதன் மீளாய்வுக் குழுவில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ரத்னசிறி அரங்கல, கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் அஜந்தா ஹப்புஆராச்சி, களனி பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.ஜீ.யோகராஜா, கொழும்பு பல்கலைக்கழக ஸ்ரீ பாளி கல்லூரியின் கலாநிதி டியூடர் வீரசிங்க மற்றும் களனி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் விஜயானந்த ரூபசிங்க ஆகியோர் காணப்படுகின்றனர்.

நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பதிப்பான 'நாடாளுமன்ற சார சங்ஹிதா' புலமை இலக்கிய நூல் நாட்டின் நூலகங்கள் மற்றும் தேவையானவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. மேலும், நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தை தொடர்பு கொள்வதன் மூலம் தேவையானவர்கள் இந்த நூலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# திருகோணமலை தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் தீப்பரவல்




(ரவ்பீக் பாயிஸ்)

தேசிய சேமிப்பு வங்கியின் திருகோணமலை கிளையில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை பிரதான பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியின் திருகோணமலை கிளையில் நேற்று முன்தினம் (05) அதிகாலை தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் (05) காலை வங்கியிலிருந்து புகைமூட்டம் வெளிவந்த நிலையில் பொதுமக்களினால் திருகோணமலை நகரசபை தீயணைப்புப் படையினருக்கு தகவல்கள் வழங்கியதையடுத்து தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாக தெரியவருகிறது.

தேசிய சேமிப்பு வங்கியின் திருகோணமலையில் திங்கள்முதல் வெள்ளிக்கிழமை வரை பாதுகாப்பு உத்தியோகத்தர் கடமையில் இருப்பதாகவும் விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பாதுகாப்பு உத்தியோகத்தர் கடமைக்கு அமர்த்தப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தீப் பரவலுக்கான காரணம் வெளிவராத நிலையில் வங்கியின் ஒரு பகுதி தீப்பற்றி உள்ளதாகவும் தெரியவருகின்றது. தீ முற்றாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட நிலையில் தீப்பரவல் தொடர்பில் மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சுதந்திர தினத்தில் மட்டு. சிறையிலிருந்து 11 கைதிகள் பொதுமன்னிப்பில் விடுதலை





(மட்டக்களப்பு நிருபர்)

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 74ஆவது தேசிய சுதந்திர தினத்தினை முன்னிட்டு ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைவாக மட்டக்களப்பு சிறையிலிருந்து பதினொரு கைதிகள் கடந்த வெள்ளிக்கிழமை (04) விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் எஸ்.எல்.விஜேசேகர தலைமையில் இக்கைதிகள் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் எம்.மோகனதாஸ் உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகளும் இதன்போது கலந்துகொண்டனர்.

சிறு குற்றங்கள் புரிந்ததன் அடிப்படையில் தண்டனை பெற்றுவந்த கைதிகளே இவ்வாறு பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.




ஒலுவில் கடற்கரைப் பிரதேசத்தில் மீனவர் ஒருவருக்கு அகப்பட்ட பெருவாரியான பாரைக்குட்டி மற்றும் சுறா மீன்களில் ஒரு பகுதியைக் காணலாம்.

(படங்கள் - மாவடிப்பள்ளி நிருபர்)

## போடியார் புலம்பல்!



நாட்டு மக்களெல்லாம் தியாகம் செய்ய வேண்டுமாம் என்று நம்மட சனாதிபதி சுதந்திர நாளில சொன்னதப் பார்த்தால் எல்லாம் மக்களையும் பட்டினி போட்டு சாகடித்துப்போட்டு தியாகிகள் என்று மரணச் சான்றிதழ்கள் வழங்கப்போறாரோ...! நல்ல சோக்கான கத இது எலுவா...?

# திருமலையில் ஹெரோயினுடன் இளைஞர் கைது

(பதுர்தீன் சியானா)

திருகோணமலை ஜமாலியா பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞரொருவரை கடந்த வெள்ளிக்கிழமை (04) கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை பிராந்திய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த இடத்துக்கு சென்று சோதனையிட்டபோது குறித்த இளைஞனிடம் 5 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த இளைஞரை தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 28 வயதுடைய ஜமாலியா பகுதியைச் சேர்ந்தவர் எனவும் கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# பொலித்தீன் பாவனையற்ற பாடசாலையாக மாற்ற கல்முனை அல் - அஸ்ஹர் மாணவர்கள் உறுதியுரை

(கல்முனை நிருபர்)

சுற்றுப்புறச் சூழலை சுத்தமாகவும், நிலைபேறானதாகவும் மாற்றும் வகையில் கல்முனை அல்-அஸ்ஹர் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ஏ.எச்.அலி அக்பர் தலைமையில் "சுத்தமான புறச்சூழல்" எனும் தொனிப்பொருளில் பாடசாலையில் அதிகமாக வெளியேற்றப்படும் கடதாசிக் கழிவுகள் மற்றும் பொலித்தீன் பாவனையை தவிர்க்கும் விதமாகவும், இதனை குறைக்கும் முகமாகவும் அதற்கான வழிமுறைகள், ஒழுங்குகள் போன்றவற்றை எடுத்துரைக்கும் வகையில் பாடசாலை சுற்றாடல் கழகத்தின் ஏற்பாட்டில் நிகழ்வொன்று அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றிருந்தது.



காலை ஆராதனையில் பொலித்தீன் பாவனையற்ற, கடதாசி கழிவுகளற்ற பாடசாலையாக மாணவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டு, விழிப்புணர்வு பதாகைகள் காட்சிக்கும் வைக்கப்பட்டிருந்ததுடன், இதன்போது மாணவர்களின் உறுதியுரையும் இடம்பெற்றது.


இம்முன்மாதிரியான செயற்பாடு மூலம் பாடசாலை சுற்றுச்சூழல் சுத்தமடைவதுடன் ஒரு வழிகாட்டலாகவும் அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. மேலும் "பசுமையான சுற்றுப்புறச்சூழல்" உருவாகவேண்டும் என்பதே சகலரதும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

இதேவேளை, குறித்த பாடசாலையில் டெங்கு நுளம்பு பரவலை சுற்றுச்சூழலிலிருந்து கட்டுப்படுத்தும் வகையில் மாணவர்கள் மத்தியில் மாபெரும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு கடந்த வருடம் இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் மின்சாரம் தாக்கி காட்டு யானை உயிரிழப்பு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய், கித்துலுத்துவ பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி காட்டு யானையொன்று நேற்று (06) அதிகாலை உயிரிழந்துள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



கால்நடை வைத்தியரின் தலையீட்டில் யானையின் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படும் எனவும் வனஜீவராசி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கித்துலுத்துவ பிரதேசத்தில் யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகள் மற்றும் மனிதப் பிரச்சினைகளைக் குறைப்பதற்கும், காட்டு யானைகள் அதிகம் காணப்படும் கந்தளே கித்துலுத்துவ பிரதேசத்தை உள்ளடக்கிய கிராமத்தை பாதுகாப்பதற்காக யானைவேலி அமைப்பதற்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காட்டு யானை இறந்துள்ள பகுதியில் வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதும் குறிப்பித்தக்கது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக கோபாலரெட்ணம் இன்று பதவியேற்பு!

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக கலாநிதி எம்.கோபாலரெட்ணம் இன்று திங்கட்கிழமை பி.ப. 12.30 சுபநேரத்தில் தனது கடமையை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்கவுள்ளார்.



திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இதன்போது கலந்துகொள்ளவுள்ளனர்.

மட்டக்களப்பு செட்டிபாளையத்தினை பிறப்பிடமாகக்கொண்ட இவர் மூத்ததம்பி செல்லம்மா தம்பதியினரின் புதல்வராவார்.

1995 ஆம் ஆண்டு இக்கிராமத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மூன்றாவது இலங்கை நிர்வாக சேவை அதிகாரி என்பதுடன், தனது ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர்தரம் வரை மட்டக்களப்பு பட்டிருப்பு செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் கல்விகற்ற இவர், கலைமாணி பட்டத்தினை பேராதனை பல்கலைக்கழகத்திலும் பொதுநிர்வாகத் துறையில் முதுமாணி பட்டத்தினை இந்தியா காமராஜர் பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார்.

இவர் தனது அரச சேவையில் தம்பலகாமம், ஏறாவூர் நகர், பட்டிப்பளை, கல்முனை மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் உதவிப் பிரதேச செயலாளராகவும், குச்சவெளி, நாவிதன்வெளி, திருக்கோயில் மற்றும் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராகவும், திறைசேரி முகாமைத்துவத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும், இறுதியாக கிழக்கு மாகாண சபையின் பேரவைச் செயலாளராகவும் கடமை புரிந்து இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான இவர், கடந்த 01.02.2022 ஆம் திகதி கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மட்டு. கொக்குவில் பகுதியில் வீதியால் சென்ற பெண்ணின் கழுத்திலிருந்த தங்கச்சங்கலியை அறுத்துச்சென்ற கொள்ளையன்

## பொதுமக்களால் மடக்கிப்பிடிப்பு

(கனகராசா சரவணன்)


மட்டக்களப்பு கொக்குவில் பகுதியில் மோட்டர்சைக்கிளில் பயணித்த பெண் ஒருவரை மோட்டர்சைக்கிளில் பின்தொடர்ந்து சென்ற ஒருவன், பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்து தப்பியோடிய நிலையில், பொதுமக்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு (05) இடம்பெற்றுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் இரண்டாம் குறுக்கு வீதியில் சம்பவதினமான நேற்று இரவு 6.30 மணியளவில் பெண் ஒருவர் மரக்கறிகளை கொள்வனவு செய்துவிட்டு மோட்டார்சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது பின்னால் மோட்டார்சைக்கிளில் வந்த ஒருவன் பெண்ணின் கழுத்தில் இருந்த இரண்டரை பவுண் தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்து தப்பியோடிய நிலையில், கொள்ளையனின் மோட்டார்சைக்கிள் இலக்கத்தையும் அவனையும் அடையாளம் கண்டுகொண்ட பெண் உடனடியாக தனது மகனுக்கு கையடக்கத் தொலைபேசியில் தெரிவித்ததையடுத்து, குறித்த பெண்ணின் மகன் மற்றும் அங்கிருந்த அவனது நண்பர்கள் குறித்த மோட்டார்சைக்கிளில் சென்ற கொள்ளையனை வழிமறித்து மடக்கிப்பிடித்தனர்.

இதனையடுத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இதில் கைதுசெய்யப்பட்டவர் வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் அபகரித்த தங்கச்சங்கிலியை வீதியில் வீசியுள்ளதாகவும் கஷ்டத்தின் மத்தியில் கொள்ளையிட்டதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன், அபகரித்து வீதியில் வீசிய தங்கச்சங்கிலியை பொலிஸாரும் உறவினர்களும் அந்தப் பகுதியில் தேடியபோது எதுவும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் கைதுசெய்யப்பட்டவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் முன்னிலையில் நேற்று (06) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டு. ஜெயந்திபுரம் ஸ்ரீ குமரத்தன் முருகனுக்கு கும்பாபிஷேகம்





(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு ஜெயந்திபுரம் அருள்மிகு ஸ்ரீ குமரத்தன் முருகன் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக மகா யாக பெரும் சாந்தி பெருவிழா ஞாயிற்றுக்கிழமை 6ஆம் திகதி மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆலய விசேட மகாயாக கிரியைகள் கர்மாரம்பம் பிரதிஷ்டா சங்கல்பம், விநாயகர் வழிபாடு, கணபதி ஹோமம் போன்ற வழிபாட்டுக் கிரியைகளுடன் கடந்த 2ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி கடந்த வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை (04ஆம், 05ஆம் திகதிகளில் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் இடம்பெற்று நேற்று ஞாயிற்றுக்கிழமை (06) மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

# பொருளாதாரத்திற்காக இன்னொரு நாட்டிடம் கையேந்தாமல் சுயமாக பூர்த்திசெய்யும் நிலையே உண்மையான சுதந்திரம்

## சுதந்திர தின விழாவில் ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு!

(மாளிகைக்காடு நிருபர்)

எமது நாட்டின் சுதந்திரத்தைப் பெறபோராடிய சிங்கள, தமிழ், முஸ்லிம் தியாக வீரர்களின் போராட்டம் கனதியானது, சுதந்திரமானது. தனிமனித அந்தஸ்தாகவும், கௌரவமாகவும் இருந்தாலும் சுதந்திரத்தின் பெறுமானம் என்பது பொருளாதார அபிவிருத்தியையும் அடைகின்ற பொழுதுதான் உண்மையான சுதந்திர சுவாசக் காற்றை நாம் சுவாசிக்க முடியும் என்பது நவீன அரசியல் கொள்கையாக இருக்கிறது. ஒவ்வொரு நாடும் இன்னொரு நாட்டுடன் பொருளாதாரத்திற்காக கையேந்தாமல் தன்னுடைய பொருளாதாரத்தை தானே பராமரிக்கக்கூடிய நாடகம் எப்போது மாறுகின்றதோ அப்போதே உண்மையான சுதந்திரத்தை அடைந்ததாக கொள்ளமுடியும் - என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் சுதந்திர தின உரையில் தெரிவித்தார்.



கல்முனை மாநகர வாசலில் மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூரின் தலைமையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், இன்னுமொரு நாட்டிடம் பொருளாதாரத்திற்காக தங்கியிராது எமது நாட்டின் தலைவர்கள் உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்கவும், ஏற்று மதிகளை அதிகரிக்கவும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். எமது நாட்டு மக்களின் நன்மை கருதி பொருளாதாரத்தை மேம்படுத்தவும், கடனில்லாமல், சொந்தக்காலில் நிற்கும் எதிர்கால சந்ததியை பற்றி சிந்தித்து எமது நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் ஆகியோர் பல்வேறு முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். கொரோனா சூழ்நிலை காரணமாக எமது நாட்டின் பொருளாதாரம் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இருந்தாலும் தன்னம்பிக்கையை இழக்க முடியாது.

எம்மைவிட பின்தங்கிய நிலையில் இருந்த சில நாடுகள் 10 வருட இடைவெளியில் தன்னிறைவு கொண்ட உற்பத்திகளினால் பொருளாதாரத்தில் நல்ல நிலைக்கு முன்னேறியுள்ளன. தன்னிறைவு கொண்ட உற்பத்திகளினால் எமது நாட்டு மக்களும் அந்த நிலையை அடைவார்கள் எனும் நம்பிக்கை எனக்கிருக்கிறது. அதற்காக நாங்கள் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும். இலங்கையர்களாக ஒன்றிணைந்து நாட்டை நாம் கட்டியெழுப்ப வேண்டும். எமது நாட்டில் ஒரு தனிமனிதனுக்கு இருக்கும் கௌரவம் வளர்ந்த பல நாடுகளில் வாழும் படித்தவர்கள், வர்த்தகர்கள், கோடீஸ்வரர்களுக்கும் இல்லை. நிறைய கெடுபிடிகள் இருக்கின்றன. இதனை வெளிநாடுகளில் வசித்துக்கொண்டிருக்கும் எமது உறவுகளிடம் கேட்டால் அதுபற்றி கூறுவார்கள்.

எமது நாட்டின் அரசியலமைப்பில் ஒழுங்கான முறையில் எமது உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனை யாரும் கேள்விக்குட்படுத்த முடியாத வகையில் உச்சநீதிமன்றம் (நீதித்துறை) எம்மை பாதுகாத்துக்கொண்டிருக்கிறது. அதுதான் சுதந்திர நாட்டின் உண்மையான அடையாளம். அதனை அனுபவிக்கும் பிரஜைகளாக நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இது தனிமனித வாழ்விலுள்ள மிகப்பெரிய அந்தஸ்தாகும். எமது நாட்டில் கல்விக்கொள்கை, சுகாதாரக்கொள்கை போன்றன சிறந்த விடயங்களாக அமைந்துள்ளன. நாட்டின் ஏற்றுமதி பொருளாதாரக் கொள்கையில் விருத்தி ஏற்பட்டால் ஒவ்வொரு வீட்டிலும் சந்தோஷம் நிலவும். அதற்காக சகலரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

# சம்மாந்துறை பத்ர் பள்ளிவாசலில் சுதந்திர தினத்தில் இரத்ததான முகாம்



(சம்மாந்துறை நிருபர்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கியில் தேவையை பூர்த்திசெய்யும் முகமாக 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்ஷூறா, சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை, சம்மாந்துறை உலமா சபை, சம்மாந்துறை வர்த்தக சம்மேளனம் இணைந்து ஏற்பாடுசெய்த இரத்ததான முகாம் சம்மாந்துறை பத்ர் பள்ளிவாசலில் நேற்று முன்தினம் (05) நடைபெற்றது.

சுமார் 50 பேர் இந்த இரத்த தான முகாமில் கலந்துகொண்டதுடன், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ஆசாத் என்.ஹனிபா, சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா, வைத்தியசாலை திட்டமிடல் வைத்தியர் நியாஸ் அஹமட் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினர்.

மேலும் சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்ஷூறா, நம்பிக்கையாளர் சபை, உலமா சபை சம்மாந்துறை வர்த்தக சம்மேளன நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களின் அனுசரனையுடனும் இளைஞர்கள், பெண்கள் என அதிகளவானோரின் பங்குபற்றுதலுடன் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனையில் கேஸ் அடுப்பு வெடிப்புச் சம்பவம்



(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை - 5 தபாலக வீதியில் நேற்று (06) பிற்பகல் 12.30 மணியளவில் கேஸ் அடுப்பு வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நடந்த வீட்டுப் பெண்மணி சமையலறையில் உணவு சமைத்துக் கொண்டிருந்தபோது கேஸ் சிலிண்டரின் வயர் திடீரென தீப்பற்றிக்கொண்டதுடன், கேஸ் அடுப்பும் வெடித்துச் சிதறியுள்ளது.

இச்சம்பவத்தின்போது கேஸ் சிலிண்டர் மற்றும் கேஸ் அடுப்பின் இணைப்புகளை அவசரமாக துண்டித்ததன் காரணமாக பேராபத்திலிந்து தப்பிக்கொண்டதாக வீட்டின் உரிமையாளர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நடந்த இடத்தை வாழைச்சேனை பொலிஸார் பார்வையிட்ட துடன், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காத்தான்குடியில் கைக்குண்டுடன் கைதான நபரை தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க உத்தரவு

(கனகராசா சரவணன்)

காத்தான்குடியில் பல வீடுகளை உடைத்துக் கொள்ளைகளில் ஈடுபட்டுவந்த சந்தேகநபர் ஒருவர் கைக்குண்டுடன் கைதுசெய்யப்பட்டதுடன், மூன்று தினங்கள் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைசெய்ய மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் நேற்று முன்தினம் (05) அனுமதி வழங்கியுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பிரதேசத்தில் அண்மைக்காலங் களில் பல வீடுகள் உடைத்து அங்கிருந்த தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுவந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்டுவந்த விசாரணையில் சம்பவ தினமான கடந்த வெள்ளிக்கிழமை (04) காத்தான்குடி கர்ப்லா பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர் ஒருவரை கைக்குண்டுடன் கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர் காளிகோவில் வீதி செல்வநகரைச் சேர்ந்த நிப்றாஸ் என்பவர் எனவும் இவர் கடந்த வருடம் காத்தான்குடியில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனவும் இதில் காத்தான்குடி அன்னூர் பாடசாலை வீதியில் வீடொன்றில் கொள்ளையிட்ட 4 அரைப்பவுண் தங்க ஆபரணங்களை சந்தேகநபர் ஓந்தாச்சிமடம் பகுதியிலுள்ள தங்க ஆபரண கடை ஒன்றில் ஈடுவைத்த நிலையில் அதனை மீட்டுள்ளதுடன், சந்தேகநபரை தொடர்ந்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைசெய்ய நேற்று முன்தினம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை 3 தினங்களான 7ஆம் திகதிவரை பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைசெய்ய உத்தரவிட்டார்.

# கட்டுத்துவக்கு வெடித்ததில் இளைஞரொருவர் படுகாயம்

## கோமரங்கடவல காட்டுப்பகுதியில் சம்பவம்

(பதுர்தீன் சியானா)

திருகோணமலை - கோமரங்கடவல காட்டுப்பகுதியில் கட்டுத்துவக்கு துப்பாக்கி வெடிப்புச் சம்பவத்தில் இளைஞரொருவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று (06) காலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு படுகாயமடைந்தவர் கோமரங்கடவல, பக்மீகம பகுதியைச் சேர்ந்த ரணசிங்கசே சுமித் ரணசிங்க (24 வயது) எனவும் தெரியவருகின்றது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

அவரது எருமை மாடுகள் காணாமல்போன நிலையில் அதனை தேடுவதற்காக சக நண்பருடன் குபுக்வெவ காட்டுப் பகுதிக்கு சென்றபோது கட்டுத்துவக்கு துப்பாக்கி வெடித்ததாகவும் பொலிஸ் ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞர் படுகாயமடைந்தநிலையில் கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஆனாலும் அவருடைய இடுப்புப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளதால் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

சம்பவம் குறித்து கோமரங்கடவல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# இளம் முயற்சியாண்மையாளர்களின் சம்மேளனம் கல்முனையில் அங்குரார்ப்பணம்






(கல்முனை நிருபர்)

கல்முனை இளம் முயற்சியாண்மையாளர் களின் சம்மேளனம் எனும் வர்த்தக அமைப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை (04) உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

தன்நிறைவு கண்ட முயற்சியாண்மை யாளர்களை உருவாக்கும் நோக்கிலேயே இந்த சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சம்மேளனத்தின் தலைவராக றிசாத் ஷெரீப், பொதுச் செயலாளராக எம்.எச்.எம்.ஹனீப் மற்றும் பொருளாளராக ஏ.ஆர்.றிஸ்வான் ஆகியோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக குறித்த சம்மேளனத்தின் பொதுஜன தொடர்பு செயலாளராக றிப்தி அலியும், பிரதித் தலைவர்களாக எம்.எம்.ஜெஸ்மின் மற்றும் எம்.என்.எம்.இம்தியாஸும், உதவி செயலாளர்களாக ஏ.ஆர்.எம்.நியாஸ் மற்றும் எம்.டி.எம்.ஹினாஸும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, டப்ளியூ.எம்.எம்.ஐ.இபாத், எம்.எச்.எம்.முபாரிஸ், எம்.வை.ஏ.அசாம், டப்ளியூ.எம்.எம்.ஐ.இம்தாத், எஸ்.எல்.ஜஹான்கீர், எம்.றிஸ்வான், ஏ.தௌபீர், யூ.எல்.எம்.மபாஸ் மற்றும் எஸ்.எச்.ஸலாஹுதீன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.





பாண்டிருப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபை மற்றும் இந்து இளைஞர் மன்றம், இந்து மகளிர் மன்றம் ஆகியன இணைந்து சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்போம் எனும் தொனிப்பொருளில் பாண்டிருப்பு கடற்கரை பிரதேசம் சுத்தம் செய்யப்பட்டது. இச்சிரமதானப் பணியின்போது கடற்கரையில் குவிந்து கிடந்த பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் குப்பைகள் அகற்றப்பட்டு கடற்கரை பிரதேசம் சுத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(பாண்டிருப்பு நிருபர்)

# பொத்துவில் பிரதேச செயலகத்தில் நலன்புரி சங்கத்தால் இரத்ததான நிகழ்வு



(பொத்துவில் நிருபர்)

74ஆவது சுததந்திர தினத்தை முன்னிட்டு, பொத்துவில் பிரதேச செயலக நலன்புரிச் சங்கம் பொத்துவில் ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து ஏற்பாடுசெய்த இரத்ததான நிகழ்வு வெள்ளிக்கிழமை (04) பொத்துவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் இரத்ததானம் செய்தனர்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப், தாதிய பரிபாலகர் பீ.ரகுநாதமூர்த்தி, பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் எம்.எஸ்.அப்துல் வாசித் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# திருமலை மாவட்ட சர்வமதத் தலைவர்கள் ஒன்றுகூடல்







(சீனக்குடா நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை உருவாக்கும் நோக்கில் கிண்ணியா பூவரசந்தீவில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. மாவட்ட ஐக்கிய சமயங்களின் ஒன்றியத்தினால் 74ஆவது சுதந்திர தினத்தில் இந்த நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

திருகோணமலை மாவட்ட, ஐக்கிய சமயங்களின் ஒன்றிய தலைவர் ஏ.சுப்பிரமணிய சர்மா குருக்கள், செயலாளர் மௌலவி எம்.வை.ஹதீயதுள்ளா மற்றும் அதன் உறுப்பினரான நிலாவெளி தேவாலய அருட்தந்தை என்.சுதர்சன், கிண்ணியா ஜம்மியத்துல் உலமா சபை தலைவர் ஏ.எம்.ஹிதயத்துல்லா ஆகிய சர்வமதத் தலைவர்களுடன் பல உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

கிண்ணியா பூவரசந்தீவு அல் மினா மகாவித்தியாலயம், அல் பலாஹ் அஹதியா பாடசாலை, பூவரசந்தீவு முகைதீன் ஜூம்மா பள்ளிவாசல் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு சுதந்திர தின வைபவங்களில் இவர்கள் கலந்து கொண்டனர். சுதந்திர தின வீதி ஊர்வலம், கலை கலாசார நிகழ்வுகள், பள்ளிவாசல் சிரமதானம், சிறுவர் விளையாட்டு நிகழ்வுகள் ஆகியவற்றில் சர்வ மதத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

மேலும், பூவரசந்தீவு முகைதீன் ஜூம்மா பள்ளிவாசலில் நடைபெற்ற ஜூம்மா தொழுகையிலும் இவர்கள் பார்வையாளர்களாக கலந்துகொண்டு மக்களோடு உரையாடியமை விசேட அம்சமாகும்.

# கிண்ணியா சிறுவர் பூங்காவுக்குள் கடைத்தொகுதி; எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்






(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை, கிண்ணியா பிரதேச சபையின் பராமரிப்பின் கீழ் உள்ள சிறுவர் பூங்கா அமைந்துள்ள காணியில் கடைக்கான கட்டடத் தொகுதியை அமைக்கப்பட்டு வருவதை எதிர்த்து நேற்று முன்தினம் (05) காலை 9 மணியளவில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இவ்வார்ப்பாட்டம் கொழும்பு - கிண்ணியா பிரதான வீதியின் கச்சக்கொடித் தீவு பிரதேச சபைக்கு முன்னால் இடம்பெற்றது. இவ்வார்ப்பாட்டத்தை ஐந்து சங்கங்களும் பொது மக்களும் இணைந்து நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் உன் வருமானத்துக்காக எம் வருங்காலத்தை பாழாக்க நினைப்பது நியாயமா?, உன் சுயநலத்திற்காக சிறுவர்களின் உரிமைகளை பறிக்காதே, இடம்வேண்டும் இடம்வேண்டும் ஓய்வெடுக்க இடம்வேண்டும், அழிப்பதை நிறுத்திவிட்டு அபிவிருத்தியை முன்னெடு முதலான வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இச்சிறுவர் பூங்காவில் கிண்ணியா பிரதேச சபைக்குட்பட்ட இருபது கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்கள் இங்கே தமது பொழுதுபோக்கினை கழித்து வருவதாகவும் வேறொரு இடம் இல்லாததனால் இக்கட்டிடத்தை நிறுத்துமாறும் கூறுகின்றனர்.

இக்கட்டடத்தை இங்கு நிர்மாணிப்பதை விட பிரதேச சபைக்கு சொந்தமான பல இடங்கள் இருக்கின்றன. அங்கே நிர்மாணிக்குமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறுகின்றனர். இதேவேளை, இக்கட்டிட நிர்மாண வேலையினை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கிண்ணியா பிரதேச செயலகம் 2022.01.31ஆம் திகதி கச்சக்கொடித்தீவு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

இவ்வார்ப்பாட்ட இடத்துக்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் வருகை தந்து ஆர்ப்பாட்டக்காரர்களின் கருத்தினை கேட்டறிந்ததோடு அவர்களது மகஜரையும் ஏற்றுக்கொண்டார். இதன்பின்னர் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் இது சம்பந்தமாக கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

இதேவேளை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் கொந்தராத்துக்காரர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அவ்விடத்தை விட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

இது தொடர்பில் கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் ஏ.எஸ்.எம்.நசீர் கூறுகையில், கடந்த காலங்களில் இவ்விடத்தில் சிறுவர் பூங்கா இருந்தபோதிலும் ஒரு பூ மரச் செடியேனும் நாட்டுவதற்கு முன்னாள் தவிசாளர்கள் முயற்சி செய்யவில்லை. இவ்விடத்தில் சிறுவர் பூங்காவை அமைப்பதற்கு நாங்கள் பல முயற்சிகளை மேற்கொண்டோம்.

முன்னாள் தவிசாளரும் குறிப்பிட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இக்கைங்கரியங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சிறுவர் பூங்காவை அமைப்பதோடு கிண்ணியா பிரதேச சபைக்கு வருமானம் ஈட்டித் தரக்கூடிய கடைத்தொகுதியினை அமைப்பதற்கு முயற்சியை மேற்கொண்டு வருகிறேன்.

இதேவேளை, சிறுவர் பூங்காவிற்கான அதே இடத்தில் பின்பக்கம் மிகச் சிறப்பான முறையில் அமையக்கூடிய வகையில் சிறுவர் பூங்காவை அமைப்பதாக தெரிவித்ததோடு, சபைக்கு வருகின்ற வருமானத்தை தடுக்கும் நோக்கில் இவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இவர்களது கேவலம் கெட்ட அரசியலை முறியடித்து எதிர்காலத்தில் இவர்களுக்கு மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள். தன்னை வீழ்த்த செயற்படுவதில் குறித்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் செயற்பட்டு வருகிறார் - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## அக்கரைப்பற்று ஸ்ரீ பத்திரகாளியம்மன் அறநெறி பாடசாலையில் பொங்கல் விழா




(அட்டாளைச்சேனை நிருபர்)

அக்கரைப்பற்று ஸ்ரீ பத்திரகாளியம்மன் அறநெறி பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஐந்தாவது பொங்கல் விழாவும் நூல்கள் வழங்கும் நிகழ்வும் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றன.

அதிபர் எஸ்.தட்சணாமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது கலாசார உத்தியோகத்தர் ரி.நிஷாந்தினி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். ஆலையடிவேம்பு பிரதேச சபைத் தவிசாளர் ரி.குரோஜாதரன், ஓய்வுநிலை கோட்டக் கல்வி அதிகாரியும் ஸ்ரீ பத்திரகாளியம்மன் அறநெறி பாடசாலையின் ஆலோசகருமான எஸ்.இராசமாணிக்கம், ஆலயத் தலைவர் பாரதிதாசன், ஆலய குரு தேவகால பிரியன் ரி.காளிதாசன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இதன்போது விசேட பொங்கல் விழா சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெற்றதுடன், அறநெறி பாடசாலை மாணவர்களுக்காக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நூல்கள் வழங்கப்பட்டதுடன், கலை, கலாசார பாரம்பரிய நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ரயிலில் மோதி ரிப்பர் விபத்து




(மீராவோடை நிருபர்)

ரயிலுடன் ரிப்பர் மோதியதில் ரிப்பர் சாரதி படுகாயமடைந்துள்ளதாக வெலிகந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச்சென்ற ரயிலுடன் வெலிக்கந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடவத்தமடு பகுதியில் வைத்து ரிப்பர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் (05) இடம்பெற்றுள்ளது.

கடவத்தமடு பகுதியிலிருந்து மணல் ஏற்றிக்கொண்டு பிரதான வீதிக்குச் சென்ற ரிப்பர் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் ரிப்பர் கடும் சேதமடைந்துள்ளதுடன், ரயிலும் தடம்புரண்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த ரிப்பர் சாரதி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காதல் தகராறில் 15 வயது மாணவி கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழப்பு

### 17 வயது மாணவன் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, கந்தளாய் அக்போபுர பகுதியில் 17 வயது இளைஞனின் கத்திக்குத்து தாக்குதலில் படுகாயமடைந்த 15 வயதான மாணவி, சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

கந்தளாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்போபுர, பேரமடுவ பிரதேசத்தில் வசிக்கும் 15 வயதுடைய என்.பீ.கவிஷா பத்திரன என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது காதலன் எனக் கருதப்படும் 17 வயதான டபிள்யூ.எம்.கசூம் சமீர வீரசிங்க என்பவரே கத்திக்குத்து தாக்குதலை நடத்தியதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கந்தளாய், அக்போகம பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞன், காதல் தகராறையடுத்து மாணவியை குத்திக்கொன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த முதலாம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில், மாணவியின் வீட்டில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தின்போது, மாணவியின் தாயாரும் வீட்டிலிருந்துள்ளார். சந்தேகநபர் வீட்டில் பதுங்கியிருந்துவிட்டு, கத்திக்குத்தை நடத்தியிருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

படுகாயமடைந்த மாணவி கந்தளாய் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட பின்னர் கடந்த 4ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக கேகாலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது, இடைவழியிலேயே உயிரிழந்தார். அவரது சடலம் தற்போது தம்புள்ள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட 17 வயது இளைஞன் கந்தளாய் பிரதான நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, மாணவிக்கு கொரோனா தொற்று இருப்பதாக தமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கந்தளாய் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று இல்லையென்றும், தம்புள்ளை வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக விசனம் வெளியிட்ட உறவினர்கள், முறையான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சடலத்தை தம்மிடம் ஒப்படைக்கவேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளனர்.

## படகிலிருந்து தவறி விழுந்த மீராவோடை மீனவர் மரணம்




(மீராவோடை நிருபர்)

கடலில் மூழ்கி மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை துறைமுகத்தில் வைத்தே நேற்று முன்தினம் (05) இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆழ்கடலுக்கு செல்வதற்கு துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இயந்திரப் படகை சுத்தம் செய்தபோது படகிலிருந்த வலை மீனவரின் மீது சிக்கியதில் மீனவர் கடலில் தவறி விழுந்து மரணமடைந்துள்ளார்.

இவ்வாறு மரணமடைந்த நபர் ஓட்டமாவடி, மீராவோடை பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

மரணமடைந்த நபரின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பரீட்சை மேற்பார்வையாளர் நியமனத்தில் திருமலையில் சமநிலை பேணப்படுமா?

### கிண்ணியா நகர சபை உறுப்பினர் மஹ்தி கேள்வி

(கிண்ணியா நிருபர்)



க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு மேற்பார்வையாளர்களை நியமிப்பதில் சில திட்டமிட்ட சூழ்ச்சிகள் அரங்கேற்றப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன - என கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று (06) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த வருடம் நடைபெற்ற பரீட்சையில் முஸ்லிம் மாணவர்களின் பெறுபேறுகள் அதிகரித்தமை சிலரை சிந்திக்கத் தூண்டியிருக்கின்றது. அதன் காரணமாக நகர்ப்புற பாடசாலைகளில் ஆடை விடயங்களை காரணமாகக் காட்டி முஸ்லிம் மேற்பார்வையாளர்களை நியமிக்காமல் தவிர்ப்பதற்கும், முஸ்லிம் மாணவர்கள் அதிகமாக பரீட்சை எழுதும் மண்டபங்களுக்கும் நகர் புறத்திலிருந்தே மேற்பார்வையாளர்களை நியமிப்பதற்கும் திட்டமிடப்படுகிறதா? என சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

இதன் காரணமாக முஸ்லிம் மேற்பார்வையாளர்களை பரீட்சை கடமைகளுக்கு நியமிக்காமல் அவர்களை புறக்கணிப்பதற்கான வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

எனவே, பரீட்சை மேற்பார்வையாளர்களை நியமிப்பதில் சமநிலைத்தன்மை பேணப்படுவதோடு, வெளிப்படைத்தன்மையோடு அனைத்து தரப்பினரையும் இணைத்து மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்படுவதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

## கல்குடா கதிரவெளி விக்னேஸ்வரா பாடசாலையின் தொழில்நுட்பப் பீடத்திற்கான அடிக்கல் நாட்டிவைப்பு




(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, கல்குடா கதிரவெளி விக்னேஸ்வரா மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் புதிய தொழில்நுட்பப் பீடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் (05) கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி தலைமையில் இடம்பெற்றது.

நாட்டை கட்டியெழுப்பும் கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் புதிய தொழில்நுட்ப கற்கைகள், தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை விஸ்தரிக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களுக்கும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய மூன்று மாடி உயர் தொழில்நுட்பப்பீடம் கட்டிடத்தொகுதி அமைக்கப்படவுள்ளது.

இந்நிலையில், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் முன்மொழிவிற்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா கல்விவலயத்திற்குட்பட்ட கதிரவெளி விக்னேஸ்வரா தேசிய பாடசாலைக்கு 53.30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய மூன்று மாடி உயர் தொழில்நுட்பப் பீடத்திற்கான கட்டிட தொகுதியினை அமைப்பதற்கு கல்வியமைச்சர் தினேஷ் குணவர்தன அனுமதியளித்தமைக்கு அமைவாக நேற்று முன்தினம் குறித்த உயர் தொழில்நுட்ப பீடத்திற்கான அடிக்கல்லினை இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் உள்ளிட்ட அதிதிகளினால் நாட்டிவைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துகொண்டதுடன், சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமாகிய சிவனேசத்துரை சந்திரகாந்தன் கலந்துகொண்டிருந்தார்.

மேலும் குறித்த நிகழ்விற்கு கௌரவ அதிதிகளாக கல்வி அமைச்சின் ஊடகச் செயலாளர் லலித் ரோஹன லியனகே, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரன், வாகரை பிரதேச செயலாளர் எந்திரி ஜீ.அருணன், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்ட கோட்டக்கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட மாணவர்களின் பெற்றோர்களும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.





சிறுவர் கழக அங்கத்தவர்களில் பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் காரைதீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.
(படங்கள் – மாவடிப்பள்ளி நிருபர்)



# மறைந்தது 'இசைக்குயில்'

இசையுலகில் உச்சம் தொட்ட பின்னணிப் பாடகி, 'இசைக்குயில்' லதா மங்கேஷ்கர் தனது 92ஆவது வயதில் நேற்று காலமானார்.

**இரண்டு நாட்கள் துக்கம் அனுஷ்டிப்பு**

'நைட்டிங்கேள் ஒவ் இந்தியா', 'குயின் ஒவ் மெலடி', 'வொய்ஸ் ஒவ் தி நேஷன்' என பல பட்டங்களுக்கு சொந்தக்காரரான பிரபல பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கரின் மறைவுக்குத் திரையுலகினர், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், இரண்டு நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படுவதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

**உயிர்குடித்த கொரோனா**

அவர் மும்பையிலுள்ள பிரீச் கேண்டி மருத்துவமனையில் கொரோனா தொற்று காரணமாக கடந்த மாதம் 11ஆம் திகதி சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார். அவர் உடல் நிலை தேறி வந்தார். அவருக்குப் பொருத்தப்பட்டிருந்த செயற்கை சுவாசம் அகற்றப்பட்டது. ஆனால், திடீரென நேற்றுமுன்தினம் மீண்டும் அவரது உடல்நிலை மோசமடைந்தது. டொக்டர்கள் தீவிர சிகிச்சையளித்து வந்தனர். லதா மங்கேஷ்கரின் சகோதரி ஆஷா போஸ்லே நேரில் வந்து பார்த்துச் சென்றார். இந்நிலையில், நேற்றுக் காலையில் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார் என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கொரோனாவிற்கு பிந்தைய சிகிச்சையின்போது பல்வேறு உடல் உறுப்புகள் செயலிழந்ததால் காலை 8.12 மணிக்கு லதா மங்கேஷ்கர் மரணமடைந்ததாக அவருக்கு சிகிச்சையளித்த டொக்டர் சந்தானம் அறிவித்தார்.

மறைந்த பாடகி லதா மங்கேஷ்கரின் உடல் நேற்று பகல் 12.30 மணியளவில் மருத்துவமனையிலிருந்து அவரது இல்லத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு 3.30 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

சிவாஜி பூங்காவில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு முழு அரச மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடி லதா மங்கேஷ்கரின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். மேலும் அவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் பிரதமர் ஆறுதல் கூறினார்.

மேலும் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், மகாராஷ்டிர ஆளுநர் பகத்சிங் கோஷ்யாரி, மகாராஷ்டிர முதலமைச்சர் உத்தவ் தாக்கரே, கோவா முதலமைச்சர் பிரமோத், சரத் பவார், சச்சின், பொலிவுட் நடிகர் ஷாரூக்கான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நிலையில், லதா மங்கேஷ்கரின் மறைவுக்கு இந்தியா முழுவதும் நேற்றும் (பெப்ரவரி 6) இன்றும் (பெப்ரவரி 7) துக்கம் அனுஷ்டிக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. அத்துடன், தேசியக் கொடியும் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

மறைந்த பாடகி லதா மங்கேஷ்கர், திரையுலகில் மராத்தி, ஹிந்தி, தமிழ் உள்ளிட்ட 36 இந்திய மொழிகளில் முப்பதாயிரம் பாடல்களுக்கு மேல் பாடியுள்ளார். எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக பாடிய அவர் இந்தியாவின் இசைக்குயில் என்றழைக்கப்படுகிறார்.

திரைத்துறை சாதனைக்காக அவருக்கு 1989ஆம் ஆண்டு இந்திய அரசால் தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்பட்டது. 2001ஆம் ஆண்டு இந்தியாவில் குடிமக்களுக்கான உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. மூப்பு, உடல்நலக் குறைவு ஆகியவற்றின் காரணமாக கடந்த மாதம் மும்பை பிரீச் கேண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட லதா மங்கேஷ்கருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. கடந்த இரு நாட்களாக அவர் உடல்நிலை மேலும் நலிந்த நிலையில் நேற்று காலையில் காலமானார்.

தமிழில் இசைஞானி இளையராஜாவின் இசையில் 'சத்யா' படத்தில் லதா மங்கேஷ்கர் பாடிய ''வளையோசை'' எனத் தொடங்கும் பாடல் இன்றளவும் புகழ்பெற்ற பாடல்களின் வரிசையிலுள்ளது.

'என் ஜீவன் பாடுது' என்கிற படத்தில் ''எங்கிருந்தோ அழைக்கும்...'' எனத் தொடங்கும் காதல் சோகப் பாடலை மிகவும் உருக்கமாகப் பாடியுள்ளார்.

லதா மங்கேஷ்கரின் மறைவுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை பிறந்த ஒரு கலைஞர் என்றும், அவரது சாதனைகள் ஒப்பற்றவை என்றும் குறிப்பிட்டுள்ளார். அவரது தெய்வீகக் குரல் அமைதியானாலும் அவர் பாடிய பாடல்கள் காலத்தால் அழியாமல் ஒலித்துக் கொண்டே இருக்கும் எனத் தெரிவித்துள்ளார். லதா மங்கேஷ்கரின் குடும்பத்தினருக்கும், அவரது ரசிகர்களுக்கும் இரங்கல் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி விடுத்துள்ள இரங்கல் செய்தியில், லதா மங்கேஷ்கரின் மறைவால் சொல்லாணாத் துயருற்றதாகவும், அவரது மறைவு நாட்டுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்றும் வருங்காலத் தலைமுறையினர் அவரை நினைவுகூர்வர் என்றும், ஈடிணையற்ற அவரின் பாடல்கள் மனதை மயக்கும் திறனுள்ளவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவருடன் உரையாடியதை மறக்க முடியாது என்றும், அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ''இந்தியாவின் நைட்டிங்கேல் லதா மங்கேஷ்கரின் மறைவு செய்தி கேட்டு மனம் வேதனை அடைந்தது. எட்டு தசாப்தங்களாக, இசை வாழ்வில் தனது தேனையொத்த குரலால் ஒவ்வொரு இந்தியரின் மனதை தொட்டுள்ளார். அவரது குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் ட்விட்டர் பக்கத்தில், லதா மங்கேஷ்கருடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தைப் பகிர்ந்து அன்பு, மரியாதை மற்றும் பிரார்த்தனைகள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பிரபல பாடகி ஷ்ரேயா கோஷல், நடிகர், நடிகைகள் உள்ளிட்டோரும் லதா மங்கேஷ்கரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

***"இந்தியாவின் இசைக்குயில்" குறித்து ஒரு பார்வை!***

1929ஆம் ஆண்டு செப்டெம்பர் 28ஆம் திகதி பிறந்த ஒரு பெண் குழந்தை, இசை உலகை ஆட்சி செய்யப்போகிறது என்று



யாரும் எண்ணியிருக்க முடியாது. ஆனால், பிறக்கும்போதே ஒரு பொன்னான தேன் குரலுடன் பிறந்த லதா மங்கேஷ்கர், 70 ஆண்டுகளாக இந்தியாவின் இசை ரசிகர்களை மகிழ்வித்தார்.

**ஐந்து வயதில் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட இசை**

லதா மங்கேஷ்கரின் இசைப்பயணம் ஐந்து வயதில் தொடங்கியது. நஸ்ரின் முன்னி கபீரின் 'லதா இன் ஹெர் ஓன் வொய்ஸ்' என்ற புத்தகத்தில், "நான் என் தந்தை தீனாநாத் மங்கேஷ்கர் பாடுவதைப் பார்த்திருக்கிறேன். ஆனால், நான் அவருக்கு முன்னால் பாடத் துணிந்ததில்லை. அவர் ஒரு முறை தனது மாணவர் ஒருவருக்கு பூரியா தனாஸ்ரீ ராகத்தைக் கற்பித்துக்கொண்டிருந்தார். ஏதோ வேலையாக வெளியே சென்றார் என் தந்தை. நான் வெளியே விளையாடிக் கொண்டிருந்தேன். அந்த மாணவர் பாடுவதைக் கேட்டேன். அவர் சரியாகப் பாடவில்லை என்று எனக்குத் தோன்றியது. அவரிடம் நான் எப்படிப் பாட வேண்டும் என்று பாடிக்காட்டினேன்.

அப்போது தான் திரும்பிவந்த என் தந்தை, கதவுக்குப் பின்னாலிருந்து நான் பாடுவதைக் கேட்டார், அவர் என் அம்மாவைக் கூப்பிட்டு, "நமது வீட்டிலேயே ஒரு சிறந்த பாடகி இருக்கிறாள் என்று நமக்கே தெரியவில்லை" என்றார். மறுநாள் காலை ஆறு மணிக்கு என்னை எழுப்பி தம்பூராவை எடுக்கச் சொன்னார். இன்றுமுதல் நீ பாடக் கற்றுக்கொள் என்றார். பூரியா தனாஸ்ரீ இராகத்தில் தொடங்கினார். அப்போது எனக்கு ஐந்து வயதுதான் இருக்கும்" என்று லதாவே குறிப்பிடுகிறார்.

**தந்தையின் இழப்பு**

13ஆவது வயதில் தந்தையை இழந்த லதா மங்கேஷ்கரை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நவயுக் பட நிறுவுனரும், கர்நாடக இசைக் கலைஞருமான விநாயக் மாஸ்டர் என்பவர் லதாவை நடிகையாக்கவும், பாடகியாக்கவும் பயிற்சிகள் அளித்தார். தமது வாழ்க்கை எங்கே அழைத்துச்செல்கிறது என்று அந்தப் புரியாத வயதில் இசையை தனது இரண்டாவது ஆன்மாவாக அடையாளம் கண்டுகொண்டார் லதா மங்கேஷ்கர்.



மும்பைக்கு குடிபெயர்ந்த அவர், இந்துஸ்தானி சங்கீதம் பயின்றார். 1946ஆம் ஆண்டு தமது முதல் பாடலை திரைப்படத்துக்குப் பாடினார் லதா மங்கேஷ்கர். விநாயக் மாஸ்டர் இயக்கிய Bhadi Maa படத்தில் லதாவும் அவர் தங்கை ஆஷாவும் சிறிய வேடங்களில் நடித்தனர். அதில் ஒரு பக்திப் பாடலையும் லதா மங்கேஷ்கர் பாடினார். பின்னர் இசையமைப்பாளர் வசந்த் தேசாய் பாடகர் குலாம் அகமது போன்ற இசை மேதைகளுடன் அவர் அறிமுகம் ஏற்பட்டது திரையுலகில் அவருக்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. குலாம் ஹைதரை தமது கோட்பாதர் என்று கூறுவார் லதா மங்கேஷ்கர்.

நடிகை மதுபாலாவுக்காக ''ஆயேகா ஆயேகா...'' என்று லதா பாடிய பாடல் அவரை பட்டிதொட்டியெங்கும் கொண்டு போனது.

தொடர்ந்து அப்போதைய அனைத்து முன்னணி இசையமைப்பாளர்களுடனும் லதா மங்கேஷ்கர் பாடிய ஒவ்வொரு பாடலும் ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றது. படத் தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும் அவருடைய கால்ஷீட்டுக்காக காத்திருந்தனர்.

சலீல் சவுத்திரி, நவுஷாத், கல்யாண்ஜி ஆனந்த்ஜி, லட்சுமிகாந்த் பியாரேலால், எஸ்.டி.பர்மன், சங்கர் ஜெய்கிஷன், ஆர்.டி.பர்மன், ஓ.பி.நய்யார் போன்ற இசையமைப்பாளர்களின் பாடல்களை லதா மங்கேஷ்கர் பாடியபோது அவருக்கு பணம், புகழ், விருதுகள், தேசிய விருதுகள், பெருமைகள் மழையாகப் பொழியத் தொடங்கின.

இறைவனுக்கு ஒரு குரல் இருந்தால் அது முகமது





ரஃபியின் குரலைபோல் இருக்கும் என்று இசை ரசிகர்கள் கூறுவதுண்டு. ஆண் குரலுக்கு ரஃபியின் குரல் என்றால் பெண் குரலுக்கு பெண் தெய்வங்களின் குரல் லதா மங்கேஷ்கரின் குரல் என்றும் கூறப்பட்டது

முகமது ரஃபி, மன்னாடே, முகேஷ், கிஷோர் குமார், மகேந்திர கபூர் என்ற முன்னணி இந்திப்படப் பாடகர்களுடன் லதா பாடிய பல்லாயிரம் பாடல்கள் மறக்க முடியாதவை.

எஸ்.பி.பாலசுப்ரமணியம் ஹிந்தியில் ஏக் துஜே கே லியே படத்தில் அறிமுகமானபோது அவருக்கு வெற்றிக்குத் துணை நின்றது லதா மங்கேஷ்கரின் இனிய குரல் என்றால் அது மிகையாகாது.

தமிழிலும் இளையராஜா இசையில் சில பாடல்களை லதா மங்கேஷ்கர் பாடினார். உச்சரிப்பிலும் அவர் தமிழை நன்றாக உள்வாங்கினார். அதில் அவர் குரலின் இனிமை தமிழுக்கு மேலும் அழகு சேர்த்தது. லதா மங்கேஷ்கரின் பல ஆயிரம் பாடல்களை தொகுக்கவோ வகைப்படுத்தவோ இயலாது என்றபோதும் பக்திப் பாடல்கள், தனிப் பாடல்கள், சோகப் பாடல்கள், டூயட் பாடல்கள் என்று ரசிகர்கள் வகைப்படுத்திக் கொண்டாடுகின்றனர்.

**முதல் வாய்ப்பு**

பாடசாலைக்கு சென்று முறையான கல்வி பெறாத லதா மங்கேஷ்கர், சிறுவயதிலேயே பிரபல பாடகர் கே.எல்.சைகலிடம் இசையால் ஈர்க்கப்பட்டார். 1942இல் இவரது தந்தை காலமான பிறகு, 13ஆவது வயதே நிரம்பிய இவருக்கு இவரது குடும்ப நண்பரான மாஸ்டர் வினாயக், தனது நவ்யுக் சித்ரபட் மூவி கம்பெனி சார்பில் 1942இல் எடுக்கப்பட்ட "பஹிலி மங்கலா கர்" என்ற மராத்தி மொழித் திரைப்படத்தில் பாடவும், நடிக்கவும் வாய்ப்பளித்தார். இதன்பிறகு 1943இல் "கஜாபாவ்" என்ற மராத்தி மொழித் திரைப்படத்தில் மாதா ஏக் சூத் கி துனியா பதல் தே து என்ற பாடல்தான் இவர் பாடிய முதல் ஹிந்தி பாடலாக அமைந்தது.

**77 ஆண்டுகள்**

1948இல் குலாம் ஹைதர் இசையில் வெளிவந்த "மஜ்பூர்" திரைப்படமே அவரது திரையிசை வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. பின்னர் 1949இல் அசோக் குமார், மதுபாலா நடிப்பில் வெளிவந்து வெற்றிபெற்ற திரைப்படமான "மஹல்" திரைப்படத்தில் இவர் பாடிய "ஆயேகா ஆயேகா" என்ற பாடல் இவருக்கு மிகப்பெரிய வெற்றியை ஈட்டித் தந்தது. இதனைத் தொடர்ந்து "பர்ஸாத்", "தீதார்", "பைஜு பாவ்ரா", "அமர்",

உரன் கட்டோலா, "ஸ்ரீ 420", "தேவ்தாஸ்", "சோரி சோரி", "மதர் இந்தியா" என 50களிலும், "முகல் ஏ ஆஸம்", தில் அப்னா அவுர் ப்ரீத் பராய், "பீஸ் ஸால் பாத்", "கைடு", "ஜுவல் தீப்", "வோ கோன் தி?" "மேரா சாயா" என 60களிலும் தொடர்ந்து இவரது வெற்றிப் பயணம் 77 ஆண்டுகள் கடந்தும் இன்றும் ரசிகர்களின் மனங்களில் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கிறார் லதா மங்கேஷ்கர் என்றால் அது மிகையன்று.

**நவ்ஷத் தொடக்கம் ஏ.ஆர்.ரஹ்மான் வரை**

நவ்ஷத், ஷங்கர் ஜெய்கிஷன், சி.ராமச்சந்திரா, அனில் பிஸ்வாஸ், ஹேமந்த் குமார், ரவி, சலீல் சௌத்ரி, எஸ் டி பர்மன், ஆர் டி பர்மன், மதன் மோகன், கல்யாணஜி ஆனந்த்ஜி, ராகேஷ் ரோஷன், ஆனந்த் மிலிந்த், அனுமாலிக், இளையராஜா, ஏ.ஆர்.ரஹ்மான் என இந்தியாவின் தலைசிறந்த இசையமைப்பாளர்கள் அனைவரிடமும் பணியாற்றிய பெருமை மிக்கவர். பின்னணி பாடுவதோடு ஒருசில திரைப்படங்களை தயாரித்தும், இசையமைத்தும் இருக்கின்றார்.

**கின்னஸ் சாதனை**

ஏறக்குறைய 20 இந்திய மொழிகளில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளார். தனிப்பாடல்களாக 25,000 பாடல்கள் வரை பாடியிருக்கின்றார். அதிகமான பாடல்களைப் பாடிய பின்னணிப் பாடகர் என்று கின்னஸ் சாதனை புத்தகத்திலும் இடம்பிடித்திருக்கின்றார்.

**இசையமைப்பாளர்**

பின்னணி பாடகியாக மட்டுமல்லாது ராம் ராம் பாவ்னே, மராத்தா டிட்டுகா மெல்வாவா, மொஹித்யாஞ்சி மஞ்சுளா, ஸாதி மான்ஸா போன்ற படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

**தயாரிப்பாளர்**

பாடகி, இசையமைப்பை தாண்டி வாடல், ஜோஞ்சார், காஞ்சன் கங்கா, லெகின் ஆகிய 4 படங்களை தயாரித்துள்ளார்.

**30 ஆயிரம் பாடல்கள்: உயரிய விருதுகள்: லதாவின் சாதனைகள்**

மறைந்த பாடகி லதா மங்கேஷ்கர் 30இற்கும் மேற்பட்ட மொழிகளில் 30 ஆயிரம் பாடல்களை பாடியுள்ள அவர், பாரத ரத்னா, பத்ம பூஷன், பத்ம விபூஷன், தாதா சாகேப் உள்ளிட்ட பல விருதுகளை பெற்றுள்ளார்.

**ராஜ்யசபா எம்பி**

லதா மங்கேஷ்கர், 1999 நவம்பர் 22 முதல் 2005 நவம்பர் 21 வரை ராஜ்யசபா எம்.பியாக பதவி வகித்துள்ளார்.

**எண்ணிலடங்கா விருதுகள்...**

1969இல் "பத்ம பூஷன்" விருது

1989இல் "தாதா சாஹேப் பால்கே'' விருது

1999இல் ஆண்டு "பத்ம விபூஷன்" விருது

2001இல் இந்திய அரசின் உயரிய விருதான "பாரத ரத்னா" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

2008இல் இந்தியாவின் 60ஆவது சுதந்திர தினத்தன்று "வாழ்நாள் சாதனையாளர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

**தேசிய விருது**

சினிமாத்துறையில் வழங்கப்படும் தேசிய விருதை மூன்று முறை பெற்றுள்ளார்.

★ 1972இல் சிறந்த பின்னணிப் பாடகிக்கான "தேசிய விருது" "பரிச்சாய்" என்ற படத்தில் பாடியதற்காக வழங்கப்பட்டது.

★ 1974இல் சிறந்த பின்னணிப் பாடகிக்கான "தேசிய விருது" "கோரா காகஸ்" திரைப்படத்தில் பாடியதற்காக வழங்கப்பட்டது.

★ 1990இல் சிறந்த பின்னணிப் பாடகிக்கான "தேசிய விருது" "லேகின்" படத்தில் பாடியதற்காக வழங்கப்பட்டது.

**பிற விருதுகள்**

1966இல் சிறந்த பின்னணிப் பாடகிக்கான ''மஹாராஷ்டிர மாநில சினிமா விருது'' ''ஸாதி மான்ஸா'' மராத்தி திரைப்படத்திற்காக வழங்கப்பட்டது.

1966இல் சிறந்த இசையமைப்பாளருக்கான ''மஹாராஷ்டிர மாநில சினிமா விருது'' ''ஸாதி மான்ஸா" மராத்தி திரைப்படத்திற்காக கிடைக்கப் பெற்றார்.

1977இல் சிறந்த பின்னணிப் பாடகிக்கான "மஹாராஷ்டிர மாநில சினிமா விருது" "ஜெய்த் ரே ஜெய்த்" மராத்தி திரைப்படத்திற்காக வழங்கப்பட்டது.

1997இல் "மஹாராஷ்டிரா பூஷன் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

2001இல் "மஹாராஷ்டிரா ரத்னா விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

1959இல் சிறந்த பின்னணிப் பாடகிக்கான "பிலிம் பேர் விருது" "மதுமதி" திரைப்படத்தில் "ஆஜா ரே பர்தேசி" என்ற பாடலுக்காக வழங்கப்பட்டது.

1963இல் சிறந்த பின்னணிப் பாடகிக்கான "பிலிம் பேர் விருது" "பீஸ் ஸால் பாத்" படத்தில் "கஹின் தீப் ஜலே கஹின் தில்" பாடலுக்காக.

1966இல் சிறந்த பின்னணிப் பாடகிக்கான "பிலிம் பேர் விருது" "காந்தான்" படத்தில் "துமே மேரி மந்திர் துமே மேரி பூஜா" பாடலுக்காக.

1970இல் சிறந்த பின்னணிப் பாடகிக்கான "பிலிம் பேர் விருது" "ஜீனே கி ராஹ்" படத்தில் "ஆப் முஜே அச்சே லக்னே லகே" பாடலுக்காக.

1993இல் "பிலிம் பேர் வாழ்நாள் சாதனையாளர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

1994இல் "ஹம் ஆப்கே ஹைன் கோன்" படத்தில் "தீதி தேரா தேவர் தீவானா" பாடலுக்காக "சிறப்பு பிலிம் பேர் விருது" வழங்கப்பட்டது.

2004இல் பிலிம் பேர் விருதின் 50ஆம் ஆண்டு நிறைவு விழாவில் "சிறப்பு விருதும், தங்கக் கிண்ணமும்" வழங்கி கௌரவிக்கப்பட்டார்


6 பல்கலைக்கழகங்களின் கலாநிதி பட்டங்கள், இதுபோல் இன்னும் ஏராளமான மாநில மற்றும் பிற விருதுகளுக்குச் சொந்தக்காரர் லதா மங்கேஷ்கர்.

**மறக்க முடியாத தமிழ் பாடல்**

இளையராஜாவின் இசையில் "ஆனந்த்" திரைப்படத்தில் இடம்பெற்ற ''ஆராரோ ஆராரோ..'' என்ற பாடலும், "சத்யா" திரைப்படத்தில் இடம்பெற்ற "வலையோசை கல கல கலவென" என்ற பாடலாலும் தமிழ் ரசிக பெருமக்களின் உள்ளங்களிலும் நீங்கா இடம்பிடித்துள்ளார் லதா மங்கேஷ்கர்.

சரீரம் மறைந்தாலும் சாரீரம் பாடிக்'கொண்டுதான் இருக்கும் நமது வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும்.... காலத்தில் எப்போதோ ஒருமுறைதான் லதா மங்கேஷ்கர் போன்ற அபூர்வக் கலைஞர்கள் பிறக்கிறார்கள். லதா மங்கேஷ்கர் மறைந்தாலும் அவர் குரலால் ரசிகர்களின் உள்ளங்களில் என்றும் வாழ்ந்துக் கொண்டுதான் இருப்பார்.

***லதா மங்கேஷ்கரின் குரல் நம் நாட்டு சினிமாவிலும் ஒலித்திருக்கிறது. 1955ஆம் ஆண்டு வெளியான 'செட சுலங்' என்ற சிங்கள திரைப்படத்தில் ''சிறி தரு ஹெலதிவ....'' என்ற பாடலை பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.***



## பொய்த்த பிரார்த்தனைகள்; தோல்வியுற்ற மீட்புப் பணிகள்: சோகத்தில் மொரோக்கோ!


# 5 நாட்கள்; 104 அடி ஆழ ஆழ்துளை கிணற்றுக்குள் போராடிய 5 வயதுச் சிறுவன்





ரயனின் பெற்றோர்

# ரயன் மரணம்



### சிறுவனின் குடும்பத்திற்கு அரசர் 6ஆம் முகமது இரங்கல்

மொரோக்கோவில் ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்து 5 நாட்களாக உயிருக்குப் போராடிவந்த 5 வயதுச் சிறுவன் ரயன் அவ்ரம் (Rayan Awram) உயிரிழந்த நிலையில் நேற்று சடலத்தை மீட்புக் குழுவினர் மீட்டனர்.

மொரோக்கோவின் இக்ரான் (Ighran) என்ற கிராமத்தில் வசித்து வருபவர்கள் காலித் அவ்ரம் மற்றும் வாசிமா கெர்ஷீஷ். இந்த தம்பதியின் மகன் ரயன் (வயது 5) கடந்த செவ்வாய்க்கிழமை விளையாடிக் கொண்டிருந்தபோது அருகேயிருந்த ஆழ்த்துளைக் கிணற்றில் தவறி விழுந்துள்ளான்.

சிறுவன் ரயனின் அழுகைச் சத்தம் கேட்டு பெற்றோர், அக்கம்பக்கத்தினர் ஓடி வந்து அவனை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். பயனளிக்கவில்லை. தொடர்ந்து, அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு மீட்புக்குழுவினர் விரைந்தனர்.


கிணற்றின் வாய் பகுதி 25 சென்டிமீற்றர் விட்டமே கொண்டிருந்தது, மீட்புப் பணியில் தொய்வை ஏற்படுத்தியது. அதிகாரிகள் இயந்திரங்களைக்கொண்டு மீட்புப் பணியை தொடர்ந்தனர்.

ஆழ்துளைக் கிணற்றுக்குள் கெமராவைச் செலுத்திப் பார்த்தபோது சிறுவன் தலையில் இலேசான காயமடைந்திருப்பதும், தன்னுணர்வுடன் இருப்பதும் தெரியவந்தது.

இதையடுத்து ஒட்சிசன் குழாய், உணவு, நீர் ஆகியவற்றைக் கயிறுமூலம் கீழிறக்கினர். ஆழ்துளைக் கிணற்றின் அருகே 35 மீற்றர் ஆழத்துக்கு மீட்புக் குழுவினர் பாரிய குழியொன்றை தோண்டினர். தொடர்ந்தும் 4 நாட்களாக பல்வேறு இடர்களுக்கு மத்தியில் மீட்புப் பணிகள் தொடர்ந்தனர்.

சிறுவன் இருக்குமிடத்தை நெருங்கிவிட்டதாகவும், ஆழ்துளைக் கிணற்றை நோக்கிப் பக்கவாட்டில் துளையிடவுள்ளதாகவும் மீட்புக்குழுவினர் தெரிவித்தனர். தொடர்ந்தும் சிறுவன் ரயன் உயிருடன் மீண்டுவிட வேண்டும் என மொரோக்கோ மட்டுமன்றி உலகம் முழுவதும் பிரார்த்தனைகள் வலுப்பெற்றிருந்தன.

மணற்பாங்காகவும், பாறைப்பாங்காகவும் உள்ள நிலம் சரியும் அபாயமுள்ளதால் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட்டனர். அங்கு மருத்துவக் குழுவினர் தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்ததுடன், சிறுவனை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வதற்கௌ பிரத்தியேகமாக ஹெலிகொப்டரொன்றும் நிறுத்தப்பட்டது.













ஆழ்துளைக் கிணற்றில் தவறி வீழ்ந்து 104 அடி ஆழத்தில் சிக்கிகொண்ட சிறுவன் ரயனை 4ஆவது நாளாகவும் உடல் அசைவுடன் இருப்பது கெமரா மூலமாக கண்காணிக்கப்பட்டு வந்தது. தொடர்ந்தும் நீர், உணவு ஒட்சிசன் கயிறு மூலம் ஆழ்துளை கிணற்றுக்குள் செலுத்தப்பட்டு வந்த நிலையில் மீட்புப் பணிகள் தொடர்ந்தன.

25 சென்றிமீற்றர் விட்டமுள்ள கிணற்றில் 104 அடி ஆழத்தில் சிக்கிய சிறுவன் ரயனை மீட்க 5 நாட்களாக மீட்புக் குழுவினர் போராடி வந்தனர். ஆழ்துளைக் கிணற்றின் அருகில் பெரிய குழியைத் தோண்டி சிறுவனை மீட்கும் முயற்சியில் வீரர்கள் ஈடுபட்டனர். மண்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளிட்ட இடையூறுகளால் மீட்புப் பணியில் தொய்வு ஏற்பட்டது.

எனினும், பக்கவாட்டில் துளையிட்டு சிறுவன் மீட்கப்பட்டு வெளியில் கொண்டுவரப்பட்டார்.

சிறுவன் ரயனை மீட்பதற்காக 5 நாட்களாக நீடித்த மீட்புப் போராட்டம் வெற்றியளித்தது. எனினும், பலன் நீடிக்கவில்லை.

மீட்கப்பட்ட சிறிதுநேரத்தில் ரயன் உயிரிழந்தான் என அதிகாரிகள் தெரிவித்தனர்.





5 நாட்களாக உயிருக்குப் போராடி வந்த நிலையில் சிறுவன் உயிரிழந்தது முழு உலகத்தையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சிறுவனின் குடும்பத்திற்கு அந்நாட்டின் அரசர் 6ஆம் முகமது, தொலைபேசி வழியே இரங்கல் தெரிவித்துள்ளார்.

## உலக செய்திகள்

# தலிபான்களின் ஆட்சியில் ஆப்கானில் 318 ஊடக நிறுவனங்களுக்கு பூட்டு

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர், அங்கு 318 ஊடக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாக சமீபத்திய அறிக்கை தெரிவிக்கின்றது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி ஆப்கானிஸ்தான் தலைநகரை தலிபான்கள் கைப்பற்றினர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் மக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான், தலிபான்கள் வசம் சென்றபிறகு, அங்கு மொத்தமுள்ள 34 மாகாணங்களில் 33 மாகாணங்களிலுள்ள 318 ஊடக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாக அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

பத்திரிகையாளர்களின் சர்வதேச கூட்டமைப்பு (IFJ) வெளியிட்ட ஓர் அறிக்கையில்,

தலிபான்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 51 தொலைக்காட்சி நிலையங்கள், 132 வானொலி நிலையங்கள் மற்றும் 49 ஒன்லைன் ஊடகங்கள் செயற்படுவதை நிறுத்திவிட்டன. இங்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி, செய்தித்தாள்களை கடுமையாகப் பாதித்துள்ளது. தற்போது 114இல் 20 செய்தித்தாள்கள் மட்டுமே வெளியாகி வருகின்றன.

மேலும், தலிபான் ஆட்சிக்கு முன்னதாக 5,069 ஊடகவியலாளர்கள் பணியாற்றிய நிலையில், தற்போது 2,334 ஊடகவியலாளர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர்.

வேலை இழந்த ஊடகவியலாளர்களில் 72 சதவீதம் பேர் பெண்கள். தற்போது ஊடகத்தில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை 243 மட்டுமே.

ஆப்கனில் ஊடகங்களின் தற்போதைய நிலைமை குறித்து உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், எதிர்காலத்தில் ஆப்கானிஸ்தானில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஊடக நிறுவனங்கள் மட்டுமே செயற்படவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று ஆப்கானிஸ்தான் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் ஹுஜதுல்லாஹ் முஜாதிதி தெரிவித்தார்.

தற்போதைய ஆப்கானிஸ்தான் சூழ்நிலையில் தகவல்களை அணுகும் செயல்முறையைப் பாதுகாக்க,



ஊடகங்களில் முதலீடு செய்ய சர்வதேச சமூகத்தை அழைப்பதாக ஆப்கானிஸ்தான் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹபிசுல்லாஹ் பராக்சாய் தெரிவித்துள்ளார்.

அதுபோல் ஊடகவியலாளர் சமியுல்லாஹ் பாம் கூறுகையில், ஊடகங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் தொடர்ந்து நீடித்தால் ஊடக நிறுவனங்கள் இயங்குவதை நிறுத்திவிடும், ஊடகத்துறையே சரிந்துவிடும் எனக் தெரிவித்துள்ளார்.

# மடகஸ்கரை தாக்கிய 'பட்சிராய்' புயல்

### இலட்சக்கணக்கானோர் வீடுகளை இழந்து பரிதவிப்பு



கிழக்கு ஆபிரிக்க நாடான மடகஸ்கரை தாக்கிய பட்சிராய் புயலால் ஏற்பட்ட கடும் மழை, மண்சரிவால் இலட்சக்கணக்கானோர் வீடுகளை இழந்து முகாம்வாசிகளாக மாறினர்.

இதேவேளை, மணிக்கு 165 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய சூறாவளிக் காற்று, இன்று கரையை கடக்கவுள்ளது. புயல் கரையை கடக்கும்போது சுமார் 250 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

சிம்பாப்வே, மொசாம்பிக் உள்ளிட்ட ஏனைய ஆபிரிக்க நாடுகளை அண்மையில் தாக்கிய அனா புயலைவிட அதிக சேதங்களை பட்சிராய் புயல் ஏற்படுத்தக் கூடும் என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளதால் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

### ''தவிக்க விட்டு சுற்றுலா சென்ற கணவர்''

# விரக்தியில் கணவனை ஏலத்தில் விற்க விளம்பரம் கொடுத்த மனைவி

### நியூசிலாந்தில் ருசிகரம்





நியூசிலாந்தில் பெண்ணொருவர் தனது கணவரை ஏலத்தில் விற்க விளம்பரம் கொடுத்த நிகழ்வு இணையத்தில் வைரலாகி வருகிறது.

தன்னையும், குழந்தைகளையும் 2 நாட்கள் தனியாக வீட்டில் விட்டுவிட்டு, நண்பர்களுடன் கணவர் மீன் பிடிக்கச் சென்றுவிட்ட கோபத்தில், லிண்டா மெக் அலிஸ்டர் என்ற அந்தப் பெண் ஒன்லைனில் தனது கணவரை விற்பனைசெய்யவிருப்பதாக அவரின் உயரம், கணவருக்கு பிடித்தவற்றையை குறிப்பிட்டு விளம்பரம் வெளியிட்டிருந்தார்.

லிண்டாவின் இந்த விளையாட்டுப்பதிவை உண்மை என நம்பி 12 பெண்கள் ஜோனை வாங்க விருப்பம் தெரிவித்து, ஏலத்தில் பங்கு பெற்றுள்ளனர். இந்த ஏலம் இந்திய மதிப்பில் 7,400 ரூபா வரை (இலங்கை ரூபா பெறுமதியை நீங்களே கணக்கிட்டுக்கொள்ளுங்கள்) சென்றுள்ளது.

# நைஜீரியாவில் வேகமாக பரவும் லாஸ்சா வைரஸால் 40 பேர் உயிரிழப்பு



நைஜீரியாவில் பரவி வரும் லாஸ்சா காய்ச்சலால் 40 பேர் வரை உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

எலிகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் வைரஸான லாஸ்சா, 21 முதல் 30 வயது பிரிவினரையே அதிகம் பாதிப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். ஏறத்தாழ 36 மாகாணங்களில் வைரஸ் கோரத் தாண்டவம் ஆடி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக்கு மத்தியில் புதுத் தலைவலியாக 200இற்கும் மேற்பட்டோருக்கு லாஸ்சா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு –தம்புள்ள, கண்டி – ஜவ்னா அணிகள் இன்று பலப்பரீட்சை



இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் 5 அணிகளின் பங்கேற்புடன் நடைபெற்று வருகின்ற அணிக்கு 50 ஓவர்கள்கொண்ட நெஷனல் சுப்பர் லீக் தொடர் தற்சமயம் விறுவிறுப்பாக நடைபெற்றுவரும் நிலையில், இன்றைய தினம் இரண்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.

கண்டி, பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இன்று காலை நடைபெறுகின்ற 13ஆவது லீக் போட்டியில் கொழும்பு அணியும் தம்புள்ள அணியும் மோதுகின்றன. மறுமுனையில் தம்புள்ள, ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறுகின்ற 14ஆவது போட்டியில் கண்டி அணியும், ஜவ்னா அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன. இதுவரையில் 12 போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில், புள்ளிப்பட்டியலில் 5 போட்டிகளில் விளையாடி 4 வெற்றிகளுடன் 18 புள்ளிகளைப் பெற்றுள்ள ஜவ்னா அணி முதல் இடத்தில் காணப்படுகிறது. அதனைத் தொடர்ந்து 4 போட்டிகளில் விளையாடிய கண்டி அணி 15 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், காலி அணி 13 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், கொழும்பு அணி 9 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் காணப்படுகின்றன. இதில் தம்புள்ள அணி தாங்கள் விளையாடிய ஐந்து போட்டிகளிலும் தோல்வியைத் தழுவி புள்ளிகளின்றி இறுதி இடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# 14ஆவது ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ணம் இந்தியா வசம்; ஐந்து உலகக்கிண்ணங்களை வென்று சாதனை




14ஆவது ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து இளையோர் அணியை 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்திய இந்திய இளையோர் அணி, 5ஆவது தடவையாக இளையோர் உலகக்கிண்ணத் தொடரின் சம்பியன் பட்டத்தை வென்றது.

2022ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் கடந்த மாதம் 14ஆம் திகதி மேற்கிந்திய தீவுகளில் ஆரம்பமான நிலையில், தொடரின் சம்பியனை தீர்மானிக்கும் மாபெரும் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் ஆன்டிகுவாவில் நடைபெற்றது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி 44.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 189 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

190 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 47.4 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதன்மூலம் ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ணத் தொடரின் சம்பியனாக இந்திய இளையோர் அணி தெரிவானது.

2000, 2008, 2012, 2018 மற்றும் 2022 என 5 இளையோர் உலகக்கிண்ணங்களை வென்ற முதல் அணி என்ற சாதனையை இந்திய இளையோர் அணி படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com



# இலங்கை கிரிக்கெட்டின் முன்னாள் தலைவர் மரணம்

இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் விஜய மலலசேகர நேற்று முன்தினம் தனது 77ஆவது வயதில் காலமானார்.

விஜய மலலசேகர 2001 - 2002 காலப்பகுதியில் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவராகத் திகழ்ந்தார். விஜய மலலசேகர தலைவராக பதவி வகித்த காலத்தில் இலங்கை அணி தொடர்ந்து 10 டெஸ்ட் போட்டிகளில் வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விஜய மலலசேகர, சிலோன் டொபாக்கோ நிறுவனத்தில் 39 வருடங்கள் சேவையாற்றினார். அவர் போகலா கிராஃபைட் மற்றும் ஆசிய பருத்தி ஆலைகளின் தலைவராகவும் பணியாற்றினார். இவரின் மறைவுக்கு இலங்கை கிரிக்கெட் சபை, முன்னாள், இந்நாள் கிரிக்கெட் வீரர்கள் உள்ளிட்ட பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# தொடர்ந்தும் உயிர் போராட்டத்தில் கிறிஸ் கெய்ன்ஸ்



அவுஸ்திரேலியாவில் வசித்துவரும் நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரர் கிறிஸ் கெய்ன்ஸ் தற்போது புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். ஐந்து மாதத்துக்கு முன்பு இதய அறுவை சிகிச்சை செய்துகொண்ட அவருக்கு பக்கவாதத்தால் கால்கள் செயலிழந்தன. இதற்காக வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சைபெற்ற 51 வயதான கிறிஸ் கெய்ன்ஸ் கடந்த வாரம் வீடு திரும்பினார்.

இந்நிலையில், வழக்கமான மருத்துவப் பரிசோதனை மேற்கொண்ட கெய்ன்ஸ்க்கு குடலில் புற்றுநோய் பாதிப்பு இருப்பது தெரியவந்தது. இந்தத் தகவலை கெய்ன்ஸ் இன்ஸ்டாகிராம் மூலம் தெரிவித்துள்ளார். அதில் அடுத்தகட்ட போராட்டத்தை எதிர்நோக்கி இருப்பதாகவும் இந்த பிரச்சினை விரைவில் தீர்ந்துவிடுமென நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# முதல் தங்கத்தை வென்றது நோர்வே




24ஆவது பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான நிலையில், முதல் தங்கப்பதக்கத்தை நோர்வே வீராங்கனை தெரசி ஜோஹாக் வென்றார். 15 கிலோமீற்றர் ஸ்கியாத்லான் பந்தயத்தில் (காலில் சக்கர பலகை கட்டிக்கொண்டு ஐஸ்கட்டி பாதையில் சறுக்கியும் கம்பு ஊன்றியும் ஓடுவது) 44 நிமிடம் 13.7 விநாடிகளில் இலக்கை கடந்து நோர்வே வீராங்கனை தங்கப் பதக்கம் வென்றார்.

இந்தப் போட்டியில் ரஷ்ய வீராங்கனை நதாலியா நேப்ரியேவா வெள்ளிப்பதக்கம் பெற்றார். தங்கப்பதக்கம் வென்ற 33 வயதான தெரசி ஜோஹாக் ஊக்கமருந்து பயன்படுத்தியதால் ஒன்றரை ஆண்டு கால தடை காரணமாக 2018ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக்கில் பங்கேற்க முடியாமல்போனமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு மரதன் ஓட்டம்



(றியாஸ் இஸ்மாயில்)

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் ஏற்பாட்டில் இலங்கையின் 74ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு பிரதேச சபையின் செயலாளர் எம்.ஐ.எம். பாயிஸின் நெறிப்படுத்தலின் மூலம் பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல்.அமானுல்லா தலைமையில் மரதன் ஓட்டப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கமல் நெத்மினி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஒலுவில் வெளிச்ச வீட்டாருகில் மரதன் ஓட்டத்தை ஆரம்பித்துவைத்தார். அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் பிரதேசங்களைச் சேர்ந்த கழகங்களின் 65 வீரர்கள் கலந்துகொண்டனர்.

இதில் முதலாமிடத்தினை அட்டாளைச்சேனை பைனா விளையாட்டுக் கழக வீரர் பீ.எம்.அசாமும், இரண்டாமிடத்தினை பாலமுனை றைஸ்டார் கழக வீரர் முகம்மட் சனூசும் மூன்றாமிடத்தினை அட்டாளைச்சேனை சுப்பர் சொனிக் வீரர் சதீர் அஹமட்டும் பெற்று பிரதம மற்றும் கௌரவ அதிதிகளிடமிருந்து வெற்றிக்கிண்ணம் உட்பட பரிசுப் பொதிகளையும் பெற்றுக்கொண்டனர்.



இதன்போது முதல் 10 இடங்களைப் பெற்ற வீரர்களுக்கு கிண்ணங்கள் வழங்கப்பட்டதுடன், 11ஆவது இடம்முதல் 40ஆவது இடம்வரையும் மரதன் ஓடி முடித்த வீரர்களுக்கு அதிதிகளினால் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், கழகங்களின் தலைவர்கள் மற்றும் வீரர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மருதம் கிண்ணம் – 2021: கல்பனா விளையாட்டுக் கழகம் 41 ஓட்டங்களினால் வெற்றி!



(நூருல் ஹுதா, றாஸிக் நபாயிஸ்)

மருதமுனை மருதம் விளையாட்டுக்கழக மருதம் கிண்ணம் - 2021 இறுதிப்போட்டி மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுக் கழகத் தலைவர் ஆர்.எம்.பஸால் அமூன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மருதமுனை மருதம் விளையாட்டுக்கழகச் செயலாளர் அசன் மனாஸின் ஒருங்கமைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வெற்றிபெற்ற கழகங்களுக்கு வெற்றிக்கிண்ணங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில், கல்முனை பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி, சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் றம்ஸீன் பக்கீர், மருதமுனை மருதம் விளையாட்டுக் கழக சிரேஷ்ட ஆலோசகர் ஏ.ஆர்.அப்துல் சமீம், மருதமுனை மருதம் வி.க. நிர்வாக உறுப்பினர் ஏ.எஸ். ஹமீட் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், விசேட அதிதிகளாக ஏ.சி.ஏ. தலைவர் எம்.எம்.எம்.நுஸைர், ஆசிரியர் ஆர்.எம்.பஸ்லுன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் எம்.ஏ.சப்றாஸ் நிலாம், மென்ஸ்டார் உரிமையாளர் இஸட்.எம்.மின்ஹாஜ், மருதம் விளையாட்டுக் கழக உறுப்பினர் எம்.எஸ்.சர்ஜில், மருதம் விளையாட்டுக் கழக நிர்வாக உறுப்பினர் எம்.எம்.எம்.சிபாம், மருதம் விளையாட்டுக் கழக உறுப்பினர் என்.கஜந்த் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இறுதிப்போட்டியில் மருதமுனை அக்பர் விளையாட்டுக் கழகமும் மருதமுனை கல்பனா விளையாட்டுக் கழகமும் போட்டியிட்டு கல்பனா விளையாட்டுக் கழகம் 41 ஓட்டங்களினால் வெற்றியை தனதாக்கியது.





Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7